மேழிச்செல்வம்

மாத இதழ்

சோபகிருது

சித்திரை மலர்

சென்னை நகரக் காய்கறி விளைச்சல் போட்டி பரிசளிப்பு விழா

பொது நிறுவனங்களுக்கான போட்டியில் பரிசு பெற்ற மேரி ராணிக் கல்லூரியின் சார்பாக கல்லூரி முதல்வர் குமாரி ஐராவதி பரிசுக்கேடயம் பெறுகிறார்கள்

விலை 50 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1963-ம் ஆண்டு ஏப்ரல்-மே மீ

சென்னை நகரக் காய்கறி விளைச்சல்
* போட்டி பரிசளிப்பு தினம் *

கவர்னர் திரு விஷ்ணுராம் மேதியை வரவேற்கும் திருமதி ஏ. அந்தோணியும், திருமதி . சந்திரனும்

கவர்னர் உரையாற்றி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தல்

முதல் தொகுதியில் பரிசு பெற்ற திருமதி செளந்திரம் சங்கரன்

இரண்டாம் தொகுதியில் பரிசு பெற்ற திருமதி எம். ஜே. டேவிட்.

சென்னை கிருஸ்துவ இளம் மாதர் சங்க ஒத்துழைப்புடன் 6.4.63 அன்று நடைபெற்றது.

மேழிச் செல்வம்

1963-ம் ஆண்டு மலர்

வெற்றி வாகை சூடிடுவோம்

"பாணன்"

காலம் மாரு மழை பொழிய—சோபகிருதில்
கவலைக் கொள்ளா வாழ்வளிக்க
இயற்கை வருணன் முந்திடுவான்—சோபகிருதில்
எங்கும் இன்பம் தந்திடுவான்.

பழமை களைய பிறந்ததுவே—சோபகிருதில்
பலனை அடைய பிறந்ததுவே
இரும்பு கலப்பை மறைவதற்கே—சோபகிருதில்
இயந்திரக் கலப்பை தந்ததுவே.

பழமை யில்லா நவீன முறைகளை—சோபகிருதில்
பாரில் உழவர் கடைபிடித்தால்
எல்லா பலனையும் அடைந்திடலாம்—சோபகிருதில்
இன்பம் பெற்றே வாழ்ந்திடலாம்.

களையை நீக்க பலகருவி—சோபகிருதில்
கண்டு விதையை பொறுக்கி நட்டால்
விளைவும் மிகவும் விளைந்திடுமாம்—சோபகிருதில்
வெற்றி விழா கொண்டிடுமோம்.

சீனன் நம்மேல் பகைத்துவிட்டான்—உழவன்
சினத்தை அவன்மேல் திருப்ப விட்டான்
விளைவை பெருக்க முந்திடுவோம்—சோபகிருதில்
வெற்றி நமதென வீறுகொள்வோம்.

காடு கரம்பு மேடுபள்ளம்—சோபகிருதில்
கனிதரும் நல்ல சோலைகளாம்
வீடுகள் தோறும் இன்பம் கொள்ள—சோபகிருதில்
வெற்றி வாகை சூடிடுவோம்.



புத்தாண்டு வாழ்த்து

தமிழ்நாடு சாதாரண காலங்களில் உணவைப் பொருத்தமட்டில் தன்னிறைவு பெற்றிருக்கிறது. ஆனால் இன்றைய யுத்த நெருக்கடியில் உணவு உற்பத்தியைப் பன்மடங்கு அதிகரித்து எல்லையைக் காக்கும் நமது வீர ஜவான்களுக்கும், நாட்டு மக்களுக்கும் தேவையானவற்றை அளித்தும், எதிர் பாராத தேவைக்காகச் சேமித்து வைப்பதும் நமது முக்கிய கடமை. மேலும் நாட்டின் தொழில் வளம் பெருகத் தேவையான விவசாய மூலப் பொருள்களை வேண்டிய அளவு உற்பத்தி செய்வதும் நம் முக்கிய பணியாகும். இக்கடமைகளை நிறைவேற்ற துணை செய்வது விஞ்ஞான முறை சாகுபடியே.

அரசாங்கம் விவசாய முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தி, உழவர்களுக்கு பலவித உதவிகளும் சலுகைகளும் அளித்து வருகிறது. இவ்வசதிகளை யெல்லாம் முழுதும் பயன்படுத்தி உற்பத்திப் பெருக்க முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறையுள்ளவர்களாக ஆக வேண்டும். இவ் வலுவலில் ஈடுபட்டுள்ள அரசாங்க அபிவிருத்திப் பணியாளர்களும் உணவு உற்பத்திக்கான திருந்திய சாகுபடி முறைகளை எடுத்துக் கூறியும், செய்து காட்டியும் உணவு உற்பத்திப் பணியில் தங்கள் கடமையைச் செய்யவேண்டும். இக்கருத்தையே குறிக்கோளாகக் கொண்டு ''மேழிச்செல்வம்'' கடந்த இருபது ஆண்டுகளாக பணி புரிந்து வருகிறது. இவ்வாண்டிலும் பெருவாரியாக விவசாயப் பெருங்குடி மக்கள் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து இப்பத்திரிகையில் வெளிவரும் விஞ்ஞான விவசாய முறைகளைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டையும் செழிப்புறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கு. காமராஜ்,
முதலமைச்சர்.



புத்தாண்டு வாழ்த்து

சீன ஆக்கிரமிப்பு எந்த நிமிடமும் வரக்கூடும் என்ற பயம் இருக்கும் இந்நாட்களில் உணவை உடனடியாகப் பெருமளவில் பெருக்க வேண்டிய அவசர நிலேமை தோன்றியுள்ளது. மக்களுக்கும் ஜவான்களுக்கும் சத்துள்ள உணவளிக்க வேண்டும்.

இம்மாபெரும் முயற்சி வெற்றி பெற விஞ்ஞான ரீதியில் விவசாயம் செய்வதுடன், கால்நடை, கோழி வளர்ப்பு, கலப்புப்பண்ணே, மீன் வளர்ப்பு இவற்றிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகளுக்கு அவ்வப்போது புதிய புதிய விஞ்ஞான நுட்பங்களே எடுத்துக்கூற நமது தமிழக அரசாங்கம் " மேழிச்செல்வம் " மாத இதழை வெளியிடுகிறது. நவீன விஞ்ஞான கருத்துக் களே எளிய நடையில் எடுத்துக்கூறி இப்பத்திரிகை சாதாரண விவசாய மக்களுக்கு நல்லதொரு சேவை செய்து வருகின்றது. இருபது ஆண்டுகள் வெற்றிகரமாக பணி செய்து 21-ம் ஆண்டில் புகுகின்றது. மேழிச்செல்வம் இவ்வாண்டிலும் சீரிய முறையில் சிறப்புற பணி செய்ய நான் வாழ்த்துகின்றேன். இதற்குச் சந்தாதார்களாக இருந்து ஆர்வமும், ஊக்கமும் தரும் விவசாயப் பெருமக்களுக்கு என் புத்தாண்டு நல்வாழ்த்துக்களேத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பி. கக்கன்,

வேளாண்மைத்துறை அமைச்சர்.

புத்தாண்டு

விவசாய ஆராய்ச்சியில் நம்நாடு சிறந்த முன்னேற்றங்கண்டுள்ளது. ஆராய்ச்சி கண்டறிந்த நவீன சாகுபடி முறைகள் எளிய முறையில் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும். இச்சீரிய பணியையே கடந்த 20 ஆண்டுகளாக வேளாண்மைத்துறை வெளியிடும் "மேழிச் செல்வம்" செய்து வருகிறது. மேழிச் செல்வம் விவசாய செய்திகளை விவசாயிகள் நன்கு புரிந்துகொள்ளும் வகையில் கட்டுரைகள், கவிதைகள் மூலம் வெளியிட்டு வருகிறது. விவசாய கால்நடை அபிவிருத்திக்கென அவ்வப்போது அரசாங்கம் தீட்டும் திட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தி விவசாய பெருமக்கள் அரசாங்கம் அளிக்கும் சலுகைகள் அனைத்தையும் பயன்படுத்த மெத்தவும் உதவுகிறது. ஆதலின் விவசாயிகள் இன்னும் பெருமளவில் இதில் சந்தாதாரர்களாகச் சேர்ந்து பலன் அடைவார்கள் என்று நம்புகிறேன். தொடர்ந்து மேழிச் செல்வத்தை ஆதரித்து வரும் சந்தாதார்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் நண்பர்களையும் பெருமளவில் இப்புத்தாண்டில் சந்தாதாரர்களாக சேர்த்துப் பயனடையச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எம். பக்தவத்சலம்,

நிதி, கல்வி அமைச்சர்.

வாழ்த்துக்கள்

தமிழ்நாட்டில் விவசாயம் தொழில்களுக்கெல்லாம் அடிப்படையாக இருந்து வருகிறது. குறிப்பாக தொழிற்சாலைகளுக்கு தேவையான பருத்தி, எண்ணெய் வித்துக்கள் போன்ற விவசாய மூலப் பொருள்களின் தேவை, பெருகி வரும் ஜனத்தொகையின் தேவைக்கேற்ப அதிகரித்து வருகிறது.

ஆகவே விவசாய உற்பத்தியைக் கூடுமான வரையில் அதிகரித்து, விவசாயிகள் முன்னேற்றம் அடையவும், தேசம் எல்லாவகையிலும் சுயதேவைப் பூர்த்தியடையவும் தொடர்ந்து பாடுபட வேண்டியது மிகவும் அவசியம்.

முன்னேற்றத்திற்கு தேவையான விஞ்ஞான அறிவை விவசாயகளிடையே எளிய முறையில், விரும்பத்தக்க வகையில் "மேழிச்செல்வம்" பரப்பி வருகிறது. இப்பத்திரிகை இவ்வாண்டும் தொடர்ந்து நல்ல பணி புரிய ஆசிக்கிறேன்.

மேழிச்செல்வ சந்தாதாரர்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஆர். வெங்கட்டராமன்,

தொழில் அமைச்சர்.



புத்தாண்டு வாழ்த்து

கடந்த இருபது ஆண்டுகளாக ''மேழிச் செல்வம்'' விவசாயிகளிடையே விஞ்ஞான சாகுபடி முறைகளை யாவரும் புரிந்துகொள்ளும் வகையில் விள்க்கி எழுதும் ஒரு சிறந்த மாத வெளியீடாய் தொண்டுபுரிந்து வருவதைக் குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியுறுகிறேன். மேன்மேலும் விவசாயிகள் அதிக எண்ணிக்கைகளில் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து, கவனத்தோடு படித்துப் பயன்பெற வேண்டும்.

நாட்டின் விவசாய வளர்ச்சிக்குத் தேவையான நீர்ப்பாசன திட்டங்களில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. மேலும் வேளாண்மைத்துறையிலும் விவசாயிகளுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சலுகைகளனைத்தையும் நன்கு பயன்படுத்தி நம்நாடு வளம் பெற நாம் உறுதியுடன் உழைக்க வேண்டும்.

''மேழிச்செல்வம்'' அன்பர்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

வெ. ராமையா,

பொதுமராமத்து, வருவாய்த்துறை அமைச்சர்.

புத்தாண்டு வாழ்த்து

மேழிச்செல்வம் இருபது ஆண்டுகளாக விவசாயிகளுக்கு விஞ்ஞான அறிவு புகட்டுவதில் சிறந்த தொண்டாற்றி வருவதையறிந்து நான் பெரிதும் பெருமைப்படுகிறேன். இச்சேவையைத் தொடர்ந்து புரிந்து வர என் நல் ஆசி.

மக்கள் போதுமான உணவு பெற வேண்டும். அவ்வுணவு சத்துள்ளதாகயிருக்க வேண்டும். காய்கறி, பழவர்க்கங்கள் போன்ற சத்து மிக்க உணவுப் பயிர்களை வீட்டுப் புறக்கடைகளில் ஏராள மகாப் பயிரிட வேண்டும். இதற்கு அவசியமான நவீன முறைகளையும், சாதனைகளையும் பற்றிய விளக்கங்களை ''மேழிச்செல்வம்'' தருகிறது. இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு மனித மேம்பாட்டிற்கு விவசாயிகள் பெரிதும் உதவ கேட்டுக்கொள்கிறேன்.

என் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஜோதி வெங்கடாசலம்,

சுகாதார அமைச்சர்.

புத்தாண்டு

"மேழிச்செல்வம்" விவசாயிகளுக்குத் தேவையான விஞ்ஞான விவசாயமுறைகளையும், கால்நடை பராமரிப்பு, கோழிவளர்ப்பு போன்ற உபயோகமுள்ள செய்திகளையும் கூறுகிறது. விவசாய முன்னேற்றத்திற்காக அரசாங்கம் பல சலுகைகளை அளித்து வருகிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் பொறுக்கு வித்துக்கள், உரம், விவசாயக் கருவிகள், கால்நடை முதலியன வாங்குவதற்காக கடன் வசதியும் அளிக்கப்பட்டு வருகின்றது. இவ்வசதிகளனைத்தையும் விவசாயிகள் பலனுள்ளதாக்கிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மேழிச்செல்வம் விவசாயிகளின் வழிகாட்டியாக என்றும் விளங்க என் வாழ்த்துக்கள்.

நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார்,
கூட்டுறவு அமைச்சர்.

வாழ்த்துக்கள்

விவசாயத் துறையில் ஆராய்ச்சியாளர்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே ஓர் இணைப்புப் பாலமாக விளங்குகிறது " மேழிச்செல்வம் ". ஆராய்ச்சிகளின் முடிவை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் எளிய தெளிய நடையில் கூற வேண்டும். இப்பணியைச் சிறப்பாக மேழிச்செல்வம் கடந்த இருபது ஆண்டுகளாகச் செய்து வந்திருக்கிறது. இப்பணியைத் தொடர்ந்து புரிய வேண்டும்.

அத்தகைய " மேழிச்செல்வம் " ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திலும் இடம் பெற வேண்டும். அந்த நிலையை எய்தி வெற்றி காண " மேழிச்செல்வத்திற்கு " என் நல்வாழ்த்துக்கள்.

கோ. பூவராகன்,
செய்தித்துறை அமைச்சர்.

புத்தாண்டு வாழ்த்து

நம் நாட்டின் தலையாய பிரச்னை உணவுப் பிரச்னை. இப்பிரச்னையைத் தீர்ப்பது மக்களின் கடமையாதலால் நமது அரசாங்கம் அப்பொறுப்பை மக்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மக்கள் ஸ்தாபனமான பஞ்சாயத்திடம் ஒப்படைத்திருக்கிறது. விவசாயப் பெருமக்கள் அனைவரும் தங்கள் பூரா நிலத்திலும் விஞ்ஞான முறைப்படி சாகுபடி செய்து அமோக விளைவு காண பஞ்சாயத்துக்கள் பாடுபடவேண்டும். நவீன விவசாய முறைகளை அவ்வப்போது எளிய நடையில் எடுத்துரைத்து பணி புரிவது "மேழிச் செல்வம்" இதை பஞ்சாயத்துக்கள் அனைத்தும் ஆதரிக்க வேண்டும். அதற்கு ஏராளமான சந்தாதாரர்கள் சேர்க்க வேண்டும். இப்பத்திரிகை சிறந்த முறையில் 21-ம் ஆண்டாகிய இவ்வாண்டில் விவசாய மக்களுக்குப் பணியாற்ற ஆசி கூறுகிறேன். இப் பத்திரிகையை ஆதரித்து வந்துள்ள அன்பர்களுக்கு எனது புது வருட வாழ்த்துக்கள்.

எஸ். எம். ஏ. மஜீத்,

ஸ்தல நிர்வாக அமைச்சர்.

தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு வேண்டுகோள்

" சுபகிருது " ஆண்டு மறைந்து " சோபகிருது " ஆண்டு உதயமாகியிருக்கிறது. சென்ற வருஷத்தில் நம்நாட்டின் வடக்கெல்லையில் தோன்றிய சீன ஆக்கிரமிப்பு இன்னும் தீர்ந்தபாடில்லை. அதன் காரணமாக எழுந்த நெருக்கடி நிலைமையும் தொடர்ந்து வருகிறது. நாட்டைக் காக்க உயிரையும் பணயம் வைத்துப் போராடும் நம் வீரர்களுடைய உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், உள் நாட்டில் பெரிகி வரும் மக்கள் கூட்டத்திற்கு நியாயமான விலையில் உணவுப் பண்டங்கள் கிடைக்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்குவது மிகவும் அவசியமாகிறது. இந்த ஆண்டு (1963–64) நமது மூன்றுவது ஐந்தாண்டு திட்டத்தின் மத்திய வருஷமாகவும் அமைந்திருப்பதால், நமது முயற்சிகளும் சாதனைகளும் உயர்ந்த பட்சத்தை அடைய வேண்டியிருக்கிறது. இதுவரை கிடைப்பதற்கு அருமையாக இருந்து வந்த ரசாயன உரங்கள் இப்போது லகுவில் தாராளமாகக் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் விவசாய அபிவிருத்தியில் காட்டிவரும் உற்சாகம், நம்பிக்கை ஊட்டக்கூடியதாக அமைந்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தங்கள் கடமைகளை உணர்ந்து, அரசாங்கம் அளிக்கும் சகல சலுகைகளையும் உதவிகளையும் நன்றுகப் பயன்படுத்தி தமிழ்நாட்டின் " மேழிச் செல்வத்தை " மேலும் உயர்த்த வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.

வி. கார்த்திகேயன்,

தமிழ்நாடு விவசாயத்துறை நெறியாளர், சென்னை.

உள்ளுறை

	பக்கம்
வெற்றிவாகை சூடிடுவோம்	3
புத்தாண்டு வாழ்த்துக்கள்	4—13
காய்கறி பெருக்க முயற்சி—தனியார் நிறுவனங்களின் சிறந்த பங்கு	15
இலாபகரமாக காய்கறி பயிரிடுதல	18
சென்னையில் காய்கறி விற்பனை	20
பூசா மௌசமி	22
எண்ணெ வித்துப் பயிர்களும் கம்போடியா பருத்தியும்	24
முன்னணியில் செல்லும் தமிழ்நாட்டு தீவிர மணிலா சாகுபடி (முன்னோடித்) திட்டம்	25
எனது கரும்பு சாகுபடி குறிப்பு	27
தமிழ் நாட்டில் களர் நெல் ஆராய்ச்சி	27
திராட்சையில் உத்யான் பண்டிட்	28
பரம்பிக்குளம்—ஆழியார் திட்டம்	30
சாகுபடிப் பயிர்களும் காலநிலை மாறுதல்களும்	36
கிழக்கு இராமநாதபுரம் தென்னை அபிவிருத்தி திட்டம்	37
கொல்லி மலையில் உருளைக்கிழங்கு சாகுபடி	40
மாநில புகையிலை அபிவிருத்தி அலுவலகத்தின் சாதனைகள்	42
குறைந்த செலவில் மிகுந்த பலன்	44
வாழையில் முடிக்கொத்து நோய் ஜாக்கிரதை	48
வெற்றிலையில் காணும் பூஞ்சண நோய்கள்	49
பூச்சி மருந்துகளினால் ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் மாற்று மருந்துகள்	50
விவசாயச் செய்திக் கதிர்	52
வைகாசி—ஆனி மாத விவசாயக் குறிப்புகள்	53
உணவு உற்பத்தியில் பங்கு கொள்ள	54
கோழிப் பராமரிப்பு	56
கோவை, சேலம், வட ஆர்காடு, தென் ஆர்காடு, திருச்சி, திருநெல்வேலி, மாவட்டங்களில் வளர்ச்சி திட்டம் அரசாங்க உத்திரவு.	58
1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதக் காலநிலை அறிக்கை	59
ஆல் இந்தியா ரேடியோ—திருச்சிராப்பள்ளி	60

விளம்பரங்கள் :

வால்டாஸ்	17
ராமன்ஸ் இஞ்ஜினீயரிங்	22
கோத்தாரியின் சூப்பர் பாஸ்பேட்	23
வாட்டர் டிவைனர்	29
இன்ஸ்டன் (வெர்டிகல் பம்புகள்)	35
சங்கரநாராயணன்	39
ஏ. வி. தாமஸ்	47
பூச்சி பூசண, நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி	57—51
பாரி அண்டு கோ. —	55

மலர் 20 | சோபகிருது ஸு சித்திரை மீ —1963— ஏப்ரல்--மே | இதழ் 4

காய்கறி பெருக்க முயற்சி—தனியார் நிறுவனங்களின் சிறந்த பங்கு

(விவசாயச் செய்தி நிலையம், சென்னை.)

சென்னை கிறிஸ்துவ இளம் மாதர் சங்கத்தின் காய்கறி கண்காட்சி ஒன்றை மேன்மை தங்கிய கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் ஏப்ரல் 6-ம் தேதி திறந்து வைத்தார். இதனை யொட்டி சென்னை நகர காய்கறி அபிவிருத்திக்குழு நடத்திய காய்கறிப் பயிர்ப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு கவர்னரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கு அரிசி உணவுடன் சீரான அளவு காய்கறி, பழங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் தானிய உணவிற்கு இருக்கும் கிராக்கியை ஓரளவு குறைக்கவும், அவற்றின் விலையைக் கட்டுப்படுத்தவும் ஏதுவாகும் என்று கவர்னர் தம் உரையில் கூறினர்.

கிருஸ்துவ இளம் மாதர் சங்கத்தின் தலைவி திருமதி சந்திரன் கவர்னரை வரவேற்று காய்கறி பொருட்காட்சியை திறந்து வைக்குமாறு கேட்டுக் கொண்டார். விவசாயத் துறை நெறியாளர் திரு. வி. கார்த்திகேயன், சென்னை, கோவை, திருச்சி, திருநெல்வேலி முதலிய இடங்களில் காய்கறி உற்பத்திக்கென ஏற்படுத்தியுள்ள திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகக் கூறினர். இதுவரை 790 ஏக்கர் திருந்திய காய்கறி சாகுபடியின்கீழும், 237 ஏக்கர் புதியதாக காய்கறி சாகுபடியின்கீழும் கொண்டு வரப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

காய்கறித் தோட்டப் போட்டியில் கீழ்க்கண்டவர்களுக்கு கவர்னரால் பரிசுகள் வழங்கப்பட்டன :—

முதல் தொகுதி (100-250 சதுர அடி பரப்புள்ள காய்கறித் தோட்டங்கள்).

(1) திருமதி சௌந்தரம் சங்கரன் .. .. முதற் பரிசு.
(2) திரு. சி. சுப்ரமணியச் செட்டியார் .. .. 2-வது பரிசு.
(3) திரு. எஸ். கோபால் .. .. .. 3-வது பரிசு.

இரண்டாவது தொகுதி (250-500 சதுர அடி பரப்புள்ள தோட்டங்கள்).

(1) திருமதி எம். ஜே. டேவிட் .. .. முதற் பரிசு.
(2) திரு. வி. டி. ஆதிமூலம் .. .. 2-வது பரிசு.
(3) அமைச்சர் திரு. எஸ்.எம்.ஏ. மஜீத் .. 3-வது பரிசு.

3-வது தொகுதி (நிறுவனங்கள்.)

(1) மேரி ராணி கல்லூரி .. .. .. முதற் பரிசு

முதற் பரிசுக்கான சுழலும் கேடயம் நியூ ப்ரீமியர் பெர்டிலைசர்ஸ் கம்பெனியாரால் அளிக்கப்பட்டது.

(2) லயோலா கல்லூரி .. .. .. 2-வது பரிசு.

(3) சங்கரலிங்க நாடார் உயர்தரப் பள்ளி .. 3-வது பரிசு.

விழாவில் ஔவை இல்லம், கலாக்ஷேத்திரா மாணவிகள் கலா நிகழ்ச்சிகள் நடத்தினர். கிருஸ்துவ இளம்மாதர் சங்கக் காரியதரிசி நன்றி கூறினர். பின்னர் கவர்னர் கண்காட்சியைப் பார்வையிட்டு கிருஸ்துவ மாதர் சங்கத்தின் முயற்சியைப் பெரிதும் பாராட்டினர். வீட்டுத் தோட்டங்களினின்றும், பொது நிறுவனங்களினின்றும், காய்கறி, கீரைவகைகள், பழங்கள், ஊறுகாய், வற்றல், ஜாம், சட்னி போன்ற இதர பொருள்களும் கண்காட்சியில் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் வைக்கப்பட்டிருந்தன. இரசாயன உரங்கள், தோட்டக்கருவிகள், பூச்சி மருந்துகள் முதலியவை சம்பந்தப்பட்ட தனியார் ஸ்தாபனங்களும் கண்காட்சியில் கலந்து கொண்டன. விழா ஆரம்பிக்குமுன் கவர்னர்; ஏ. சி. சி. சாரணர் படை மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். போலீஸ் பாண்டின் தேசிய கீதத்துடன் விழா இனிது முடிவடைந்தது.

அன்று மாலை கண்காட்சியிலிருந்த சிறந்த பொருள்களுக்கு அநேக குடும்பத் தலைவிகளுக்கு விவசாயத்துறை நெறியாளர், திரு. வி. கார்த்திகேயன் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை நிகழ்ச்சிகளின் முக்கிய அம்சங்கள், ஆந்திர மஹில சபா, ஔவை இல்லம், திருவல்லிக்கேணி தேசிய உயர்தரப் பெண் பாடசாலை முதலியவைகளின் காய்கறிகளைக் குறித்த கலா நிகழ்ச்சிகளும், சிறுவர்கள் சொற் பொழிவுப் போட்டியும் ஆகும். போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

தஞ்சை விவசாயிகளுக்கு ஓர் அறிவிப்பு

—: : —

ஷாவாலஸ் கம்பெனியாரின் (Shaw Wallace & Co., Ltd., 8/9, Thambu Chetty St, Madras-1) சுற்றும் பழுது பார்க்கும் கோஷ்டி (Mobile Service Team) தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கும் மே மாதம் 27-ம் தேதி முதல் ஜூன் மாதம் 20-ம் தேதி வரை விஜயம் செய்து ஹோல்டர் ஹாரிடன் ஸ்ப்ரேயர்களை (Holder Harriden Sprayer) பழுது பார்த்துக் கொடுப்பார்கள்.

உங்கள் ஹோல்டர் ஹாரிடன் ஸ்ப்ரேயர்கள் பழுதாயிருந்தால் அதை உங்கள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு முன்பே எடுத்துச் சென்று, உங்கள் வசதிக்காக ஷாவாலஸ் கம்பெனியார் ஏற்படுத்தியிருக்கும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள்.

இதற்கு உண்டான கட்டணம் ஸ்ப்ரேயருக்கு ரூ. 3தான்.

புதிய உருப்புகள் மாற்றவேண்டியிருந்தால் அதற்குண்டான விலையை பிரத்தியேகமாகச் செலுத்த வேண்டும்.

நாட்டுக்கு உதவும் நல்ல பெண்

இன்றைய குப்பை நாளைய உரம்
குப்பையை வீணாக்காது
"கம்போஸ்ட்" செய்யுங்கள்

உங்கள் இழுவைப் பிரச்சினையைத் தீர்க்க!

வால்டாஸின் யூனிவர்ஸல் ஆட்டோ பிரேமை உபயோகியுங்கள்.



தண்ணீர் வண்டி



குப்பை வண்டி



எண்ணெய் வண்டி



டோங்கா வண்டி



மாடுகள் பூட்டி இழுக்கக்கூடிய வால்டாஸின் ஆட்டோ பிரேமைக் கொண்டு இப்பொழுது முனிசிபாலிடிகள், பஞ்சாயத்துகள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விவசாயிகள் தங்களுடைய இழுவைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும். உறுதியானதும், பிரத்தியேக உரிமை பெற்றதும் வில்போல் வளைந்த அமைப்புக் கொண்டதுமான இந்த ஆட்டோ பிரேமுடன் குப்பைத் தொட்டி, தண்ணீர்த் தொட்டி மண்ணெண்ணெய் வண்டி, டோங்கா, பாரவண்டி முதலியவைகளை இணைக்கமுடியும். உதாரணமாக பஞ்சாயத்துகள் காலைவேளைகளில் ஆட்டோ பிரேமுடன் குப்பைத்தொட்டியை இணைத்து, குப்பை அகற்றலாம். பிற்பகலில் பாரவண்டியுடன் இணைத்து நகரத்திற்கு சுமை ஏற்றிச் சென்று திரும்பலாம். மாலையில் தண்ணீர்த்தொட்டியுடன் இணைத்து ரஸ்தாக்களில் புழுதியடங்க தண்ணீர் தெளிக்கலாம்!

விபரங்களுக்கு அருகாமையில் உள்ள வால்டாஸ் அலுவலகத்திற்கு எழுதுங்கள்:

VOLTAS

வால்டாஸ் லிமிடெட்
விவசாய இயந்திரப் பகுதி
பம்பாய்-33.

கல்கத்தா . மதராஸ் . புது டெல்லி . பங்களூர் . கொச்சி . அஹமதாபாட்
செக்கந்தராபாட் . கோயம்புத்தூர் . மதுரை . நாகபுரி . பாட்ன . போபால்.

VOL-742-B TAM EVEREST

இலாபகரமாக காய்கறி பயிரிடுதல்

(ஆர். பெட்டை கௌடர், கே. எம். பி. நம்பீசன், சிவ. வெங்கடேசன், கனி ஆய்வு நிலையம், பெரியகுளம்.)

தற்பொழுதுள்ள நாட்டின் அவசர நிலையில் சத்துள்ள உணவுப் பயிர்களின் (Protective Food Crops) உற்பத்தியைப் பெருக்குவது இன்றியமையாததாகும். அவைகளில், குறுகிய காலத்தில் நிறைந்த அளவு உற்பமதி செய்யக்கூடிய காய்கறிப் பயிர்கள் முதலிடம் பெறுகின்றன. இந்தியாவில் சராசரி ஒருவருண்ணும் காய்கறியின் அளவும் மிகக் குறைவாயுள்ளதென்பது யாவருமறிந்ததொரு உண்மை. எனவே, காய்கறிப் பயிர்ச் சாகுபடியின் அளவை அதிகரிப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

இச்சமயத்தில், பெரியகுளம் கனி ஆய்வு நிலையத்தில் காய்கறிப் பயிர்ச் சாகுபடியினுல் கிடைத்த சில அநுபவங்களைக் குறிப்பிடுதல் சாலப் பொருத்தமாகும். இந்நிலையத்தில், நீண்ட காலப் பழங்களான, மா, திராட்சை, நார்த்தை வகைகள் முதலிய பயிர்களை ஆராய்ச்சிக்காகவும், காய்கறிகளில் உயர்ந்த ரக விதைகளை உற்பத்தி செய்து, அவைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வது வருமானந்தரும் பயிராகவும் பயிர் செய்யப்படுகிறது.

மேற்கூறி குறிக்கோளோடு 1961-ம் ஆண்டிலும், 1962-ம் ஆண்டிலும் ஒரு எக்கர் அளவில், தக்காளி, கத்தரி, வெண்டை, புடல், பீர்க்கு, பாகல் முதலிய காய்கறிகள் பயிர் செய்யப்பட்டன. அதிகப்படியாகக் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு, ஆவணி–மார்கழி (ஆகஸ்டு–டிசம்பர்) மாதங்களில், ஆண்டொன்றுக்கு ஒரே ஒரு பயிர் வீதம், மணல் கலந்த செவ்வல் நிலத்தில் இப்பயிர் செய்யப்பட்டது.

1. தக்காளி.—'இம்மியூன்' (Immune) ஸ்டுப்பிஸ் (Stupice) என்னும் புதிதான இரு தினுசுகளைப் பயிரிட்டோம். 'நாற்றழுகல்' நோயைத் தடுப்பதற்காக, ஒரு சத விகிதம் போர்டோக் கலவையையும், டி. டி. டீ. யையும் தெளித்து, நன்கு தயாரித்த மேடான நாற்றங்கால் பாத்திகளில், எக்கருக்கு எட்டு முதல் பத்து அவுன்சு வீதம் விதைகள் பாவப்பட்டன. நாற்றுகள் மூன்று அல்லது நான்கு வாரங்களானதும், 3′ × 2′ அளவுகள் விட்டு சிறு வரப்பும் சாலுமாக தயார் செய்யப்பட்ட தோட்டங்களில் நடப்பட்டன. மாட்டுத் தொழு எரு எக்கருக்கு முப்பது வண்டி வீதமும், சூப்பர் அறுபது பவுண்டு வீதமும் போட்டோம். பழங்களையும், தண்டுகளையும் துளைக்கும் பூச்சிகளைத் தடுக்க, நாற்றுகளுக்கு ஒரு சத விகித போர்டோக் கலவையை மூன்று தடவையும், ஐம்பது சத விகித டி. டி. டீ., பாலிடால் இவைகளை ஒவ்வாரு தடவையும் தெளித்தோம். நட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர், அமோனியம் சல்பேட் எக்கருக்கு 100 பவுண்டு வீதம் போடப்பட்டது. தேவைப்படும் போதெல்லாம் நீர் பாய்கிறோம், செடிகள் கீழே படருவதைத் தடுக்க, 'ஸ்டுப்பிஸ்' என்னும் தினுசுக்கு ஆதாரக் கொம்பு (Stakes) ஊற்றினோம். 'இம்மியூன்' என்ற தினுசு நோயாக வளருந்தன்மையுடையதால் அதற்கு இவ்விதம் செய்யத் தேவைப்படவில்லை.

2. கத்தரி.—இதிலும், எச். 129, எச். 158 என்னும் இரு தினுசுகள் பயிர் செய்யப்பட்டன. தக்காளிக்குக் கையாண்ட அதே கவனத்தோடு, நாற்றங்காலில் நாற்றுக்களை உற்பத்தி செய்து, மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குப் பிறகு அவைகளைத் தோட்டத்தில் 2′ × 2½ இடைவெளி விட்டு, சிறு வரப்புகளின் மேல் நட்டோம். தக்காளியை போலவே இவற்றிற்கும் எருவிடப்பட்டது. தண்டு துளைப்பானைத் தடுக்க டி. டி. டீ. 50 சத விகித மருந்தை பத்து நாட்களுக்கொரு தடவையாக மூன்று தடவைகள் தெளித்தோம். இரண்டு மாத காலப் பயிராக இருந்தபோது ஒருமுறை பாலிடாலும் தெளிக்கப்பட்டது. பயிரின் இறுதிக் காலத்தில் தண்டு துளைப்பான்கள் காணப்பட்டன. அவைகளால் பாதிக்கப்பட்ட கிளைகளை நீக்கி அழித்துவிட்டோம்.

3. வெண்டை.—நன்கு பலன் தரக்கூடிய 'கல்லூரிப் பழத்தோட்டம்' (College Orchard), சிவப்பு வெண்டை (Red Bhendi, H. 409) என்னும் இரு தினுசுகளைப் பயிரிட்டோம். 2 அடி அடைவெளிகளுள் சிறு வரப்புகளில் விதைக்கு விதை 1½ அடி இடைவெளி விட்டு, (எக்கருக்கு 16 முதல் 20 புவுண்டு வீதம்), குழிக்கு இரண்டு அல்லது மூன்று விதைகளை ஊன்றி, முதல் பதினைந்து நாட்களுக்கு வாரமிருமுறையும், பின்னர், வாரமொரு முறையும் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. 1962-ம் ஆண்டு, பயிர் வளர்ச்சிக் காலத்தில் தொடர்ந்து உண்டான பருவ கால நிலையினால், செடிகள் குறைந்த வளர்ச்சியிலேயே நின்றுவிட்டன. வெண்டையின் விரோதிகளிலொன்றான தத்துப் பூச்சிகளை (Jassids), பத்து நாட்களுக்கொரு முறையாக இரு தடவைகள் பாலிடாலைத் தெளித்து தடுத்து விட்டோம். தண்டு துளைப்பானுல் எவ்விதச் சேதமுமேற்படவில்லை. வைரஸால் (Virus) உண்டான 'நரம்புச் சிலந்தி' (Vein cloring) என்னும் நோய் பாதிக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி எரித்து விட்டோம். விதைகளை ஊன்று முன்னர், மாட்டுத்தொழு எரு எக்கருக்கு நாற்பது வண்டி வீதம் போடப்பட்டது. ஒரு மாத நாற்றுகளாக இருந்த போது சூப்பர் பாஸ்பேட்டை எக்கருக்கு 100 பவுண்டு வீதமும், பின்னர் அமோனியம் சல்பேட்டை பிரித்து, இரு தடவைகளாகவும் போட்டோம். தண்ணீரும், களையெடுத்தலும் தேவைப்பட்டபோதெல்லாம் கொடுக்கப்பட்டது.

4. பூசணி வகைகள் (Gourds).—புடல் (எச். 375 பீர்க்கு (எச். 160), பாகல் (எச். 273) இவைகளில் வகைக்கு ஒரு தினுசு வீதம் பயிர் செய்யப்பட்டது, எட்டு அடிக்கு

சேற்றில் தழை உரம் அமுக்க பர்மிய சட்டம் உபயோகியுங்கள்

எட்டு அடி இடைவெளி விட்டு, 3′× 3′× 3′ அளவு களுள்ள குழிகள் வெட்டி, அவைகளைப் பத்து அல்லது பன்னிரண்டு தட்டு கம்போஸ்டு அல்லது மாட்டுத் தொழு எருவோடு மண்ணையும் கலந்து நிரப்பினோம். குழிகளைச் சின்னாட்களுக்கு ஆரப்போட்ட பின்னர், குழியொன்றுக்கு ஆறு முதல், எட்டு விதைகள் ஊன்றப்பட்டன. மூன்று வாரங்களானதும், குழிக்குச் சராசரியாக மூன்று அல்லது நான்கு நாற்றுக்களை விட்டு விட்டு, மற்றவைகளைக் களைந் தெறிந்துவிட்டோம். பந்தல்களமைத்து, கொடிகளை அவற்றின்மேல் படரவிட்டோம். இதர பூசணி வகைகளை, பழத்தைத் துளைக்கும் ஈக்களினின்றும் (Fruit Flies) காப்பாற்ற, பீர்க்கையைப் பாதுகாப்புப் பயிராகப் பயிரிட்டும் டி. டி. டீ. 50 சத விகித மருந்தைத் தெளித்து பழத்தைத் தாக்கும் ஈக்களையும், மற்றும் இலைகளைத் தாக்கும் இதர பூச்சிகளையும் தடுத்துவிட்டோம். மாதத்திற்குச் சராசரி ஐந்து தடவை வீதம் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. ஒன்றரை மாதத்திற்குப் பிறகு, சூப்பர் பாஸ்பேட் குழிக்கு அரை பவுண்டு வீதமும், அமோனியம் சல்பேட் கால் பவுண்டு வீதமும் போட்டோம்.

முன்பே கூறியபடி, பயிர்கள் அனைத்தும் விதைக்காகவே விடப்பட்டன. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் இதர விபரங்களோடு, அறுவடை செய்த பழங்களின் விபரங்களையும், அப் பழங்களிலிருந்து கிடைத்த விதை களின் விபரங்களையும் காணலாம்.

பயிரிடப்பட்ட காய்கறிகளின் தினுசுகள், விஸ்தீரணம், கிடைத்த விதைக் காய்கள், விதைகள், விதைக்குக் கிடைத்த விலை முதலியன காட்டும் அட்டவணை.

பயிரின் பெயரும் பயிரிடப்பட்ட தினுசும்.	விஸ்தீரணம் (ஏக்கரில்). (ஆகஸ்டு-டிசம்பர்).		கிடைத்த விதைக்காய்கள் (கிலோவில்).		விதைக்காய்களிலிருந்து கிடைத்த விதைகள் (கிலோ வில்).		விதைகளுக்குக் கிடைத்த விலை (ரூபாயில்).	
	1961	1962	1961	1962	1961	1962	1961	1962
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
தக்காளி.—								
(அ) ஸ்டுப்பிஸ்	0·16	0·16	261·600	302·000	0·734	1 900	54·96	164·30
(ஆ) இம்மியூன்			41 500	253·000	0·303	1·200		
கத்தரி.—								
(அ) எச். 129	0·17	0·17	170·000	316 300	3·033	7·300	329·70	658·24
(ஆ) எச். 158			263·000	314·000	6·664	12·060		
வெண்டை.—								
(அ) கல்லூரிப் பழத் தோட்டம்	0·44	0·44	119·500	54·350	26·789	20·600	801·46	351·40
(ஆ) சிவப்பு (எச். 409)			183·000	16·000	30·458	4 500		
பூசணி வகைகள்.—								
(அ) பாகல் (எச். 279)	0·23	0·23	339·500	64·500	12.900	3·000	653·40	688·23
(ஆ) புடல் (எச். 375)			22·500	249 000	2·750	5·240		
(இ) பீர்க்கு (எச் 160)			24·500	105·000	8.550	17·250		
			சராசரி வருமானம் ரூ.	1850.85		மொத்தம் ரூ.	1,839·52	1,862·17
						மொத்த செலவு ரூ.	600·00	600·00
			நிகர இலாபம் (சராசரி) ரூ.	1250·85		நிகர இலாபம் ரூ.	1,239·52	1,262·17

இந்நிலையத்தில் கிடைத்த அநுபவத்தைக் கொண்டு, நிறைந்த நீர்ப்பாசன வசதியுள்ள பழத்தோட்டக்காரர் களுக்கு, சிறந்த வருமானந்தரும் பயிராகக் காய்கறிகளைப் பயிரிடுமாறு சிபாரிசு செய்யலாம். இம்மாகாணத்தில், பாசன வசதிகளோடு நீண்ட காலம் பலன்தரும் பழ மரங்களைப் பயிரிடக்கூடிய பழத்தோட்டங்கள் பெருவாரியாக வுள்ளன. அப் பண்ணைகளில் கிடைக்கும் அதிகப்படியான தண்ணீருடன், கலப்பு எரு, ஓய்வுகால வேலையாள் முதலிய வசதிகளைப் பயன்படுத்தி, இலாபகரமான முறையில் காய் கறிகளைப் பயிரிடலாம். ஊடு பயிராகப் பயிரிட்டால் பழ மரங் களுக்கும், இடைவெளிகளில் பயிரிடும் காய்கறிகளுக்கும் செய்யக்கூடிய உழவும், களையெடுத்தலும் ஒன்றேயாதலால், காய்கறிப் பயிரிடுவதற்கான செலவு மேலும் குறையும். இச் செலவு, மரத்தின் வயது, பழ மரங்கள் தரும் நிழல், நிலத்தின் அளவு, கிடைக்கும் நீர் மேலும் பலவற்றையும் பொருத்ததேயாகும்.

—(:)—

நிலக்கடலைக்கு உரமிட்டு மகசூலை அதிகரித்து அன்னிய செலாவணிபெற உதவுங்கள்

சென்னையில் காய்கறி விற்பனை

[க. ஸ்ரீராமன், Bsc. (Ag.) Msc., மாநில விற்பனை அலுவலர்.]

சென்னை நகரின் ஜனத்தொகை 17 லட்சம். இவர்களுக்கு அன்றாடம் சுமார் 200 டன் காய்கறிகள் தேவை. காய்கறிகள் விரைவில் கெட்டு விடுவதால் அன்றாடம் அவற்றை வரவழைத்து விற்கவேண்டும். இந்தப் பெரும்பணி எவ்வாறு நடக்கிறது ?

சென்னையில் காய்கறிகள் மொத்தமாக விற்கப்படும் இடம் கொத்தவால் பஜார். இங்கிருந்தே சென்னை நகரிலுள்ள 56 பிராந்திய மார்க்கட்டுகளுக்கு பெரும்பாலும் காய்கறிகள் எடுத்துச் செல்லப்படுகிறது. இந்தக் கொத்தவால் பஜாரிலும், அதற்கு அருகாமையிலுள்ள மலையப் பெருமாள் தெருவிலும் சுமார் 46 கமிஷன் மண்டிகள் இருக்கின்றன. லாரிகளில் 300 மைல் தூரத்திலுள்ள இடங்களிலிருந்தும் காலை 2 மணி முதல் காய் கறிகள் உதிரியாகவும், கூடைகளிலும், கோணிகளிலும் வந்து குவிகின்றன. எல்லா சரக்குகளையும் கமிஷன் மண்டிகள் மூலம் விற்கிறார்கள். இவர்கள் சொந்தமாகவும், சுமார் 100-க்கு குறையாமலுள்ள பெரிய வியாபாரிகள் மூலமாகவும் எல்லா காய்கறிகளையும் காலை 6 மணிக்குள் நகரின் நாலாப் புரத்திலிருந்து வரும் 2,000 சில்லறை வியாபாரிகளுக்கு விற்று விடுகிறார்கள். சில்லறை வியாபாரிகள் இவைகளை சென்னை நகரிலுள்ள பல்வேறு காய்கறி மார்க்கட்டுகளுக்கு எடுத்துச் சென்று விற்கிறார்கள்.

அண்மையிலுள்ள அடையார், போரூர், கோடம்பாக்கம் முதலிய இடங்களில் பயிர்ஆகும் கொஞ்சம் காய்கறி, கீரை வகைகள் நேராகவே ஆங்காங்குள்ள மார்க்கட்டுகளுக்கு வந்துசேரும். லாரியில் வரும் காய்கறிகளின் விலை தூரத்திற்கேற்றுற்போல் கூடுதலாகிறது. அன்றாடம் வரும் காய்கறிகளின் விலை முந்தின நாள் விற்ற விலையைப் பொறுத்தும், விற்பனைக்கு வந்த காய்கறிக் குவியலையும், செலவாணியைக் கணக்கிட்டும் தகுந்த விலையை கமிஷன் மண்டிகள் நிர்மாணிக்கின்றன. எல்லா மண்டிகளிலும் ஒரே விலையில்தான் விற்பனையாகும்.

சென்னையின் சுற்றுப் புரத்திலுள்ள 30 மைல் தூரத்தில் பயிராகும் காய்கறிகள் 15 சதவிகிதமேயாகும். மற்றவை வெகு தூரத்திலிருந்து 300 மைல்களுக்கு அப்பாற்பட்டும் வருகின்றன. இவ்வளவு தூரங்களிலிருந்து வருவதால் வாங்குபவர் கொடுக்கும் ரூபாயில் பாதிக்கும் குறைவாகத்தான் பயிர் செய்யும் குடியானவருக்குக் கிடைக்கின்றது. மற்றது வியாபாரிகளுக்கு கமிஷனுகவும், லாபமாகவும் (25—30 சதவீதம்), போக்குவரத்து செலவிற்கும் (5—20 சதவீதம்), சேதத்திற்கும் (2—10 சதவீதம்) ஈடுபடுத்தப்படுகிறது. வெவ்வேறு காய்கறிகள் பல இடங்களிலிருந்து குறிப்பிட்ட சில காலங்களில் வருகின்றன. இவை வரும் காலமும், அளவும் பின்குறித்துள்ள அட்டவணையில் காணலாம்.

சமீபத்தில் காய்கறிகளின் விலை ஏறிக்கொண்டே இருந்தது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இவைகளின் விலைகள் சர்க்காரால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. சில்லறை வியாபாரிகள் மொத்த விலைக்கு 20 சதம் மேற்செல்லாமல் ஊதியத்தை பெறவேண்டும் என்றும் நிர்ணயித்துள்ளார்கள். தினசரிப் பத்திரிகைகளில் கொத்தவால் சாவடி காய்கறி விலைகளை பிரசுரிக்கிறார்கள். தினசரி ரேடியோவின் மூலமாகவும் விலைவாசிகள் அறிவிக்கப்படுகின்றன. ஆங்காங்கு சென்னையிலுள்ள காய்கறி மார்க்கட்டுகளில் கரும்பலகையில் அன்றாட விலை வாசிகளை எழுதுகிறார்கள். இவையல்லாமல் காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக தனிச் சிப்பந்திகளை சென்னை விவசாய இலாகா நியமித்துள்ளது. நீங்கள் எல்லோரும் உங்கள் வீட்டுப் பின் புறங்களில் இவ்விலாகாவின் அலுவலர்களின் உதவியைக் கொண்டு லாபகரமாக, குறைந்த செலவில் உங்களுக்குத் தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்யலாம்.

அட்டவணை.

பருவ வாரியாக சென்னை நகருக்கு வரும் காய்கறி வகைகளின் விநியோகம்.

வரிசை எண். (1)	காய்கறிகளின் பெயர். (2)	எங்கிருந்து சென்னைக்கு அனுப்புதல். (3)	எம் மாதங்களில் அவைகள் அனுப்பப்படுகின்றன. (4)	அன்றாட தோராயமான வருகைக் கணக்கு. (5) (கிலோ)
(1)	கத்தரிக்காய் (ரெயில்)	மேட்டூர், குளத்தூர், ஆத்தூர் (சேலம்), புடபாடி, கோவை.	ஆகஸ்டு முதல் பிப்ரவரி.	25,000
(2)	கத்தரிக்காய் (நாட்டுக்காய்)	ஜோலார்பேட், ஊத்துக்குளி, கோடம்பாக்கம், பூந்தமல்லி, ஆத்தூர் (செங்கல்பட்டு).	ஆண்டு முழுவதும் எப்ரல், மே, ஜூன். எப்ரல், மே.	5,000 10,000

வரிசை எண். (1)	காய்கறிகளின் பெயர். (2)	எங்கிருந்து சென்னைக்கு அனுப்புதல். (3)	எம் மாதங்களில் அவைகள் அனுப்பப்படுகின்றன. (4)	அன்றுட தோராயமான வருகைக் கணக்கு. (5) கிலோ
(3)	தக்காளி ..	திண்டுக்கல்,	மேயிலிருந்து பிப்ரவரி	30,000
		ஜோலாரபேட்,	ஜூலையிலிருந்து பிப்ரவரி	5,000
		ஆம்பூர்,	ஜூலையிலிருந்து பிப்ரவரி	5,000
		பெங்களூர்.	மார்ச்சிலிருந்து ஏப்ரல்	10,000
			மற்றைய மாதங்களில்.	1,500
(4)	பச்சை மிளகாய் ..	முடனூர், கொண்டபுரம், தாட்பதி.	ஜூலை முதல் பிப்ரவரி	12,000
		பூந்தமல்லி, கோடம்பாக்கம்,	மார்ச் முதல் ஏப்ரல்	2,500
		ஓட்டன் சத்திரம்.	மே முதல் ஜூன்.	2,500
(5)	கொத்தவரை ..	பெருந்துறை.	ஆகஸ்ட், செப்டம்பர் நீங்கலாக மற்றைய மாதங்கள்.	1,500
(6)	வெண்டைக்காய் ..	திருக்கழிக்குன்றம்	மார்ச், ஏப்ரல், மே.	500
		போரூர், பூந்தமல்லி.	ஆண்டு முழுவதும்.	200
(7)	பாகற்காய் ..	கோடம்பாக்கம்.	நவம்பர், டிசம்பர், ஜனவரி, ஏப்ரல் மே, ஜூன்.	400
(8)	புடலங்காய் ..	திருப்போரூர், போலவாக்கம்.	நவம்பர் முதல் ஜனவரி, ஏப்ரல் முதல் ஜூன்.	2,500 (எண்கள்.)
(9)	பூசணிக்காய் ..	கோடம்பாக்கம்	நவம்பர் முதல் ஜனவரி.	300 முதல் 400 (எண்கள்.)
(10)	வாழைக்காய் ..	ஈரோடு, கும்பகோணம்.	பிப்ரவரி முதல் அக்டோபர்.	10,000 (எண்கள்.)
		ஆண்டாள் குப்பம், பெருவாயல்.	செப்டம்பர் முதல் ஜனவரி.	10,000 (எண்கள்.)
(11)	அவரை (கொடி) ..	ஜோலார்பேட், குப்பம்,	டிசம்பர் முதல் ஜனவரி	5,000
		கோடம்பாக்கம்.	ஜனவரி.	500
(12)	பெல்லாரி வெங்காயம்.	பூனா, கடப்பை, டாப்பட்ரி, யூப்ளி.	ஆகஸ்ட் முதல் ஏப்ரல்	40,000
		பெங்களூர், திண்டுக்கல்.	மார்ச் முதல் ஜூன்.	
(13)	சம்பார் வெங்காயம்.	சாத்தூர், திருச்சி, திண்டுக்கல்.	ஆண்டு முழுவதும்.	10,000
(14)	கருணைக்கிழங்கு ..	பாலக்காடு, சிவகாசி, ஈரோடு.	மே முதல் ஆகஸ்ட், ஜூலை முதல் ஏப்ரல்.	5,000
(15)	சேப்பங்கிழங்கு ..	வாலாஜா, ராணிப்பேட்.	அக்டோபர் முதல் ஜனவரி.	5,000
(16)	உருளைக்கிழங்கு ..	பூனா, உத்திரப்பிரதேசம், பஞ்சாப்.	பெங்களூர், மேட்டுப் பாளையம் இடங்களில் கிடைக்காதபோது.	10,000
		மேட்டுப்பாளையம், பெங்களூர்.	ஆண்டு முழுவதும் அக்டோபர் முதல் பிப்ரவரி.	
(17)	முட்டைகோஸ் ..	உதகை, பெங்களூர்.	மே, ஜூன் மாதங்களைத் தவிர மற்றைய மாதங்களில்.	3,000
		மேலூர்.	ஜூன முதல் ஜூலை.	
(18)	சிவப்பு முள்ளங்கி ..	பெங்களூர், உதகை.	அக்டோபர் முதல் நவம்பர் நவம்பர் முதல் டிசம்பர்.	3,500
(19)	சீமை மொச்சை ..	வாணியம்பாடி, குடியாத்தம், மேலூர், பெங்களூர்.	ஏப்ரல் முதல் அக்டோபர்.	9,000
(20)	சௌ-சௌ ..	திருச்சி, கோடைக்கானல்	அக்டோபர் முதல் நவம்பர், டிசம்பர்.	60,000 (எண்கள்.)
		பெங்களூர், மேலூர்.	ஜனவரி முதல் அக்டோபர்.	30,000 (எண்கள்.)

பூசா மௌச்மி

(வி. சீனிவாசன், சி. கெ. ராஜகோபாலன், பருப்புவகை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை-3.)

நாட்டில் காய்கறிச் சாகுபடி மிகவும் அதிகரிக்கவேண்டிய இச்சமயத்தில் உயர்தரமான கொத்தவரை 'பூசா மௌச்மி' யைப் பற்றி சிறிது கூற விரும்புகிறோம்.

எந்தப் பருவத்திலும், நீர்ப்பாசனவசதி இருந்தால் சுலபமாக சாகுபடி செய்யக்கூடிய இது ஒரு 90 நாள் பயிர். இதன் செடிகள் நெட்டையாக வளராமல் சிறிது படர்ந்து வளருகிறது. சுவையும், சத்தும், மிருதுத்தன்மையும் உடைய இதன் காய்கள் 9 அங்குலத்திற்குக் குறையாத நீளமுள்ளவை. இது ஏக்கருக்கு 3,000 பவுண்டு காய்கள் தரக்கூடியது.

மணற்பாங்கான நிலங்களில் இது நன்கு செழித்து வளரும். நிலத்தை நன்றாக உழுது ஏக்கருக்கு 10 டன் வீதம் 'கம்போஸ்ட்' எரு போட்டு பண்படுத்தவேண்டும். இடைவெளி இரண்டடி விட்டு வரப்புக்கள் பிடித்து அதன் ஓர் ஓரத்தில் 9" இடைவெளியில் விதை ஊன்றி நீர் பாய்ச்சவேண்டும். பாத்திகளிலும் இதைப்போல் விதைக்கலாம். விதைகள் முளைத்து வெளிவந்ததும் ஒரு முறை நீர் பாய்ச்சவேண்டும். பின்னால் வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதும். விதைத்து 15 நாட்களில் களைகள் கொத்தி எடுக்கவேண்டும். முப்பதாவது நாளில் செடிகள் பூக்கத்துடங்கும். 45-ஆம் நாளிலிருந்து சமையலுக்கு காய்கள் அறுக்க ஆரம்பிக்கலாம்.

விவசாய ஆராய்ச்சியின் விளைவான இதை விவசாயத்தில் ஆர்வம் உள்ளவர்கள் கவனிக்கவேண்டும்.

ராமன்ஸ் இன்ஜினீரிங் ஒர்க்ஸ்
ஆபீஸ் : 2/27, பிராட்வே, சென்னை-1.
Show Room & Workshop : 98, வால்டாக்ஸ் ரோடு (வுட்வார்ப்), கொண்டித்தோப்பு, சென்னை-1.
தந்தி : 'VENPALCO' போன் : 24558



(அரசாங்க அங்கீகாரம் பெற்றது.)

எல்லா நூதன விவசாயக் கருவிகளும், சேடை கலக்கும் கருவி, தழை மிதிக் கருவி, கடப்பாரை, விதை முளைப்புத் தொட்டி, கவலைச் சால், வெல்லக் கொப்பரை முதலியவைகள் நயமான விலைக்குக் கிடைக்கும்.

தயாரிப்பாளர் :

ராமன்ஸ் இன்ஜினீரிங் ஒர்க்ஸ்,
2/27, பிராட்வே, சென்னை-1.
கிளை : 36, ஆசூரித் தெரு, திருவள்ளூர்.

உங்கள் நில வளம் பெருகவும்
பயிர்கள் செழிக்கவும் உதவுகிறது

கோத்தாரியின் ஸூப்பர்பாஸ்பேட்

பயிர்களின் நல் வளர்ச்சிக்கு பாஸ்பேட் சத்து மிகவும் தேவை. கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸூப்பர்பாஸ்பேட்டில் இந்த தாவர உணவு நிரம்பியுள்ளது. அது வேர்களுக்கு பலத்தை அளித்து, பயிர்களின் வளர்ச்சியை துரிதப்படுத்தி, மகசூலைப் பெருக்குகிறது. ஒரு ஏகரா நிலத்திற்கு 100 கிலோ உரம் போதுமானது. நவீன சாகுபடி முறையில் அதிக லாபம் அடைவதற்கு இது சிறந்த வழி.

கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸூப்பர்பாஸ்பேட், சிதறிக் கொட்டாதபடி, பலமான மிஷின் தையல் போட்ட மூட்டைகளில் கிடைக்கிறது

கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸூப்பர்பாஸ்பேட் மற்றும் கலப்பு உரங்கள் உபயோகித்து உங்கள் நில வளத்தைப் பன்மடங்கு பெருக்குங்கள்.

KS
KOTHARI & SONS

தயாரிப்பாளர்கள் :
ப்ளூ மவுண்டன் எஸ்டேட்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ஓரியண்டல் பில்டிங்ஸ், அரமனைக்காரத் தெரு, மதருஸ்-1.

JWT/KS/BM/1953

எண்ணெய்வித்துப் பயிர்களும் கம்போடியா பருத்தியும்

எஸ். கமலநாதன் ; பி. என். கிருஷ்ணசாமி, கோவை.

நிலக்கடலை, எள் போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களுடன் கம்போடியா பருத்தியைக் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்வது சிறந்ததொரு வழக்கம். தனிப் பயிரைக் காட்டிலும் இக்கலப்புச் சாகுபடியினால் அதிக இலாபம் கிடைக்கிறது. இருந்தும், சில இடங்களில் எண்ணெய்வித்துப் பயிர்களுடன் கம்போடியா பருத்தியைக் கலப்பாக விதைப்பதில்லை. காரணம் "எண்ணெயும் திரியும் ஒன்று சேராது" என்று கூறுகிறார்கள். வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை, எள்ளுடன் கம்போடியா பருத்தியைக் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்வது சாதாரண வழக்கம். அங்குள்ள விவசாயிகள் இக்கலப்புச் சாகுபடியினால் அதிக இலாபம் பெறுகிறார்கள். மற்றவர்களும் இம்முறையைப் பின்பற்றி வருமானத்தைப் பெருக்கிக் கொள்வது நல்லது.

1. **நிலக்கடலையுடன் பருத்தி.**—நிலக்கடலை மானாவாரிப் பயிராக ஆனி, ஆடி மாதங்களிலும், இறவைப் பயிராகத் தை, மாசி மாதங்களிலும் பயிரிடப்படுகிறது.

(அ) **மானாவாரிப் பயிர்.**—நிலக்கடலையை ஏர்க்கால்களில் விதைப்பது வழக்கம். கலப்பாகச் சாகுபடி செய்யும் முறையில், நிலக்கடலையையும், உகாண்டா முதலாம் நெம்பர் (எம்.சி.யு. 1) பருத்தியையும் 8 : 1 விகிதத்தில் சால் சாலாக ஏர்க்கால்களில் விதைக்கவும், மற்றும் நிலக்கடலையை விதைத்த உடன் மூன்று அல்லது நான்கு அடி இடைவெளி விட்டு குறுக்கில் ஏரோட்டி ஏர்க்கால்களில் பருத்தியை விதைக்கலாம்.

முதல் களையின்போது வேண்டாத பருத்திச் செடிகளைக் களைத்து விடவும், மழையைக் கொண்டே நிலக்கடலையும் பருத்தியும் வளரும். நிலக்கடலை அறுவடையானதும், பருத்திக்கு மண் அணைத்து பூச்சிப் புழுக்களிலிருந்து பாதுகாக்கவும். அவ்வப்போது பெய்யும் மழையைக் கொண்டே பருத்திப் பயிர் வளர்ந்து பலன் தரும். இக் கலப்புச் சாகுபடி முறையில் ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 50 ரூபாய் அதிக இலாபம் கிடைக்கிறது.

(ஆ) **இறவைப் பயிர்.**—நன்செய் நிலங்களில் கிணறு வசதி உள்ள இடங்களில் நெல் அறுவடையானதும் பதமான ஈரத்தில் தாளடியின் ஊடே நிலக்கடலையை ஊன்றிவிடுவதும் வழக்கம். முதல் களை எடுக்கும்போது நிலத்தை நன்றாகக் கொத்தி நெல் தாளடியை அப்புறப் படுத்துவார்கள். உடனே 3 அடிக்கு 3 அடி (3′ × 3′) இடைவெளிவிட்டு உகாண்டா இரண்டாம் நெம்பர் (எம்.சி.யு. 2) அல்லது பஞ்சாப் 216 எப் பருத்தி விதைகளைத் தூருக்கு மூன்று அல்லது நான்கு வீதம் ஊன்றி நீர்ப்பாய்ச்சவும். நேரமும் வசதியும் இருந்தால், நிலத்தை நன்றாக உழுது, நிலக்கடலையை ஏர்க்கால்களில் விதைப்பதும் உண்டு. இச்சாகுபடி முறையில் முதல் களை எடுத்தவுடன் பருத்தி விதைகளை ஊன்றி நீர்பாய்ச்சவும். பருத்திப் பயிர் ஒரு சாண் உயரம் வளர்ந்ததும், தூருக்கு ஒரு செடி விட்டு மீதமுள்ள செடிகளைக் களைத்து விடவும். நிலக்கடலை அறுவடை முடிந்ததும், ஏகராவிற்கு 100 ராத்தல் வீதம் அம்மோனியம் சல்பேட் உரம் வைத்து, பருத்திச் செடிகளுக்கு மண் அணைத்து நீர்ப்பாய்ச்சி வரவும். வேண்டும்போது பருத்திப் பயிருக்குப் பூச்சிப் புழுக்கள் நோய்களிலிருந்து பாதுகாக்க மருந்தடிக்கவும். வைகாசி, ஆனி மாதங்களில் பருத்தி வெடிக்க ஆரம்பிக்கும். ஆடி, ஆவணி மாதங்களில் பருத்தி வெடித்து ஓய்ந்துவிடும். செடிகளை உழுது அப்புறப்படுத்திவிடவும். இம்முறையில் ஏகராவிற்குச் சுமார் ரூபாய் 80 அதிக இலாபம் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது.

தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் கிணற்றுப் பாசனமுள்ள தோட்டக்கால்களில், நிலக்கடலையை இறைவைப் பயிராக தை, மாசி மாதங்களில் பயிரிடுவது வழக்கம். நிலக்கடலையை விதைத்த உடன் பாத்திகள் ஏற்படுத்தி வாய்க்கால் மஞ்சிகளில் உகாண்டா இரண்டாம் நெம்பர் (எம்.சி.யு. 2) பருத்தி விதைகளை ஊன்றி நீர்பாய்ச்சவும். பருத்திக்கென்று தனியாகப் பின்செய் நேர்த்தி முறைகள் செய்யத் தேவையில்லை. பூச்சிப் புழுக்கள், நோய்களிலிருந்துப் பருத்திப் பயிரைப் பாதுகாத்தால் மட்டும் போதுமானது. நிலக்கடலை அறுவடையானதும் கம்பு விதைத்துவிடவும். கம்பு அறுவடையாவதற்கும் பருத்திப் பயிர் வெடித்து ஓய்வதற்கும் சரியாக இருக்கும். இம் முறையில் மூன்று பயிர்கள் சாகுபடி செய்ய முடிகிறது. ஏக்கருக்குச் சுமார் 40 ரூபாய் அதிக இலாபம் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டு இருக்கிறது.

2. **எள்ளும் பருத்தியும்.**—தென் ஆற்காடு மாவட்டத்தில் புன்செய் நிலங்களில், மானாவாரி மணிலாக் கொட்டை அறுவடையானதும் பெய்யும் மழையின் உதவியைக் கொண்டு எள்ளையும் உகாண்டா இரண்டாம் நெம்பர் (எம்.சி.யு. 2) பருத்திவிதையையும் கலந்து விதைப்பது வழக்கம். எள்ளைக் கைவிதைப்பாக விதைத்த உடன் பருத்தி விதைகளை மூன்று அடி இடைவெளிவிட்டு சால் சாலாக ஏர்க்கால்களில் விதைத்துவிடவும். இக் கலப்புப் பயிர் அவ்வப்போது பெய்யும் மழையில் வளரும். பருத்திப் பயிர் ஒரு சாண் உயரம் வளர்ந்ததும் ஒரு அடி இடைவெளிவிட்டு வேண்டாத செடிகளைக் களைத்து விடவும். எள் அறுவடையானதும், நிலத்தை மண்

(26-ம் பக்கம் பார்க்கவும்)

முன்னணியில் செல்லும் தமிழ் நாட்டு தீவிர மணிலா சாகுபடி (முன்னேடி) திட்டம்

(T. K. சங்கரசுப்பிரமணியம் B.Sc., Ag.)

நம் நாட்டில் உத்திரப் பிரதேசம், குஜராத்தையடுத்து தமிழ்நாடு மணிலா உற்பத்தியில் 3-வது இடம் வகிக்கிறது. தமிழ் நாட்டில் சுமார் 20 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் 10 லட்சம் டன் மணிலா உற்பத்தி செய்யப்படுகிறது. அன்னியச் செலாவணியை அள்ளித் தரும் மணிலா உற்பத்தியை 3 வது திட்ட கால இறுதியில் 12·66 லட்சம் டன்களுக்கு அதிகரிக்கும் குறிக்கோளுடன் "எண்ணெய் வித்து அபிவிருத்தி திட்டம்" செயலாக்கப்பட்டது. உற்பத்தியை மேலும் பெருக்கும் எண்ணத்துடன் எண்ணெய் வித்துக் குழுவின் முழு நிதி உதவியுடன் "தீவிர மணிலா சாகுபடி (முன்னேடி) திட்டம்" அமுலாக்கப் பட்டுள்ளது.

இந்த முன்னேடித் திட்டம் 1962–63 முதல் 1965–66 வரை நான்கு வருடங்களுக்கு ஒரு (பிராஜக்ட் ஆபீசர்) தீவிர சாகுபடித் திட்ட அலுவலரின் கீழ் செயல்படுத்தப் படும். இத்திட்டம் பண்ணுருட்டி, குறிஞ்சிப்பாடி வட்டத்திலும், கடலூர் வட்டாரத்தில் கடலூர் பகுதியிலும் சுமார் 20,000 ஏக்கர் மணிலா சாகுபடி நிலத்திற்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் முதல் ஆண்டு 1,250 டன்களும், இரண்டாவது ஆண்டு 2,500 டன்களும், மூன்றும் ஆண்டு 3,750 டன்களும், நான்காம் ஆண்டு 5,000 டன்களுமாக மணிலா உற்பத்தியை அதிகரிக்கும் உயரிய குறிக்கோளோடு செயல்படுத்தப்படுகிறது. மேற்படி பயனடையும் 20,000 ஏக்கர் நிலப்பரப்பில் 6,000 ஏக்கர்கள் இறைவையாகவும் மற்றவை மானவாரியாகவும் பயிர் செய்யப்படுகிறது.

இத்திட்டம் ஆராய்ச்சியின் அடிப்படையில் திருந்திய மணிலா சாகுபடி அம்சங்களை சிபாரிசு செய்கிறது. விவசாயிகளுக்கு இதற்கான வசதிகள் அனைத்தும் திட்டத்தின் மூலம் ஒருங்கே அளிக்கப்படுகிறது.

திட்டம் அளிக்கும் வசதிகள்

1. விரைவில் சுலபமாக கடனுதவி கிடைக்கிறது.

2. பொறுக்கு விதை, கலப்பு உரம், பூச்சி பூஞ்சண மருந்துகள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயியின் கிராமத்திலேயே கொடுக்கப்படுகிறது.

3. பொறுக்கு விதைகள் மணங்கிற்கு ரூ. 3 (மான்யம்) தள்ளுபடி செய்து விநியோகிக்கப்படுகிறது.

4. விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதை மார்கெட் நிலவர விலையோடு 20 சத விகிதம் அதிகப் பணம் கொடுத்து இலாகாவில் வாங்கப்படுகிறது.

5. பூச்சி பூஞ்சண மருந்துகள் அரை விலையில் சகாயமாகக் கொடுக்கப்படுகிறது.

6. டஸ்டர்களும், ஸ்ப்ரேயர்களும் விவசாயக் கிடங்குகளிலிருந்தும் மற்ற பகுதிகளிலிருந்தும் விரைவாக கொண்டுவந்து கொடுக்கப்படுகிறது.

7. வருடா வருடம் ரூபாய் 1,000 செலவில் 20 மணிலா செயல் விளக்கங்கள் போட்டுக் காண்பிக்கப்படுகிறது.

8. இந்த திட்டத்தில் கலந்து கொள்ளும் விவசாயிகள் அனைவருக்கும் தீவிர சாகுபடி முறையில் பயிற்சி பெற வாய்ப்பு இருக்கிறது.

இறைவைப் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 150 வீதமும் மானவாரி பயிருக்கு ரூ. 100 வீதமும் ஒரு நபருக்கு அதிகப்படியாக ரூ. 1,000 வரை கடனாக நபர் ஜாமீன் பேரிலேயே கூட்டுறவு சங்கங்கள் மூலமாய் விரைவில் கொடுக்கப்படும். மேலும் இந்தக் கடனுதவியில் 90 சத விகிதம், பொறுக்கு விதை, கலப்பு உரம், பூச்சி மருந்துகளாக ஒவ்வொரு விவசாயிக்கும் கிராமத்திலேயே வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

திட்டக் கடனுதவி விபரம்

	இறைவை மணிலா.	மானவாரி மணிலா.
	ரூ.	ரூ.
விதை	55	55
உரம்	60	30
பூச்சி பூஞ்சண மருந்துகள்	5	5
ரொக்கம்	30	10
மொத்தம்	150	100

பண்ணை உற்பத்தி திட்டம்

இந்த திட்ட பகுதிகளில் உள்ள ஒவ்வொரு பண்ணைக்கும் ஒரு மணிலா சாகுபடித் திட்டம் தீட்டுவதே இதன் அடிப்படை நோக்கமாகும். இத்திட்டத்திற்கென தனியாக நியமிக்கப்பட்டுள்ள புறப்பணியாளர்கள் ஒவ்வொரு பண்ணையையும் பார்வையிட்டு, அந்த பண்ணையில் உள்ள இறைவை, மானவாரிப் பயிர்களுக்கு ஏற்ற நிலங்கள், அவற்றின் கடந்த கால விளைச்சல் இவற்றை உற்று நோக்கி, மேற்படிப் பண்ணையில் வெற்றிகரமாக சாகுபடி செய்யக் கூடிய வகையில் திட்டத்திற்கு வேண்டிய பரப்பளவை நிர்ணயிப்பர். இதற்கு ஏற்றவாறு கடனாகக் கொடுக்கவேண்டிய பொறுக்கு விதை, உரம், பூச்சி மருந்து, ரொக்கம் ஆகியவற்றை இதற்கென உள்ள நமூனுவில் ஒரு திட்டமாகத் தீட்டுவர். மேற்படித் திட்ட நகல்கள் எண்ணெய் வித்து அபிவிருத்தி உதவியாளர்களாலும், பிராஜக்ட் ஆபீசராலும் தணிக்கை செய்யப்படு

கிறது. பின் இத்திட்டம் மத்திய கூட்டுறவு பாங்கிற்கு அனுப்பப்படுகிறது. பாங்கு மேற்படி திட்டத்தில் சிபாரிசு செய்யப்படும் விவசாயியின் தகுதியையும் பெருமானத்தையும் உற்று நோக்கி நபர் ஜாமீன் பேரிலேயே கடனுதவி அளிக்கிறது. இந்தக் கடனுதவியை கிராமக் கூட்டுறவு நாணய சங்கங்கள் பொறுக்கு விதையாகவும் உரமாகவும், பூச்சி மருந்தாகவும், ரொக்கமாகவும் திட்டத்தில் கண்டபடி விநியோகம் செய்கின்றன. கூட்டுறவு சங்கங்களுக்கு பொறுக்கு விதைகளும், பூச்சி பூஞ்சண மருந்துகளும் விவசாயக் கிடங்கிலிருந்து விநியோகிக்கப்படுகிறது. உரங்கள், அனுமதி பெற்ற கம்பெனிகளிலிருந்து விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. மேற்படி வசதிகள் விவசாயிகளால் பயன்படுத்தப்படுகின்றனவா என திட்ட ஊழியர்கள் பார்வையிட்டு விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகளையும் பயிர்ப் பாதுகாப்பு உதவிகளையும் செய்து அளித்துவருகின்றனர்.

சிபாரிசு செய்யப்படும் திருந்திய சாகுபடி அம்சங்கள்

1. **பொறுக்கு விதைகள்.**—திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில கண்டுபிடிக்கப்பட்ட இறைவை ரகங்களான டி. எம். வி. 2, டி. எம். வி. 4 மணிலா விதைகளும், மானவாரி ரகங்களான டி. எம். வி. 1, டி. எம். வி. 3 விதைகளும் சிபாரிசு செய்யப்படுகின்றன. இந்த பொறுக்கு விதைகளை உபயோகிப்பதால் மட்டும் மானவாரிச் சாகுபடியில் 150 ராத்தலும் இறைவை சாகுபடியில் 200 முதல் 250 ராத்தலும் அதிக மகசூல் கிடைக்கிறது.

2. **உரமிடல்.**—தழைச் சத்தும் (நைட்ரஜன்) தானியச் சத்தும் (பாஸ்பரஸ்), சாம்பல் சத்தும் கலந்த உரமிட்டால், மணிலா அவற்றை ஏற்று நன்கு விளைகிறது. தழைச்சத்து 6%, தானிய சத்து 12%, சாம்பல் சத்து 6% கொண்ட கலப்பு உரம் நெ. 4 இறைவைப் பயிருக்கு 300 ராத்தல், மானவாரி பயிருக்கு 150 ராத்தல் என்ற அளவில் உரமிட்டால் ஏக்கருக்கு முறையே 200 முதல் 250 ராத்தலும 100 முதல் 150 ராத்தலும அதிக மகசூல் கிடைப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

3. **பயிர்ப் பாதுகாப்பு.**—மணிலாவில் பூச்சி பூஞ்சண நோய்களால் 25%முதல் 50% விளைச்சல் பாதிக்கப்படுகிறது. சிவப்புக் கம்பளிப் பூச்சி, சுருள் பூச்சி, அசுவுணி போன்ற பூச்சிகளும் புள்ளி நோய்களும் இந்தப் பகுதியில் சாதாரணமாகக் காணப்படுகிறது. இவற்றைத் தடுக்க உடனடியாக தகுதி வாய்ந்த பூச்சி மருந்துகள் தெளிப்பதுடன், தடுப்பு முறையாக நோய்த் தடுப்பு மருந்துகளை எச்சரிக்கையாக விதைகளிலும் இளஞ் செடிகளிலும் தெளிக்கப்படுகிறது.

4. **திருந்திய விவசாய முறை.**—வரிசையில் விதைத்தல், காலத்தில் விதைத்தல், களை எடுத்தல், முதிர்ந்த பின் அறுவடை செய்தல், காய வைத்தல், சுத்தம் செய்தல் ஆகிய நல்ல விவசாய முறைகளைக் கடைபிடிக்க விவசாயிகளுக்கு வசதி அளிக்கப்படுகிறது.

1962—63-க்கான திட்ட வேலைகள்.—இத்திட்டத்தில் 1962–63-ல் 3,000 ஏக்கருக்கு பொறுக்கு விதைகள் வழங்கவும், 1,500 ஏக்கர் இறைவை பயிருக்கு உரமிடவும், 3,000 ஏக்கர் மானவாரி பயிருக்கு உரமிடவும், 2,000 ஏக்கரில் பயிர்ப் பாதுகாப்பு வேலைகள் செய்யவும் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. மேலும் மணிலா 105 நாள் வயதுடையதாக இருப்பதால் இரு நீண்டகால பயிர்களுக்கு இடையே உள்ள இடைக்காலத்தில் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்து சுமார் 200 ஏக்கர் பரப்பில் பயிர் செய்யவும் வரகு, சாமை போன்ற குறைந்த வருமானப் பயிர்களுக்கு பதில் மணிலா சாகுபடியை சுமார் 400 ஏக்கர்களில் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யவும் திட்டம் வழி செய்கிறது.

இந்த திட்டத்தில் 3·75 லட்ச ரூபாய் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக குறைந்த காலக் கடனுகக் கொடுக்கப்படும். முதலாண்டில் 1,250 டன் மணிலா அதிக உற்பத்தி கிடைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தினுல் ஏற்பட்ட பெரும் வெற்றியை வழிகாட்டியாகக் கொண்டு நமது மாநில அரசாங்கம் 1963–64-ல் கோவை மாவட்ட ஆனை மலை வட்டாரம், வட ஆற்காடு மாவட்ட சாத்தனூர் நீர்த் தேக்கப் பகுதி ஆகிய இரண்டு பகுதிகளிலும் 1964–65-ல் மேலும் இரண்டு பகுதிகளிலும் ஒரு பகுதிக்கு 20,000 ஏக்கர் விஸ்தரிக்க அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(24-ம் பக்கம் தொடர்ச்சி)

வெட்டியால் கொத்தி, பருத்தி செடிகளுக்கு மண் அணைத்துவிடவும். பருத்திப் பயிர் மழையைக் கொண்டே வளர்ந்து பலன் தரும். தனிப் பயிரான எள்ளைக் காட்டிலும் இம்முறையில் ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 60 ரூபாய் அதிக இலாபம் கிடைக்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

3. **பருத்தியும் ஆமணக்கும்.**—அமெரிக்கன் பருத்தி பயிரிடப்படும் தோட்டங்களில் வரப்பைச் சுற்றி ஆமணக்கை விதைப்பதால் நல்ல ஆதாயம் உண்டு. இதற்குத் திண்டிவனம் 3-ம் நெம்பர் ஆமணக்குச் சிறந்தது. மூன்று அல்லது நான்கு அடி இடைவெளிவிட்டு வரப்பைச் சுற்றி ஆமணக்கு விதைகளை ஊன்றிவிடவும். பருத்திக்குப் பாயும் தண்ணீரின் ஈரத்தைக்கொண்டே இவை வளரும். நன்கு செழித்து வளர்ந்த ஆமணக்குச் செடிகளிலிருந்து ஏக்கருக்குச் சுமார் 60 ரூபாய் இலாபம் கிடைக்கிறது.

நீர்வளம், நிலவளம், சாகுபடி முறை, தப்பவெப்ப நிலை இவற்றை அனுசரித்து மேலே கூறிய முறைகளைப் பின்பற்றி எண்ணெய் வித்துக்களையும் கம்போடியா பருத்தியையும் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்து அதிக இலாபம் பெறுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பழச் செடிகள் நிறையப் பயிரிட்டு மக்கள் சத்துள்ள உணவு பெற உதவுங்கள்

எனது கரும்பு சாகுபடி குறிப்பு

S. M. ஹாஜிமுகம்மது இஸ்மாயில், பொதக்குடி கிராமம், தஞ்சை மாவட்டம்.

(இவர் 1961-62-ம் ஆண்டு மாநில கரும்பு விளைச்சல் போட்டியில் பரிசு பெற்றவர்)

பயிர் தினுசு கோ. 419 நடவு பயிர்.

சாகுபடி குறிப்பு—நிலத்தை இரண்டு முறை டிராக்டரினால் நன்கு ஆழமாக உழவு செய்து, பிறகு சட்டி கலப்பை (Disc Harrow)யினால் கட்டிகள் உடைக்கப் பட்டது. ஒரு மாத காலத்திற்கு மண் காற்றுாப் போடப்பட்டது. 3'4" இடை வெளியில் பார்பிடிக்கப் பட்டது. வயலின் ஓரங்களில் இரண்டு அடி அகலம், இரண்டு அடி ஆழமுள்ள வடிகால்கள் வெட்டப்பட்டன. வயலிற்குள் பார்களுக்குக் குறுக்காக 30 அடி இடை வெளிக்கு ஒன்றாக வடிகால்கள் வெட்டப்பட்டன.

விதைக்கரணைகளும், நடவும்.—பூச்சி பூஞ்சணங்களால் பாதிக்கப்படாத நல்ல வளமுள்ள நாற்றங்காலில் இருந்து தயாரிக்கப்பட்ட மூன்று பருவுள்ள கோ. 419 கரணைகள் ஏக்கருக்கு 18,000 வீதம் அரிடான் மருந்து கலக்கப்பட்ட தண்ணீரில் துவைக்கப்பட்ட பின்னர் படைச்சாலில் நடவு செய்யப்பட்டது.

உரமிடுதல்.—மூன்று முறை உரமிடப்பட்டது. முதல் உரம் 45-வது நாளில் களை கொத்தி விட்ட பின்னர் 448 ராத்தல் அமோனியம் சல்பேட்டும், 480 ராத்தல் கடலை புண்ணுக்கும் கலந்து வைக்கப்பட்டது. பின்னர் 80-வது நாளில் 224 ராத்தல் சல்பேட்டும் 320 ராத்தல் கடலை புண்ணுக்கும் கலந்து வைக்கப்பட்டது. 105-வது நாளில் 245 பவுண்டு யூரியா மட்டும் வைக்கப்பட்டு மண் அணைக்கப் பட்டது. தழைச்சத்து அளவு 260 பவுண்டு.

நீர்ப்பாசனம்.—நட்ட உடன் ஒரு முறை நீர் பாய்ச்சப் பட்டது. பிறகு 10 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சப்பட்டது. வெயில் காலங்களில் குளத்து நீரை இன்ஜின் மூலம் இறைத்து நீர்ப்பாய்ச்சப்பட்டது. வேனிற் காலங்களில் 7 முறை தண்ணீர் பாய்ச்சப்பட்டது.

பின் செய் நேர்த்தி.—நட்ட 35-வது நாளில் களைக் கொத்தினால் களை நீக்கப்பட்டது. பின்னர் 45-வது நாள் உரமிட்டு இலேசாக மண் அணைக்கப்பட்டது. பின்னர் 80-வது நாள் மீண்டும் உரமிட்டு கொஞ்சம் அதிகமாக மண் அணைக்கப்பட்டது. பின்னர் 100-வது நாள் உரமிட்டு கனமாக மண் அணைக்கப்பட்டது. 6-வது மாதம் தண்ணீர் தேங்காமல் இருக்க வடிகால்களை சுத்தமாகி ஆழமாக்கப்பட்டது. 7½-வது மாதம் தூர்களை சுத்தம் செய்து சோகைகளை கொண்டு சாயாமல் இருக்க விட்டம் கட்டப்பட்டது.

அறுவடை.—பயிர் 12-வது மாத முடிவில் அறுவடை செய்யப்பட்டது. பார் மட்டத்திற்கு சுத்தமாக வெட்டப் பட்டது. ஒரு ஏக்கருக்கு கிடைத்த மகசூல் 109 டன் 741 கி. கிராம்.

தமிழ்நாட்டில் களர்நெல் ஆராய்ச்சி

[எஸ். டி. சீனிவாசன், பி.எஸ்ஸி. (எஜி.), உதவி நெல்வித்து நிபுணர், பேராவூரணி.]

கல்சர் 10022, 10034, என்பவை எஸ்.ஆர். 26 பி.யைப் போல் களரை எதிர்க்கும் சக்தி பெற்றவை. இளம் பழுப்பு நிற சன்னமான அரிசியுடையவை. எஸ். ஆர். 26 பி.-யை விட வியாபாரத் துறையில் பெரிதும் விரும்பப்படக்கூடியவை. சுமார் 10 சதம் அதிக மகசூல் கொடுக்கக்கூடியவை. இயந்திர அறைவையில் உடைந்து சேதாரமடையாதவை. ஆடிப்பட்ட விதைப்பில் சுமார் 145—150 நாட்களில் அறுவடைக்கு வருபவை. பிந்திய விதைப்புகளில் குறைவான வயதிலும் அறுவடைக்கு வரும். தமிழ் நாட்டில் சகல சூழ்நிலைகளுக்கும் ஏற்றவை.

தமிழ்நாட்டில் 59 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடியாகிறது. இதில் சுமார் 2 லட்சம் ஏக்கர் களராகவோ உவராகவோ இருக்கிறது. தற்பொழுது களர் நிலங்களில் பயிராகி வரும் நெல் ரகங்கள் குறைந்த மகசூலையே கொடுக்கின்றன. களர் தன்மையைத் தாங்கும் எஸ். ஆர். 26 பி. என்ற ரகம் மாநிலம் முழுவதற்கும் ஏற்றதாகக் காணப்படவில்லை. அதன் நீண்ட மூட்டு ரக நெல்லும் வியாபாரத் துறையில் விரும்பப்படுவதில்லை. இக் குறைகளை நீக்க இது சம்பந்தமான ஆராய்ச்சி கோவையில் துவங்கப்பட்டு தஞ்சை மாவட்டத்திலுள்ள பேராவூரணி நெல் ஆராய்ச்சி நிலயத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. சென்னை, கேரளம், பம்பாய், வங்காளம், ஒரிசா, ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்தும், இன்னும் சிலோன், ஆப்பிரிக்கா, கெனியா, பிரேசில், பெரு, எகிப்து போன்ற இதர நாடுகளிலிருந்தும் வரவழைக்கப்பட்டுள்ள 114 உவர் நெல் ரகங்களுடன் உயர்தரக் களர் தினுசுகளான எஸ். ஆர். 26 பி., தெல்ல தொக்க வட்லு, பெருவட்லு, குதிர், பூர்தடியான் போன்ற ரகங்களை ஒட்டுச் சேர்த்து ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட 4,000 சந்ததிகளுள், 10022 10034 என்பவை களர் உவர் நிலங்களுக்கு ஏற்ற சிறந்த ரகங்கள். இவற்றில் ஒன்றை பொறுக்கு விதையாக வெளிவிட ஏற்பாடாகிவருகிறது.

திராட்சையில் "உத்யான் பண்டிட்"

1962-ம் வருட மாநிலப் போட்டி

[கே. கே. அனந்த நாராயணன், பி எஸ்ஸி. (விவசாயம்), டி. ஐ. எச்., உதவி தோட்டக் கலைஞர்,
(பழ அபிவிருத்தித் திட்டம்), கோயம்பத்தூர்–2]

நம் நாட்டில் பழ அபிவிருத்தி செய்ய மக்களுக்கு உற்சாக மூட்டுவதற்காக இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், புது டில்லி, சிறந்த மா, ஆப்பில், ஆரஞ்சு வகைகள், வாழை, திராட்சை முதலியனவற்றைப் பயிரிடுவோருக்கு "உத்யான் பண்டிட்" என்ற பட்டத்தை கொடுக்க போட்டி எற்படுத்த தீர்மானித்தது. அந்த கழகத்தின் திட்டத் திற்கேற்ப திராட்சை போட்டி நம் மாநிலத்தில் 1962-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

திராட்சையை அதிக அளவில் சாகுபடி செய்ய நம் மாநிலத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டும், மேலும் அகில இந்திய போட்டியில் நல்ல ஒரு சாதனையை அடையும் பொருட்டுமே இப்போட்டி நடத்தப்பட்டது. இதில் மொத்தம் 29 போட்டியாளர்கள் சேலம், திருச்சி, கோயம்புத்தூர் மதுரை மாவட்டங்களில் இருந்து கலந்து கொண்டார்கள்.

இதற்கென நியமிக்கப்பட்ட தீர்ப்புக்குழு 62-ம் வருடம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் தோட்டங்களைப் பார்வையிட்டது. குறிப்பாக, தோட்டத்தின் அமைப்பு, மண்வளம், பாதுகாப்பு முறை, அமைப்புத் திட்டம், மொத்த நிலப் பரப்பில் ஒவ்வொரு செடியிலும் எவ்வளவு வருமானம் வருகிறது. பழத்தின் தரம் அதாவது பழத்தின் அளவு, நிறம், திராட்சை, பழத்தின் ருசி, மணம், பழத்தின் அமைப்பு, பழத்தின் கவர்ச்சி, ஒரே காலத்தில் பழுக்கும் தன்மை, உரமிடுதல், சாகுபடி செய்தல், பாசன முறை, கவாத்து முறை, ஊடுபயிர் முதலியவைகளையும் ஆராய்ந்தனர். மேலும், பயிர்ப் பாதுகாப்பு முறைகள், பழத் தோட்டத்தின் துப்புரவு முதலியவற்றை ஆராய்ந்து சாகுபடி செய்வதிலும் தாங்கள் உற்பத்தி செய்தவற்றை விற்பனை செய்வதிலும் போட்டியாளர்கள் எவ்வளவு கவனம் செலுத்துகிருர்கள் என்பதையும் ஆராய்ந்தார்கள்.

கீழ்க்கண்ட நான்கு திராட்சை தோட்டங்கள் முறையே சிறந்ததென போட்டியில் தீர்ப்பளிக்கப்பட்டது. பரிசு பெற்றவர்களது சாதனைகள் சுருக்கமாக கீழே கூறப் பட்டிருக்கிறது.

முதற் பரிசு

திரு. தில்லே கோவிந்தன், பட்டிவீரன்பட்டி,
மதுரை ஜில்லா.

இவரை சென்னை மாகாண திராட்சை சாகுபடி தொழிலுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் கடந்த இரண்டு மாநில திராட்சைக் கண்காட்சிகளில் பரிசுகள் பெற்றிருக்கிருர். அவர் உற்சாகம் எல்லாம் திராட்சை உற்பத்தியை பெருக்குவதற்கான ஆராய்சியிலும் பழத்தின் அளவு, ருசி, அதன் தரம் முதலியவற்றை உயர்த்துவதிலும் உள்ளது. அந்த முறைகளை அவர் நன்கு அறிவார். முப்பது முதல் நாற்பது சதவிகிதம் வரை திராட்சைக் கொத்துகளில் உள்ள அடர்த்தியை குறைத்து பழத்தின் பருமன், நிறம் முதலியவற்றை அபிவிருத்தி செய்துவருகிருர். மேலும் பானைகளில் அடைத்து அனுப்பும் முறைக்கு எதிராக கூடைகளில் "பாலிதீன்" பைகளில் நிரப்பி ஆஸ்திரேலியா முதலிய இடங்களுக்கு அனுப்பி வைத்தார். மேலும், மரப்பெட்டிகளில் காகிதங்களிடையே திராட்சைக் குலைகளை சேதம் ஏற்படாமல் அனுப்ப முயலுகிருர்.



காண்கிரிட்கால் பந்தலில் நன்ருக வளர்ந்த அனப்-இ-ஷாஹி.
திரு. பாலகிருஷ்ணன் அவர்களேயும் காணலாம்.

கலப்புப் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குங்கள்

இரண்டாவது பரிசு

1. திரு. பாலகிருஷ்ணன், கோயம்புத்தூர்.

திராட்சை சாகுபடியில் இவரது திறமை இத்தொழிலுக்கு இவர் புதிய வரல்ல என்பதைக் காட்டுகிறது. இவர் சாகுபடி செய்து சொந்த அனுபவத்தில் சில உண்மைகளை அறியலாம் என நம்புகிறார். சுமார் ஏழு ஏக்கர் நிலத்தில் திராட்சையை பந்தல் முறையில் பயிரிடுகிறார் அதற்குப் பெரும்பாலும "கான்கிரீட" கம்பங்களை உபயோகிக்கிறார்.



2. திரு. குமாரசாமி, ஈரோடு.

திராட்சை சாகுபடியில் இவருடைய வெற்றி இவருடைய கடின உழைப்புத் தன்மையையும், கவனத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இவர் அனு -இ-ஷாஹியைப் பயிரிட்டு முதன் முறையே நல்ல பலனை அடைந்திருக்கிறார். விஞ்ஞான முறைகளையும், திருந்திய முறைகளையும் கையாண்டு வெற்றியடைந்துள்ளார்.

மூன்றுவது பரிசு

திரு. ஜனார்த்தனம், காவேரிப்பட்டினம் (சேலம் ஜில்லா).

இவர் நம்பிக்கையுள்ள சிறந்த பழச்சாகுபடியாளர். இத் தொழிலைச் செய்வதில் இவர் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார். திராட்சை சாகுபடியில் பங்குகொள்ள முற்பட்டு வெற்றியும் பெறுவதற்காக பல திருந்திய முறைகளை திம்மாபுரம் மாதிரி பழப் பண்ணையினின்றும் அறிந்துகொண்டார். இவர் கல்தூணும், கம்பிகளும் கொண்ட பந்தல் அமைத்துள்ளார்.

முதற் பரிசு	.. ரூ. 500	
இரண்டாம் பரிசு	.. ரூ. 100	(வெற்றி பெற்ற ஒவ்வொருவருக்கும் தனித் தனியே.)
மூன்றாவது பரிசு	.. ரூ. 100	

1963 செப்டம்பர்-அக்டோபரில் நடக்கவிருக்கும் அகில இந்திய "உத்யான் பண்டிட்" போட்டியில் இந் நால்வரும் கலந்து கொள்வார்கள்.

தமிழ் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

WATER DIVINER

28ஆண்டு அனுபவமுள்ள தண்ணீர் ஊற்று கண்டுபிடிக்கும் நிபுணர்

மேன்மை தங்கிய சென்னை கவர்னர், திருவாங்கூர் மஹாராஜா, தென் பிராந்திய மிலிடரி தளபதி, P.W.D., C.P.W.D., முற்போக்குள்ள தொழிலதிபர்கள், விவசாயிகள் மற்றும் பலராலும் ஆதரிக்கப்பட்டவர். **கிணறுகள் வெட்ட ஊற்றுள்ளதும், பாறையற்றதுமான இடம் கண்டுபிடித்துக் கொடுக்கப்படும். பழைய கிணறுகள் அடி வெட்டு வெட்டினல் அல்லது போரிங் போட்டால் பிரயோஜனப் படுமா, படாதா என்றும் ஆலோசனை கூறப்படும்.**

தயவு செய்து விசாரிக்கவும்:

N. சாம்பசிவன்,
வாட்டர் டிவைனர்,
"ஸ்ரீரமண வில்லா",
41, கச்சேரி ரோட்,
மைலாப்பூர் :: மதருஸ்-4.
[டெலிபோன்: 73762]

சென்னை மாநில காட்டு இலாகா பிரதம அதிகாரி (Chief Conservator of Forest) கொடுத்த நற்சாட்சிப் பத்திரம்:

வாட்டர் டிவைனர் **ஸ்ரீ சாம்பசிவன்,** கிண்டியில் கவர்னர் பங்களாவுக்கு அருகாமையில் அமைந்துள்ள (பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களால் திறந்துவைக்கப்பட்ட) குழந்தைகள் விளையாடும் நந்தவனத்தில் (Children's Park) போரிங் போட இடம் குறிப்பிட்டுக் கொடுத்தார். அந்த இடத்தில் குழாய் கிணறு இறக்கியதில் அவர் தெரிவித்தபடியே திருப்தியடையும்படிக்கான அளவு தண்ணீர் கிடைத்து வருகிறது. இந்த குழாய் கிணறு மூலம் இவ்விதம் தண்ணீர் கிடைதிருக்காவிட்டால் குழந்தைகளது நந்தவனத்தை அபிவிருத்தி செய்திருக்கமுடியாது. மதிப்பிட முடியாத இவ்வரிய சேவைக்கு ஸ்ரீ சாம்பசிவனுக்கு, சென்னை காட்டு இலாகா, நன்றி தெரிவிக்க மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

(ஒப்பம்) C. A. R. பத்திரன், I.F.S.,
Chief Conservator of Forest, Madras, 31-8-61.

குறிப்பு:—மேற்படி நந்தவனத்தில் அநேகம் குழாய் கிணறுகள் 500 அடி வரை இறக்கியும் தண்ணீர் கிடைக்கவில்லை. நான் குறிப்பிட்ட இடத்தில் 90 அடியில் நல்ல ஊற்றுக கிடைத்திருக்கிறது.

பரம்பிக்குளம்–ஆழியார் திட்டம்

[எஸ். விநாயகம், பி.எஸ்ஸி. (ஏஜி.), தனி மாவட்ட வேளாண்மை அலுவலர், பரம்பிகுளம்—ஆழியார் திட்டம், பொள்ளாச்சி.]

செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற திருவள்ளுவர் பொன்மொழிக்கு இலக்கியமாகத் திகழ்பவர் தமிழ் நாட்டு மக்கள். 'கங்கையிற் சிறந்த காவிரி' என்று புலவர் பாடும் புகழ் பெற்ற பொய்யாப் பொன்னி நதியின் குறுக்கே, கல்லாலும் களிமண்ணாலும் சுண்ணாம்பாலும், பேரணை கட்டிப் பெரும்புகழ் நிறுவினான் கரிகாற் பெருவளத்தான் என்னும் தமிழ்ச் சோழன். அந்தப் பொன்னி வளங்கொழிக்கும் தஞ்சை மாவட்டத்திலும், மேலும் காவிரியின் இருகரையிலும், நீர்ப்பாசனத்தினால் செல்வம் மல்கிப் பெருக, மேட்டூர், கீழ்பவானி அணைகளைக் கட்டிய பெருமை நம் தமிழ் நாட்டில் தற்போதுள்ள தலைமுறையைச் சாரும். இன்னும் அவர்கள் தமிழ்நாட்டில் பெண்ணையாறு முதல் பொருனையாறு வரை பல பல பெரிய, சிறிய ஆறுகளிலும் நீர்த்தேக்கங்களிலும் நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்து வளம் பெருக்கும் தொழிலை மேற்கொண்டு வெற்றிகரமாக முடித்துள்ளனர். 'காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கும்' முடிமரபுக் கேற்ப, நம் தமிழ்நாட்டு அரசாங்கம், மழையை நம்பி மானவாரிப் பயிர்களை நம்பி வாடிவதங்கும் குடியானவர்கட்கு, நிச்சயமான விளைவை நல்கும் திடமான பாசன வசதிகளைத் தரவல்ல திட்டங்கள் பலவற்றையும், ஆராய்ந்து பார்த்து ஒரு மகத்தான திட்டம், சற்பனை வளமும், காரிய வெற்றியும், கணிசமான செலவும் கொண்டதோர் திட்டம்—ஒன்றை கண்டது. முனைந்து செயல்படவும் தொடங்கிற்று. அதுவே பரம்பிக்குளம்–ஆழியார் பாசனத் திட்டம் என்ற பல நோக்குத் திட்டம்.

தமிழ் நாட்டில், ஆற்றுப் பாய்ச்சல் அற்ற பெரும் நிலப் பகுதிகளுள் ஒன்று கோவை ஜில்லாவின் தென்மேற்கு தென்கிழக்குப் பகுதிகளான பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, பல்லடம், தாராபுரம் தாலுகாக்கள் ஆகும். ஆனைமலைத் தொடரின் அடிப்பாகத்தில் கிழக்குப் பகுதியில் மழை மறைவுப் பகுதியில் இந்தப் பரந்த புன்செய்ச் சமவெளிகள் விரிந்து கிடக்கின்றன. இந்நான்கு தாலுகாக்களுள், பொள்ளாச்சியின் பெரும் பகுதிக்கு மட்டும், தென்மேற்கு பருவக்காற்றால் மழை சற்று அதிகமாகவும் (32 அங்குலம்) காலத்தால் சீக்கிரமாகவும் பெய்கிறது. இதனால் மணிலாகொட்டை முன் பட்டத்தில் சாகுபடிக்கு வருகிறது. வடக்கும் கிழக்கும் பரந்து கிடக்கும் உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் தாலுகாக்களுக்கு வடகிழக்குப் பருவக் காற்றால் மட்டும் 20—25 அங்குலம் மழை கிடைக்கிறது. பல ஆண்டுகளில் காலந்தவறியும், அளவு கூடியும், அறவே பெய்யாமலும் பொய்த்துப் போகிறது. அங்கு ஆண்டுக்கு ஒரே மானவாரிப் பயிராக, முக்கியமாகச் சோளமும், பருத்தியும், சில்லரை தானிய ராசிகளுமே விளைவிக்கப்படுகின்றன. இத்தகைய எளிய வேளாண்மை காரணமாகவும், தொழில்வளம் இல்லாத குறையாலும் மக்கள் வாழ்க்கைத் தரமும் குறைந்து, வறுமையால் வாடுகின்றனர். இப் புன்செய் நில மக்களுக்கு, அருகிலேயே மேற்குமலைத் தொடர்ச்சியில் பெய்யும் பெருமழைகளின் பெருநிலத்தைப் பயன்படுத்தி சுபிட்ச வாழ்வளிக்க தமிழ்நாட்டு அரசாங்கம், கேரள-தமிழ் மாகாணங்கள் இரண்டிலும் பாய்ந்து செல்லும் பொதுநீர்வளத்தைப் பயன்படுத்தும் ஆலோசனையில் தலைப்பட்டனர். இதன் பயனாக 1958-ம் ஆண்டு பரம்பிக்குளம்—ஆழியார் திட்டத்தின் வேலைகள் தொடங்கப்பட்டன. மூன்றாவது திட்டமுடிவில் பூர்த்தியடையும்.

திட்டத்தின் விவரங்கள்.—ஆனைமலையின் மேற்குச் சரிவில் செல்லும் பெரிய ஆறு பாம்பிக்குளம் ஆறு. கிழக்குச் சரிவில் இறங்கும் பெரிய ஆறு ஆழியாறு. இவ்விரண்டு ஆறுகளையும் மேற்கிலிருந்து கிழக்குப் பக்கம் வரும்படி ஒன்றோடொன்று இணைத்து கிடைக்கும் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதே இந்தத் திட்ட நோக்கம். இந்த இரண்டு ஆறுகளை இணைக்கும் பொழுது, பல உபநதிகளின் குறுக்கிலும் அணைகள் கட்டி, அதிக நீரைப் பெற்று, மலைச்சரிவுகளுக்கு அடியே சுரங்க வழி அமைத்து ஆங்காங்கு நீர் மின்சக்தி நிலையங்கள் கட்டி, மின்சாரம் உற்பத்தி செய்வதும் இதன் உபபயன்களாகும்.

கோவை மாவட்டத்தின் தென்மேற்கில், கேரளத்தையும் தமிழ்நாட்டையும் பிரிப்பது ஆனைமலை. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி. இதன் உயரம் 2000—8000 அடி வரை உள்ளது. இம்மலைச் சாரல்களிலும் முகட்டிலும் ஆண்டொன்றுக்குச் சராசரி 150—210 அங்குலம் மழை பெய்கிறது. இங்கு பல ஜீவ நதிகள் உற்பத்தியாகி மலையின் இருபுறங்களிலும் பாய்ந்து, பல சிற்றாறுகளையும் காட்டாறுகளையும் உபநதிகளாக்கிக்கொண்டு மேற்கே அரபிக்கடலை நோக்கியும் கிழக்கே கோவை மாவட்டச் சமவெளிகளை நோக்கியும், பாய்கின்றன. கிழக்கே தமிழ் நாட்டினுள் பாயும் நதிகள் ஆழியாறு, அமராவதி, பாலாறு, உப்பாறு என்பன. மேற்கே கேரள நாட்டின் வழியாகப் பாய்ந்து பெரும்பாலும் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படாமல் அரபிக்கடலில் விழும் நதிகள் பரம்பிக்குளம் ஆறு, சோலையாறு, துனக்கடவு ஆறு, தேக்கடியாறு, நீராறு என்பன. இத்திட்டத்தை மேற்கு மலை சரிவுப் பகுதி, கிழக்கு மலைச்சரிவுப் பகுதி என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

உற்பத்தியைப் பெருக்கி விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்

I. ஆனைமலை மேற்குச் சரிவுப் பகுதி

1. **நீராறு அணை.**—கடல் மட்டத்திற்கு மேல் 3,760 அடி உயரத்தில் இந் நதியின் குறுக்கே 538 அடி நீளம் உள்ள ஓர் அணை கருங்கல்லால் கட்டப்படும. இங்கு தேங்கும் தண்ணீர், இதன்கீழே உள்ள சோலையாறு மலைச் சாரலுக்கு 11,500 அடி நீளமுள்ள மலைக்குடைவுச் சுரங்கப்பாதை வழியாக இறங்குகிறது.

2. **சோலையார் அணை.**—இது 3,300 அடி உயரத்தில் சோலையாற்றின் குறுக்கே, 2,150 அடி நீளம் கல் கட்டடமாகவும் இருபுறமும் 2,500 அடி நீளம் வரை மண் அணையாகவும் கட்டபடும். இவ்வணையின் உயரம் 319 அடி. கேரள இராஜ்யத்தார் ஏற்கெனவே இவ்வாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டத் தொடங்கி, நீர் மின்சார நிலையமும் நிர்மாணித்து வருகின்றனர். இவர்கட்கு உரிமையான நீரைப் போகவிட்டு வைத்து, மீதியுள்ள தண்ணீரைத் தமிழ்நாட்டு அரசாங்கத்தார் தம் அணைத் தேக்கத்தில் நிறைத்து வைப்பார்கள். இவ்வாறு தேங்கிய நீரை, சுரங்க வழியாகப் பரம்பிக்குளம் ஆற்றின் பள்ளத் தாக்கினுள் பாயவிடுகிறார்கள். அச்சுரங்க வழியின் கீழ்முனை, சோலையார் தேக்கத்தின் நீர்மட்டத்தினின்றும் சுமார் 1,300 அடி தாழ்வாக இருப்பதால், அந்த வீழ்ச்சியைப் பயன்படுத்தி, **சோலையார் நீர்மின்சக்தி உற்பத்தி நிலையம் (1-ம் நிர்)** அமைக்கப்படும். மின்சார உற்பத்திக்குப் பிறகு வெளிவரும் தண்ணீர் பரம்பிக்குளம் ஆற்றை அடையும். இது தவிர சோலையாற்றின் கரையிலேயே, **ஒரு மின்சக்தி நிலையமும் (சோலையாறு மின்சக்தி நிலையம் 2-ம்** நிர்) அமைக்கப்படும்.

3. **பரம்பிக்குளம் அணை.**—பரம்பிக்குளம் ஆறு உற்பத்தியாகும் பிரதேசம் சுமார் 89 சதுர மைல் பரப்பும் வருடத்திற்குச் சராசரி 90 அங்குலம் மழையும் கொண்டது. இங்குள்ள எல்லா ஆறுகளைக் காட்டிலும் பெரியதான இவ்வாறு, மேற்குச் சரிவில் பெருகியோடி அரபிக்கடலைச் சாருகிறது. கடல் மட்டத்திற்கு 1,820 அடி உயரத்தில் கட்டப்படும் இவ்வணையின் நீளம் 1,030 அடி, உயரம் 205 அடி. இடதுபுறம் இவ்வணையைச் சார்ந்து 1,878 அடி நீளமுள்ள மண் அணையும் கட்டப்பட்டு வருகிறது. 16,800 மில்லியன் கனஅடி நீரைத் தேக்கிவைக்கும் இதுவே இத்திட்டத்தின் கீழ் மிகப் பெரிய நீர்த் தேக்கம்.

4. **துனக்கடவு அணை.**—பரம்பிக்குளம் நீர்த் தேக்கத்தில் உள்ள நீரை 7,500 அடி நீளமுள்ள மலைக்குடைவு வழியாக அருகில் உள்ள துனக்கடவு ஆற்றில் பாயவிடுகிறார்கள். இது ஒரு சிற்றாறு. கடல் மட்டத்திற்குமேலே 1,770 அடி உயரத்தில், இவ்வாற்றின் குறுக்கே 1,100 அடி நீளமுள்ள ஒரு மண் அணை கட்டப்படும். இந்தத் தேக்கத்திலிருந்து தான் மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குப்புறச் சரிவில் இறங்கும் ஆறுகளின் தண்ணீரைக் கிழக்குச் சரிவுக்கு (சர்க்கார் பதி டனல் மூலமாக) கொண்டு வருகிறார்கள். இது சிறியதோர் அணை என்றாலும், ஆனைமலைச் சாரலில் மிக நீளமான சுரங்கக் கால்வாய்கள் தோண்டும் செலவைக் குறைப்பதற்காகவும், இதன் வடமேற்கில் உயரத்தில் உள்ள உபநதிகளான பெருவாரிப்பள்ளம், தேக்கடியாறுகளின் தண்ணீரைப் பெறுவதற்கும், பல நீர்த்தேக்கங்களின் நீர்மட்ட நிலையைச் சமநிலைப்படுத்தவுமே உதவுவதால் இவ்வணை முக்யத்துவம் பெற்ற அணையாகிறது.

5. **பெருவாரிப் பள்ளம் அணை.**—துனக்கடவு அணைக்கு வடமேற்கே உள்ள இப்பெயருள்ள சிற்றாற்றின் குறுக்கே 1,770 அடி உயரத்தில், 3,100 அடி நீளம் உள்ள ஒரு சிறு மண் அணை கட்டப்படும். இது தேக்கடியாற்றின் தண்ணீரையும் பெற்று, சுரங்க வழியாகத் துனக்கடவு நீர்த் தேக்கத்தில் சேருகிறது.

6. **தேக்கடி அணை.**—மேற்கூறிய இரண்டு அணைகளையும் விட உயரத்தில், அதாவது 1,790 அடி உயரத்தில் பாயும் தேக்கடியாற்றின் குறுக்கே 2,130 அடி நீளம் உள்ள ஓரணை கட்டப்படும். இவ்வாறு வருடாந்திர மழையான 70 அங்குல நீரை 25 சதுர மைல் பரப்பளவில் பெற்று, தன் முழு நீரையும் பெருவாரிப்பள்ளம் தேக்கம் மூலமாகத் துனக்கடவு நீர்த் தேக்கத்துள் சேர்ப்பிக்கிறது.

சர்க்கார் பதி சுரங்க வழி.—துனக்கடவு நீர்த் தேக்கத்தின் நீரை ஆனைமலையின் கிழக்குச் சரிவுக்குக் கொண்டு வரும் 13,000 அடி நீளமுள்ள சுரங்கவழி சர்க்கார் பதி டனல் எனப்படும். இதன் உட்புறம் முழுநீளமும் காங்க்ரீட்டால் பூசப்படும். நீர் வெளியேறும் சுரங்கக் கீழ்முனையில் கிடைக்கும் 300 அடி உயர வித்யாசத்தைப் பயன்படுத்தி, சர்க்கார் பதியில் கட்டப்படும் நீர் மின்சார நிலையத்தில், 20,000 கிலோ வாட் மின்சாரம் தரும் இரண்டு மின் உற்பத்தி இயந்திரங்கள் அமைக்கப்படும்.

II. ஆனைமலையின் கிழக்குச் சரிவுப் பகுதி

மலைச்சரிவின் சமமட்ட வாய்க்கால் (கான்டூர் கால்வாய்) (Contour Canal).—ஒரே உயரத்தில் உள்ள பல இடங்களை இணைத்து வரையப்படும் ஒரு கோட்டிற்குச் சமமட்டக் கோடு (Contour line) என்பார்கள். தண்ணீர் சமமட்டமும், இயற்கையாகப் பாயும் அளவிற்குச் சாய்வும் உள்ள தளத்தில்தான் பாய்ந்து செல்லும். இம்மாதிரி சமமட்டத்தில் ஆனைமலையின் கிழக்குச் சரிவில் ஒரு வாய்க்கால் அமைக்கப்படுகிறது. இது காங்க்ரீட்டால் பூசப்பட்டு, 30 மைல் நீளம் ஓடி சர்க்கார் பதி மின் உற்பத்தி நிலையத்தை விட்டு வெளியேறும் தண்ணீரை, கிழக்கு சரிவில் கட்டப்படும் கடைசி அணையான திருமூர்த்தி அணைத் தேக்கத்தில் சேர்க்கிறது. இந்தப் பெரிய திட்டத்திலேயே மிகவும் கடினமான பகுதி இது. மலையிலிருந்து வேகமாக விழும் மழைக்கால அருவிகளையும் காட்டாறு

களையும் பள்ளத்தாக்குகளையும் தாண்டி, இந்த வாய்க்கால் செல்வது ஒரு பொறியியல் சாதனையின் அற்புதமாகும். இனறு சைபன் அமைப்பு, 'சூபர்பாஸஜ்' என்ற மேம்பாலம், 'ஆக்விடக்ட்' என்ற நீரப்பூலம், பாதாள வடிகால், போன்ற பலவிதமான அமைப்புக்களும், இக் கால்வாயில் இடம் பெறுகின்றன. மேலும் 17,200 அடி நீளமுள்ள சுரங்கக் குடைவும் அமைக்கப்பட்டு இக் கால்வாய் திருமூர்த்தி நீர்த்தேக்கம் சென்று அடைகிறது.

ஆழியார் கால்வாய்.—சர்கார் பதி மின் நிலையத்தி லிருந்து வெளியேறும் நீர் ஆழியார் கால்வாய் மூலமாக, ஆழியார் நீர்த்தேக்கத்தை வந்து அடைகிறது.

சேத்துமடை கால்வாய்.—மேலே குறிப்பிட்ட ஆழியார் சப்ளை கால்வாய் ஆரம்பித்த சற்று தூரத்தில் ஒரு கிளை வாய்க்கால் பிரிந்து, ஐந்து மைல் நீளம் ஓடி சுமார் 3,400 எக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கிறது. இதன் பெயர் சேத்துமடை கால்வாய்.

ஆழியார் நீர் மின்சார நிலையங்கள் I.—ஆழியாற்றின் போக்கிலேயே, ஆழியார் பள்ளத்தாக்கின் அடிவாரத்தில் கிடைக்கும் சுமார் 900 அடி நீர் மட்ட வீழ்ச்சியைப் பயன்படுத்தி சமமட்ட வாய்க்கால், ஆழியாற்றைக் கடக்கும் இடத்தில் ஆழியாற்றின் வலது கைப்புறத்தில் முறையே 40,000, 20,000 கிலோ வாட் மின்சக்தி இயங் கும் இயந்திர நிலையங்கள் நிறுவப்படுகின்றன.

II. ஆழியார் ஏரி எதிர்வாயில், ஆழியாற்றின் வலது கரையிலே மேலே சொன்ன ஆழியார் நீர் மின்சார நிலை யத்தினின்றும் வெளிவரும் நீரும், சமமட்ட வாய்க் காலிலிருந்து அவ்வப்போது கிடைக்கும் நீரும் பயன் படுத்தப்பட்டு ஒரு 40,000 கிலோ வாட் மின்சார சக்தி உற்பத்தி தரும் நிலையம் நிறுவப்படுகின்றது. ஆக மொத்தம் ஐந்து நீர்மின்சார நிலையங்கள் இத்திட்டத் துள் அடங்கும்.

7. ஆழியார் அணை.—ஆழியாறு, ஆனைமலைச் சரிவின் கிழக்குப் பகுதியில் உற்பத்தியாகிப் பெருகிவரும் பெரிய ஆறு. இது சமவெளியில் வந்து இறங்கியபின் முன்னாள் அரசர்களால் பல சிறுசிறு கல்லணைகள் மூலம் தடுக்கப்பட்டு சுமார் 7,000—8,000 ஏக்கர்கள் நன்செயில் பாய்கிறது. இதன் குறுக்கே, கடல் மட்டத்திற்கு 1,050 அடி உயரத்தில் 10 000 அடி நீளமுள்ள பெரியதோர் மண் அணை கட்டப்பட்டிருக்கிறது. ஆற்றின் நடு பாகத்தில மட்டும் 2 300 அடி நீளம் கல்லால் கட்டப் பட்டிருக்கிறது. 3,860 மில்லியன் கனஅடி நீர் தேங்கும் இவ்வணையிலிருந்து இரண்டு சிமெண்ட் காங்க்ரீட் கால் வாய்கள் பிரிந்து சென்று பொள்ளாச்சி தாலுகாவில் சுமார் 35.000 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளிக்கிறது. பொள்ளாச்சிக் கால்வாய் 23 மைல் நீளமும், வேட்டைக் காரன்புதூர் கால்வாய் 11½ மைல் நீளமும் சென்று, சிமெண்ட் காங்க்ரீட் பூசப்பட்ட பல கிளை வாய்க்கால்களாகப் பிரிந்து செல்கின்றன.

8. திருமூர்த்தி அணை.—பாலாறு என்ற சிறு ஆறு, ஆனைமலைச்சாரலின் கீழ்சரிவில் உற்பத்தியாகி உடுமலைப் பேட்டை தாலுகாவில் இறங்குகிறது. 1,335 அடி உயரத்தில் இதன் குறுக்கே 9,000 அடி நீளத்தில் கட்டப்பட்டுவரும் மண் அணை திருமூர்த்தி அணையாகும். மேலே குறிப்பிடப்பட்ட மலைச்சாரல், சமமட்டக் கால்வாய், பரம்பிக்குளம் ஆறு இவற்றின் நீரை இந்த நீர்த்தேக்கத் தில் கொண்டுவந்து சேர்க்கிறது. இந்த நீர்த்தேக்கத்தி லிருந்து இரண்டு பாசன வாய்க்கால்கள் புறப்பட்டு உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் தாலுகாக்களில் 1·87 லட்சம் ஏக்கர் பூமிக்கு நீர்ப்பாசன வசதி அளிக் கிறது. ஒன்று, 82 மைல் நீளம் உள்ள பரம்பிக்குளம் பிரதான வாய்க்கால், மற்றது, 18 மைல் நீளமுள்ள உடுமலைப்பேட்டை வாய்க்கால். இவையிரண்டும் சிமெண்ட் காங்க்ரீட் பூசப்பட்டவையாதலால் நீரை சிக்கனமாக உபயோகிப்பதுடன், பக்கத்து நிலங்கள் ஊற்று எடுப்பதால் நீர்த்தேக்கம் களர்ப்பாங்காக ஆகிவிடாது.

பரம்பிக்குளம்—ஆழியார் திட்டத்தின் சிறப்பு அம்சங் கள்.—(1) ஆனைமலைச்சரிவில் கிடைக்கும் நல்ல கருங்கற்களைக் கொண்டு இவ்வணையின் கல் கட்டடப்பகுதிகள் கட்டப் படுவதால் சிமெண்டின் உபயோகமும் தேவையும் குறை கிறது. சுர்க்கி கலவை (செங்கல்பொடி, சுண்ணாம்புக் கலவை) பயன்படுத்தப்படுவதாலும் சிமெண்ட் தேவை சிக்கனப்படுத்தப்படுகிறது.

(2) எல்லா மூல வாய்க்கால்களிலும், கிளை வாய்க்கால் களிலும் சிமெண்ட் காங்க்ரீட் கலவை பூசப்பட்டு இருப்பதால், நீர்ச்சிக்கனமும், அதனால் அதிகப்படியான நிலங்களுக்கு பாசனமும் சாத்தியமாகிறது.

(3) இத்திட்டத்தின் கீழ்வரும் ஆயக்கட்டு நிலங் களில், முக்கியமான வடிகால் பிரதேசங்களில் நீர்த்தேக் கங்கள் அமைத்து, பாசன வசதிபெறாத நிலங்களிலிருந்து கசியும் வடிகால் நீரையும், மழை நீரையும் சேமித்து வைத்து 15 000 ஏகருக்குப் பாசனம் அளித்து சாகுபடி செய்ய வசதி செய்யப்பட்டிருக்கிறது.

(4) இத்திட்டத்தின் கீழ் "படிப்படியான பாசன வசதி அளித்தல்" (Progressive Irrigation) என்ற முறை அனுசரிக்கப்படுகிறது. பாசன நீர் கிடைப் பதற்கு திட்டம் முழுவதும் முடியும்வரை காத்திருக்க வேண்டாம். ஒவ்வொரு நீர்த்தேக்கம் முடிவுறும் போதும் ஓரளவு நிலத்திற்குப் பாசன வசதி தரப்படுகிறது. அணைக்கட்டு வேலைகள் தொடங்கும்போதே கால்வாய்கள் வெட்டும் வேலையும் எடுத்துக்கொள்ளப்படுவதால் நீர்ப் பாசனம் எளிதில் தொடங்கப்படும். இவ்வாறு ஆழியாறு அணை பூர்த்தியானவுடன் சென்ற அக்டோபர் 2-ம் தேதி யில் தண்ணீர் திறந்துவிடப்பட்டு பாசன வசதி தரப் படுகிறது. பரம்பிக்குளம் அணை, திருமூர்த்தி அணை முதலிய ஒவ்வொரு அணையும் முற்றுப்பெற முற்றுப் பெற பாசன வசதிகளும் அதிகரிக்கப் படும். குடியானவர்

"முடிக்கொத்து" வாழையில் கொடிய வியாதி நோய் கண்டவுடன் அகற்றுங்கள்

கள் தங்கள் வசதிக்கேற்ப சிறுகச்சிறுக 2, 3 பருவங்களில் எல்லா நிலத்தையும் சமப்படுத்திப் பாசனத்தின் கீழ் கொண்டுவருவதில் அதிகக் கால தாமதம் ஆகாது.

நீர்ப்பாசனமும் ஆயக்கட்டும்.—இந்தத் திட்டத்தில், தோட்டக்கால் விவசாயத்திற்கு ஏற்ற முறையில் நீர் பாய்ச்சப்படும் புன்செய் பயிர்களான பருத்தி, சோளம், நிலக்கடலை போன்ற பயிர்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எற்கெனவே இந்தப் பகுதியில் மேற்சொன்னபயிர்கள் புன்செய் பயிர்களாகப் பயிரிடப்படுகின்றன. நிச்சயமான விளைச்சலைக் கொடுக்க, இவற்றைத் தோட்டக்கால் நிலங்களாக மாற்றவேண்டும். நஞ்சைக்கு அளிக்கும் தண்ணீரை தோட்டக்கால்களுக்கு அளிக்கும்பொழுது அதிகமான ஏக்கர்களுக்கு பாசனம் அளிக்க முடியும். இம் முறையில், சுமார் 2·40 லட்சம் ஏக்கர்களுக்குப் பாசனம் அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. மேட்டு நிலங்களில் நீர்ப்பாசனம் அளிக்கப்படும் பொழுது, பள்ளத்தாக்குப் பகுதிகளில் இயற்கையாகவே நீர்க்கசிவு உண்டாகும் நீர்த்தேக்கம் ஏற்பட்டு விடுவதால் அங்கங்கு நெல்லைத் தவிர வேறு எதுவும் வராத நிலை ஏற்படும். அத்தகைய நிலங்களில் மட்டும் நெல்லைப் பயிர் செய்ய அனுமதிக்கப் படுகிறது.

ஆயக்கட்டு நிலங்கள், பொள்ளாச்சி தாலுகாவில் பெரும்பாலும் செம்மண், மணல் கலந்த இருமண், சிவப்பு களிமண்ணுல் ஆகியவை. உடுமலைபேட்டை, பல்லடம், தாராபுரம் தாலுகாக்களில் நிலம் பெரும்பாலும் களிப்பு மிகுந்த கரிசல் மண்ணுக இருக்கிறது. மண்ணின் ஆழம் 3 அங்குலத்திலிருந்து பள்ளத்தாக்குப் பாகத்தில், மூன்று அடி வரை மாறுகிறது. பொள்ளாச்சிப் பகுதியில் அதிகமான மேடு பள்ளங்கள் காணப்படுகின்றன. இங்கு மேட்டுப் பகுதியில் மண் கண்டத்தின் ஆழம் குறைவு. பள்ளத்தாக்கில், மண் ஆழம் அதிகமாக இருக்கிறது. எனவே முக்கியமாக இத் தாலுகாவில் மேட்டுப் பகுதிகளில் நிலக்கடலை, பருத்தி ஆகிய புஞ்சை பயிர்களையே பயிர் செய்ய வேண்டும். நஞ்சை பயிர் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால் கீழே உள்ள பகுதிகளில் எல்லாம் நீர்க்கசிவால ஊற்று எடுத்து, புன்செய் பயிர்கள் எதும் சாகுபடி செய்ய முடியாமல் போகும். முடிவில் நஞ்சையைத் தவிர எதும் செய்ய முடியாத நிலை ஏற்படும். செம்மண், சாம்பல நிற மண் கண்டம் உள்ள இடங்களில் நீர்த்தேக்கம் ஏற்படட வடிகால் வசதியினமையால் உண்டாகும் தீமைகள் விளையும். கரிசல் மண்களில் கீழேயுள்ள உப்புக்கள் மேலே வந்து களர் நிலமாகலாம். இவற்றை எல்லாம் தவிர்க்கும் பொருட்டு ஆரம்பத்திலேயே, நனசெய் போனறு தொடர்சசிய கத் தண்ணீர் பாய்ச்சுதல் கூடாது. வாரம ஒரு முறையோ அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறையோ நீர் பாய்ச்சுதல் நலம்.

மண்வள ஆராய்ச்சி.—பரம்பிக்குளம்—ஆழியார் திட்ட ஆயக்கட்டு நிலத்தை ஆராய்ந்து, மண் வளங்களைச் சோதனை செய்து பார்க்க ஒரு பூர்வாங்க திட்டத்தை கோவை விவசாய ஆராய்ச்சிக் கூடத்தின் இரசாயனப் பிரிவினர் பூர்த்தி செய்தனர். அதன் பூர்வாங்க முடிவுகளின் படியே மேற்குறித்தவாறு, மேட்டுப்பகுதிகளுக்கு வாரம் ஒருமுறை பரவலாக நீர்ப்பாய்ச்ச வேண்டும் என்று வகை செய்திருக்கிறது. விரிவான ஆராய்ச்சிகள் நடத்தி, தக்க முடிவுகள் காண, இத்திட்ட ஆயக்கட்டிற்குத் தனியாக ஓர் விவசாய ஆராய்ச்சிக் கூடம் நிறுவ அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது.

ஓர் வேண்டுகோள் ! இத் திட்டத்தின் கீழ் தற்போது முடிவுற்ற அணை பொள்ளாச்சி தாலுகாவில் ஆழியாற்றின் குறுக்கே கட்டப்பட்டதாகும். இதன் கீழ், வருகிற சித்திரை மாதம் முதல் தேதி (15–4–1963) முதல் புரட்டாசி 15-ம் தேதிவரை 10,000 ஏக்கருக்குத் தண்ணீர் விடப்படும். நீர்ப் பாயும் முக்கிய கிராமங்களின் பெயர்கள், ஆழியார் நகர், கோட்டூர், வேட்டைகாரன்புதூர், உடையகுளம், காளியாபுரம், அங்கலக்குறிச்சி, சோமன்துறை, ஜல்லிபட்டி, சங்கம் பாளையம். இப்பிரதேசத்தில் வழக்கமாக பங்குனி, சித்திரையில் நிலக்கடலை, சோளம் முக்கிய பயிர்களாக விதைக்கப்படுகின்றன. விவசாயிகள் சித்திரை மாதத்திற்கு வரும் தண்ணீரைப் பயன்படுத்த சாதகமாயிருக்கும்படி, விதைகளை விதைத்த பின்பு, சரிவுக்குக் குறுக்கே பாத்தி களை அமைத்துக் கொள்ளவேண்டும். இங்குள்ள விவசாயிகளின் முக்கிய பணப்பயிரான மணிலாக் கொட்டை சாகுபடிக்கு கீழ்கண்ட உதவிகளை ஆனைமலை வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் விவசாய விஸ்தரிப் பாளர் மூலமாக அரசாங்கம் அளிக்கிறது.

(1) நிலக்கடலை தீவிர சாகுபடித் திட்டத்தை அமுல் செய்கிறது.

(2) டி.எம்.வி. 2. நிலக்கடலை விதையும், பூஞ்சண மருந்துகளும் சகாய விலைக்கு தருகிறது.

(3) தீவிர உர வினியோகத் திட்டத்தின் கீழ் கடலைக் கான 3-ம் நிர். கலப்புரம் (ரசாயனக் கலவை எரு) வழங்குகிறது.

(4) பூச்சி மருந்துகளை சகாய விலையில் தருகிறது.

(5) ஆகாயவிமான மூலம் மருந்து தெளித்து சிவப்பு கம்பளிப் புழு தொல்லையை அடியோடு அழிப்பதற்கான முயற்சியைத் தொடர்ந்து செய்கிறது.

(6) மேலே குறிப்பிட்ட விசேஷ உதவிகளைத் தவிர, இரும்புக் கலப்பைகள், விவசாயக் கருவிகள், பூச்சி மருநதடிக்கும் கருவிகள், பொறுக்கு விதைகள், பயிர் நோய் தடுககும் முறைகளும் மற்ற விவசாய சம்பந்தமான ஆலோசனைகளையும் தந்து உதவுகிறது.

சற்றேறக்குறைய 40 கோடி ரூபாய் செலவில் நடத்திவரும் இம்மாபெருந் திட்டத்தினுல் 2·40 லட்சம் ஏக்கர்கள் நீர்ப்பாசனம் பெறுகினறன. இதனுல் எதிர்

பார்க்கப்படும் அதிக உணவு உற்பத்தியும், மற்ற வருவாயும் கீழே தரப்பட்டிருக்கின்றன.

(அ) நிலக்கடலை	9,600 டன்		மதிப்பு 5·09 கோடி ரூபாய்.
பருத்தி	7,400 ,,		
சோளம் முதலியன	38,400 ,,		
அரிசி	24,000 ,,		
(ஆ) மீன் வளம்	140 ,,		
(இ) மின்சாரம்	180,000 கி. வாட்		ரூ. 55·25 கோடி.

(ஈ) குடிதண்ணீர்—அருகில் உள்ள பெரிய சிறிய ஊர்கட்கு.

(உ) இன்பப் பயணம்—உல்லாசப் பிரயாணத்தினர், பல்வேறு அணைகள், நீர்த்தேக்க ஸ்தலங்கட்கு வந்து மகிழலாம்.

(ஊ) 6–7 ஆவது ஆண்டில் உற்பத்தியாகும் செல்வத்தின் மதிப்பு ரூ. 60·34 கோடி.

நீர்ப்பாய்ச்சலால் வரும் நிகர வருமானம் —ரூ. 27,24,000

மின்சாரத்தால் வரும் நிகர வருமானம் —ரூ. 1,54 20,000

ஆண்டொன்றுக்கு வருமானம்—ரூ. 1,81,44,000

நேரடியான லாப சத வீதம்—5·17

அரசாங்கத்திற்கு இத் திட்டத்தினுல் வருகிற சிறந்த லாபம் குடியானவர்களின் சுபீட்ச வாழ்வும் மகிழ்ச்சி சிறந்த வளமுற்ற வாழ்க்கையும்தான். ஆழியார் பாசனத் திட்ட ஆயக்கட்டுதாரர்களான குடியானவர்கள், தங்கள் தங்கள் நிலத்தில், புதிதாக வரும் பாசன நீரைப் பயன் படுத்தி, அரசாங்க விவசாயப் பிரிவினர், மற்றைய எல்லாப் பிரிவினர் தரும் உதவிகளையெல்லாம் பெற்று, அதிகமான விவசாய விளைவைப் பெருக்குதல்வேண்டும். **படை வீரர்களின் ஆற்றல் யாவும் உழவுப்படை உடையவன் உழைப் பின்பயனைப் பொறுத்ததே.** எனவே, தற்போதைய தேசீய நெருக்கடி நிலைமையிலும், பசிப்பிணியினின்றும் சுதந்திரம் பெறுவதற்குச் செய்யவேண்டிய தலைசிறந்த பணி விவசாய உணவுப் பொருள்களைப் பன்மடங்கு பெருக்குவதே. அத்தகைய சீரிய பணியைச் செம்மையாக நடத்த நமக்கு உதவி செய்வது பரம்பிக்குளம்—ஆழியார் பாசனத் திட்டம். இத் திட்டத்தை வெற்றிகரமாக நடைபெறச் செய்வதே நமது கடமை.



மேலும் விவரங்களுக்கு எழுதுங்கள்: ஜான்ஸ்டன் பம்ப்ஸ் இந்தியா லிமிடெட் 2, பேர்லீ பிளேஸ், கல்கத்தா-1

ஜான்ஸ்டன் பம்புகளைப் பற்றி இன்னும் விவரங்கள்
ஜலம் இறைக்கும் சக்தி: மணிக்கு 1000 காலன் அளவிலிருந்து ஐந்து லட்சம் காலன் அளவு வரை.
குதிரை சக்தி வகை: 2 எச்.பி முதல் 200 எச்.பி. வரை.
டீசல்/ஹாரிஸான்டல் மோட்டாரிலும், ஏஸி/டிஸி அல்லது மின்சார கியர் மற்றும் பெல்ட் இயக்கத்திலும் வேலை செய்யும்.
ஒரு வருட உத்தரவாதம் உடையது. சகஜமான உழைப்பு மற்றும் பராமரிப்பு நிலைமையில் இந்த பம்புகள் சாதாரணமாக 15 ஆண்டுகள் வேலை செய்யும்.
விற்பனைக்குப்பிறகு, பயிற்சிபெற்ற மெகானிக்குகளைக்கொண்டு செப்பனிடும் வசதியுண்டு.
இந்தியாவில் இந்த பம்பு நிர்மாணிக்கப்பட்ட உயர்ந்த பக்ஷ ஆழம் 635 அடி.

GROUP OF COMPANIES

JOHNSTON
TURBINE PUMPS

சாகுபடிப் பயிர்களும் காலநிலை மாறுதல்களும்

[சி. பாலசுப்பிரமணியன், விவசாய கால நிலை ஆராய்ச்சியாளர், கோவை.]

சாகுபடியாகும் எல்லாப் பயிர்களும் கால நிலையில் ஏற்படும் மாறுதல்களினால் பாதிக்கப்படுகின்றன. நன்செய் நிலங்கள், தோட்டக்கால் பூமிகள், வானம் பார்த்த பூமிகள் எவைகளாயிருந்தாலும் சரி, அவைகளில் சாகுபடி செய்யப்படும் பயிர்களின் மகசூல் கால நிலையை ஒட்டி இருக்கின்றது. விஞ்ஞான முறையில் இதன் தத்துவத்தைச் சற்று ஆராய்வோம்.

தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, செங்கற்பட்டு கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களில் சாகுபடியாகும் நெற்பயிருக்கும், காலநிலையில் ஏற்படும் மாறுதல்களுக்கும் உள்ள சம்பந்தத்தை நிர்ணயித்துப் பார்க்கும் பொழுது, மழை, வெப்பம், காற்றிலுள்ள ஈரச்சத்தி முதலியன நெற்பயிரைப் பாதிக்கின்றன. மூன்று மாதப் பயிர்களுக்கும் ஆறு அல்லது ஏழு மாதப் பயிர்களுக்கும் காலநிலைக்கும் உள்ள சம்பந்தங்கள் மாறுபடுகின்றன. மேலும் தானிய விளைச்சலுக்கும் வைக்கோல் மகசூலுக்கும் காலநிலை சம்பந்தங்கள் வித்தியாசப்படுகின்றன. நன்செய் நிலங்களில் சாகுபடியாகும் நெற்பயிருக்கும் கூட மழை இன்றியமையாதது எனப் புலப்படுகிறது. நெற்பயிருக்கு 69° F முதல் 80° F வரை வெப்ப நிலை உகந்தது. நட்டவுடன் பயிருக்கு அதிக வெப்பம் தேவை. கதிர் விடுந்தருணத்தில் வெப்பம் 80° F முதல் 85° F வரை இருத்தல் சிறந்தது. காற்றிலுள்ள ஈரச்சத்து (Humidity) முதலில் சாகுபடியாகும் நெல்வகைகளுக்கு 83—85 சத விகிதம் வரையிலும் தாமதமாகச் சாகுபடியாகும் நெல் வகைகளுக்கு 67—68 சத விகிதம் வரையிலும் இருக்க வேண்டும். எல்லா நெல் வகைகளும் காலை 9-30 மணி முதல் 11 மணி வரையில்தான் மலரும்.

சிறு தானியப் பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு முதலியனவும் காலநிலைமாறுதல்களினால் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக வெப்பம் 100° F மேல் இருந்தால் சோளம் நன்றாக விளையாது. களிமண் நிலங்களில் சாகுபடியாகும் சோளப்பயிர்கள் கனத்த மழை பெய்தல் பாதிக்கப்படும். மணற்பாங்கான பூமிகளில் எவ்வளவு மழைப் பெய்தாலும் சோளப்பயிர்கள் பாதிக்கப்படாது. பொதுவாக புன்செய் பூமிகளில் சாகுபடியாகும் சோளத்தில், விதைத்தவுடன 1 அங்குல மழையும் வளர்ச்சி காலத்தில் 10 அங்குல மழையும், மலரும் தருணத்தில் 3 அல்லது 4 அங்குல மழையும், தானியம் முதிரும் சமயத்தில் 1 அல்லது 2 அங்குல மழையும் பெய்தால் விளைச்சல் நன்றாக இருக்கும்.

எண்ணெய் வித்துக்களில் நிலக்கடலையைப் பொறுத்த வரைக்கும் பல நாட்களில் பெய்யும் சிறு மழையே சில நாட்களில் பெய்யும் பெரு மழையைக் காட்டிலும் சிறந்ததாகும். எள் பயிருக்கு அதிக வெப்பம் தேவை ? மழையைவிட வெப்பம்தான் எள் பயிருக்கு முக்கியம். எள் பயிர்களில் பூக்கள் மிக அதிகமாக இருந்தால் மகசூல் குறைவாக இருக்கும். ஆமணக்குக்கும்கூட மழையைவிட வெப்பம்தான் அதிகமாகத் தேவை. மலரும் சமயத்தில் மேகங்கள் அதிகமாகக் காணப்பட்டால் மகசூல் பாதிக்கப்படும். தென்னை மரங்கள் கூட மழையினால் பாதிக்கப்படுகின்றன. ஆனால் ஒரு வருடமதின் மழையினுடைய குணம் மறு வருடத்தில்தான் தென்னையில் காணப்படும். தென்னையில் இரண்டு வருடத்திற்கு ஒரு தடவைதான் இலாபகரமான மகசூல் கிடைக்கும்.

பருத்தி, கரும்பு, உருளைக்கிழங்கு, கோதுமை, மக்காச் சோளம் முதலிய பயிர்கள் காலநிலை மாறுதல்களினால் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக சூடான் தேசத்தில் தோட்டக்கால் பூமிகளில் நீர்ப்பாசனத்துடன் சாகுபடியாகும் பருத்தியின் மகசூல் உறுதி, விதைத்தடைய விதைக்கு முன் கிடைத்துள்ள மழையின் அளவைக் கொண்டு முன் கூட்டியே நிர்ணயிக்கப்படுகின்றது.

அதுமட்டுமல்ல. பயிர்களைச் சாகுபடி செய்யும் முறையும் கால நிலை மாறுதல்களைப் பொறுத்து இருக்கின்றது. “விசும்பின் துளி விழின் அல்லால் மற்றாங்கே பசும் புல் தலை காண்பது அரிது” என்றான் வள்ளுவன். இதுதான் விவசாயிகளின் அனுபவமுங்கூட. முக்கியமாக புன்செய் நிலங்களில சாகுபடியாகும பயிர்களுக்கு மழை மிக அவசியம். மழை இல்லையேல் மகசூலும் இல்லை. மண்ணில் ஈரமில்லையேல் விதைத்த விதை மண்ணில் முளைக்காது. சாகுபடியாகும் பயிர்களைப் பொறுத்து மண்ணிலுள்ள ஈர சத்தின் அவசியம் மாறுபடும். உதாரணமாகப் பருத்திக்கு 12 அங்குலம் முதல் 18 அங்குலம் ஆழம் வரையிலுள்ள மண்ணில் ஈரச் சத்தும் குறைந்தது 30 சத விகிதம் இருக்க வேண்டும். அதேபோல் கோதுமைக்கு 50 சத விகிதமும், பார்லிக்கு 45 சத விகிதமும் மண்ணில் ஈரச் சத்து இருக்க வேண்டும். பயிர்களுக்குக் கொடுக்கப்படும் இரசாயன உரங்களின் குணமும் மண்ணிலுள்ள ஈரச் சத்தைப் பொறுத்திருக்கிறது. கரும்பை நோக்குமிடத்து கொடுக்கப்படும் தழைச் சத்து உரங்களுக்கும் (Nitrogenous Fertilisers) மண்ணிலுள்ள ஈரச்சத்திற்கும் உள்ள சம்பந்தம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. ஈரச் சத்து குறையாமலிருப்பதற்கு நீர்ப் பாசன வசதிகளைக் கையாள வேண்டும்.

மண்ணிலுள்ள ஈரச் சத்துக்கும் காற்றின் வெப்பத்திற்கும் உள்ள சம்பந்தம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பயிர்களின் வளர்ச்சி காற்றின் வெப்பத்தைப் பொறுத்திருக்கிறது. இந்த வெப்பம் 42°F மேல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பயிர்கள் நல்ல வளர்ச்சி அடையும். இறைவை பயிர்களுக்குக் கொடுக்க வேண்டிய

[41-ம் பக்கம் பார்க்கவும்]

கிழக்கு இராமநாதபுரம் தென்னை அபிவிருத்தி திட்டம்

(தென்னை அபிவிருத்தி அலுவலர், இராமநாதபுரம்.)

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக தென்னை அபிவிருத்திக்கென்று கிழக்கு இராமநாதபுர கடற்கரையோரப் பகுதிகளில ஒரு விரிவான திட்டத்தை நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் அமுல் நடத்துகிறார்கள். இத் திட்டத்தை நடத்த ஒரு தென்னை அபிவிருத்தி அலுவலர் இப்பகுதிக்கென்று பிரத்யேகமாக நியமிக்கப்பட்டு அவர் இராமநாதபுரத்தில் செயலாற்றி வருகிறார். அவருக்கு உதவியாக விவசாயத் துறையில் தேர்ச்சி பெற்ற பத்து உதவியாளர்களும், ரெவின்யூ இலாக்காவைச் சேர்ந்த தாசில்தார் ஒருவரும், ஐந்து ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கு இராமநாதபுர மாவட்டம் விவசாயத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் பலகாலமாக ஒரு பின்தங்கிய பிரதேசமாகக் கருதப்பட்டு வருகிறது. இதற்கு முக்கிய காரணம் சரியான பருவமழை பெய்வதில்லை—மணற்பாங்கான நிலங்களே அதிகம்—பூமிக்குள்ளிருந்து கிடைக்கும் தண்ணீரும் வருடபயிர் செய்ய போதுமானது அல்ல. ஆனல் நீண்ட நாட்கள் இருந்து பலன் தரக்கூடிய தென்னை போன்ற மரங்கள் இம்மாதிரி மணற் பூமிகளில் நன்கு வளர்கின்றன. ஆகையால் தென்னை சாகுபடியை விஸ்தரித்து இங்குள்ள மக்களின் பொருளாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கு நமது அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது.

திட்டத்தின் விபரங்கள்.—இத்திட்டத்திற்கு சுமார் அரை கோடி ரூபாய்க்கு மேலாக நிதி வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் இந்தத் திட்டம் அமுல் நடத்தப்படும் பகுதிகளின் குறைந்த பட்சம் 9,000 ஏக்கர் விஸ்தீர்ணத்தில் தென்னை சாகுபடியை அதிகரிக்கவேண்டும். இத்திட்டம் இராமநாதபுரம், திருவாடானை, முதுகுளத்தூர், பரமக்குடி ஆகிய நான்கு தாலுக்காக்களில் அமுல் நடத்தப்படுகிறது. இத் திட்டத்தை இரண்டு முக்கிய அம்சங்களாக பிரிக்கலாம்.

1. நிலமில்லாத ஏழைகளுக்கும் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த அகதிகளுக்கும் தென்னை நடுவதற்குத் தகுதியான சர்க்கார் நிலங்களைக் கொடுத்து அந்நிலங்களில் தென்னை வளர்ப்பதற்கான பணவசதிகளை நீண்டகால வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து உதவுதல். இத் திட்ட காலத்திற்குள் வருடம் ஒன்றுக்கு 100 குடும்பங்கள் வீதம் மொத்தம் 500 குடும்பங்களுக்கு 2,500 ஏக்கர் சர்க்கார் நிலங்கள் விநியோகிக்கப்பட்டு அவ்வாறு கொடுக்கப்பட்ட நிலங்களில் மொத்தம் 1,500 ஏக்கர் விஸ்தீர்ணத்தில் தென்னை சாகுபடி செய்தல்.

2. இந்தப் பகுதியிலுள்ள சிறிய, பெரிய நிலச்சுவான்தார்களுக்கு புதிதாகத் தென்னை வளர்ப்பதற்கென்று நீண்டகால வட்டியில்லாக் கடனாக பணவசதி செய்து கொடுத்தல், இதன் மூலம் மொத்தம் 7,500 ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடியை அதிகரிக்கவேண்டும்.

திட்டத்தை வெற்றிகரமாக நடத்த கீழ்க்கண்டவர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு குழு நிறுவப்பட்டிருக்கிறது,

அங்கத்தினர்கள். —

1. கோட்டாட்சித் தலைவர், இராமநாதபுரம்.
2. தென்னை அபிவிருத்தி அலுவலர், இராமநாதபுரம்
3. மாவட்ட விவசாய அலுவலர், சிவகங்கை

4, 5, 6, 7, 8. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், மண்டபம், திருப்புல்லாணி, இராமநாதபுரம, திருவாடானை, கடலாடி.

இந்தக்குழு அடிக்கடி சர்க்கார் நிலங்களை வழங்குவதற்கான நிலமில்லாத ஏழைகளையும், இலங்கை அகதிகளையும் தேர்ந்தெடுக்கவும் தென்னை விஸ்தரிப்பில் வேறு யோசனைகள் கூறவும் செயல்படுகிறது.

நாற்றுப் பண்ணைகள்.—இத் திட்டத்தின் பிரகாரம் வருடந்தோறும் 1,800 ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடி அதிகரிக்கப்படும். தற்போது இத் திட்டம் அமுல் நடத்தப்படும் இராமநாதபுரம், திருவாடானை தாலுக்காகள் ஐந்து யூனிட்டுகளாகப் பிரிக்கப்பட்டு இராமநாதபுரம் தாலுக்காவில் நான்கு பெரிய யூனிட்டுகளும், திருவாடானை தாலுக்காவில் ஒரு சிறிய யூனிட்டும் நிறுவப்பட்டிருக்கின்றன. பெரிய யூனிட்டு ஒவ்வொன்றுக்கும் வருடந்தோறும் 400 ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடியை அதிகரிக்கவும், சிறிய யூனிட்டுக்கு வருடந்தோறும் 200 ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடியை அதிகரிக்கவும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு பெரிய விஸ்தரிப்புத் திட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய பாம்பன், தேவிபட்டணம், உச்சிப்புளி, திருப்புல்லாணி ஆகிய இடங்களில் நான்கு பெரிய தென்னை நாற்றங்கால் பண்ணைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வருடம் 30,000 உயர்ந்த ரக நாற்றுகள் உற்பத்தி செய்கின்றன. சமீபத்தில் தொண்டியிலும் திருவாடானை தாலுக்காவிற்காக வருடம் 15,000 தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்யக் கூடிய பண்ணை ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கன்றுகள் முக்கியமாக மூன்றுவகைப்பட்டவை (1) ஜாவா ஜையண்ட் ரகம். (2) உயர்ந்து வளரும் ரகம் (3) நடுத்தரமாக வளரும் ரகம்.

ஜாவாஜெயண்ட் கன்றுகள் ஒவ்வொன்றும் 75 நயைக்கும் மற்ற ரக கன்றுகள் ஒவ்வொன்றும் 65 நயாபைசாவிற்கும் விற்கப்படுகின்றன. இந் நாற்றுப்பண்ணைகளைக் கண்காணித்துவர பயிற்சிப்பெற்ற அலுவலர்கள்

நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப் பண்ணைகளின் சுற்று வட்டாரங்களிலுள்ள எல்லோரும் தென்னை சாகுபடி சம்மந்தமான விவரங்களை இந்த அலுவலர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம். இவர்கள் தவிர கடன் வசதி செய்து கொடுப்பதற்கென்று ஒவ்வொரு யூனிட்டிலும் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இருக்கிறார்.

நிலமில்லாத ஏழைகளுக்கும், இலங்கை அகதிகளுக்கும் கிடைக்கும் உதவிகள்.—இத் திட்டத்தின்கீழ் சர்க்கார் நிலங்களில் குடி அமர்த்தப்பட விரும்புவோர் தங்கள் விண்ணப்பத்தை இராமநாதபுரம் தென்னை அபிவிருத்தி அலுவலருக்கு அனுப்பி, பிறகு, இத் திட்டத்தை அமுல் நடத்தும் குழு விண்ணப்பத்தாரர்களைத் தேர்ந்து எடுப்பதற்காக அவ்வப்பொழுது கூடும் பொழுது குழுவின் முன்பு தங்கள் சொந்த செலவில், அறிவிக்கப்பட்ட தேதிகளில் ஆஜராக வேண்டும். திட்டக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் நிலமில்லாத ஏழைகள் என்பதற்குத் தகுந்த அத்தாட்சி கொடுத்தபின் இராமநாதபுரம், திருவாடானை தாலுக்காவில் உள்ள தென்னை சாகுபடிக்கு உகந்த சர்க்கார் நிலங்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 5 எக்கருக்கு மேற்படாமல் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் குடும்பத்துடன் குடியமர்ந்து ஒவ்வொரு குடும்பமும் சர்க்காரால் கொடுக்கப்படும் பண வசதிகளை நீண்டக்காலக் கடனாகப் பெற்றுக்கொண்டு மூன்று எக்கர் விஸ்தீரணத்தில் தென்னை சாகுபடி செய்யவேண்டும். மூன்று எக்கருக்கு அதிகமான மீதமுள்ள நிலத்தை ஒவ்வொரு குடும்பமும் தங்களுக்குத் தேவையான தானியப் பயிர்கள், பயறு வகைகள் முதலியன பயிர் செய்து கொள்வதற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் கீழ்க்கண்டவாறு கடன் அளிக்கப்படும்.

		ரூ.	நபை.
(1)	நிலம் சீர்திருத்த ..	75	00
(2)	வேலி போடுவதற்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம்.	250	00
(3)	தென்னை நடும் குழிகளின் பாறையிருந்தால் அகற்ற எக்கர் ஒன்றுகது ரூ. 50 வீதம்.	150	00
(4)	தென்னங்கன்றுகள் எக்கர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் மூன்று எக்கருக்கு கன்றுகளாக.	150	00
(5)	உரமாக எக்கர் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் 5 வருடங்களுக்கு.	375	00
(6)	பூச்சி மருந்து நோய் தடுப்பு மருந்து முதலிய சில்லரை செலவிற்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் 5 வருடங்களுகது	75	00
	மொத்தம் ..	1,075	00

மேற்கண்ட உதவிகளுடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ. 30 முதல் ஐந்து வருடங்களுக்கு கொடுக்கப்படும் அவ்வாறு கொடுக்கப்படும் ரூ. 1200-ம் மற்ற மேலே சொல்லப்பட்ட கடன்களுடன் சேர்த்து வட்டியில்லாக் கடனாக தென்னங்கன்றுகள் நட்ட 11-வது வருடத்திலிருந்து 15 வருடத் தவணைகளில் வசூலிக்கப்படும். 26 வருடங்கள் கழிந்த பின் கடன் தொகைகள் பூராவும் திருப்பி வசூலிக்கப்பட்டபின் நிலங்கள் அந்தந்த குடும்பங்களுக்கு நிரந்தரமாக ஜாரி செய்யப்படும். இந்த நிலங்களுக்கு முதல் 10 வருடங்களுக்கு நிலவரியும் செலுத்த வேண்டியதில்லை.

பட்டாதார்களுக்கு கடன் வசதி.

சிறு பட்டாதார்கள் முதல் பெரிய நிலச் சுவான்தார்கள் வரை 50 செண்டு முதல் 100 எக்கரும் அதற்கு மேலும் உள்ள பட்டா நிலங்களில் தென்னை சாகுபடி செய்ய இத் திட்டத்தில் கடன் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. உயர்ந்த பட்சம் எக்கர் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் கீழ்க்கண்ட காரியங்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது.

		ஒரு ஏக்கருக்கு ரூ.
1.	நிலத்தைச் சமன்படுத்தி, சீர் திருத்த, குழிகள் வெட்ட.	100
2.	வேலி அமைக்க	50
3.	தோண்டிய குழிகளில் பாறையிருந்தால் அதை அகற்றி குழிகள் தயார் செய்ய.	50
4.	நடுவதற்கு வேண்டிய பொறுக்குக் கன்றுகள் எக்கருக்கு 70 கன்றுகள் வீதம் பண்ணையிலிருந்து கொடுப்பதற்கு கிரையம்.	50
5.	முதல் 5 வருடங்களுக்கு உரம் இட (உரமாகக் கொடுக்கப்படும்) எக்கர் ஒன்றுக்கு வருடத்திற்கு ரூ. 25 வீதம் 5 வருடங்களுக்கு.	125
6.	பூச்சி மருந்து நோய்தடுப்பு மருந்து, முதலிய சில்லரை செலவுக்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 5. வீதம் 5 வருடங்களுக்கு.	75
	மொத்தம் ..	400

இது தவிர 5 எக்கருக்கு மேல் தென்னை சாகுபடி செய்ய முன்வருபவர்களுக்கு கிணறு வெட்ட ரூ. 1,000 வீதம் கடன் தரப்படுகிறது. கிணறு வெட்டி கட்டி முடித்தால் ரூ. 250 மான்யமாகக் கழித்து விட்டு மீதி ரூ. 750 மட்டும் கடனாக வசூலிக்கப்படும். இவ்வாறு 500 கிணறுகள் வரை வெட்ட இத் திட்டத்தின்கீழ் கடனுதவி அளிக்கப்படும்.

இத் திட்டத்தின்கீழ் பலனடைய விரும்புபவர்கள் விண்ணப்ப நமூனாக்களை இராமநாதபுரத்திலிருக்கும் தென்னை விஸ்தரிப்பு அலுவலகத்திலும் ஒவ்வொரு நாற்றுப்பண்ணை உதவியாளர்களிடமும் அல்லது ஒவ்வொரு கிராம சேவக் இடத்திருந்தும் தவிர ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களிடமிருந்தும் பெற்று பூர்த்தி செய்து இராமநாதபுரம் தென்னை அபிவிருத்தி அலுவலருக்கு அனுப்பிவைக்கவும். இந்த விண்ணப்பத்திற்கு ஸ்டாம்பு கட்டணம் கிடையாது. இவ்வாறு பட்டாதார்களுக்கு கடனுதவி அளிக்க ரூ. 35 லட்சம் சர்க்காரால் இத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

முந்துங்கள் ! உங்களுடைய கிணறுகளை வெட்டிக்கொள்ள முந்துங்கள் !!

கிணறு வெட்ட ஓர் சுலபமான வழி

—: o :—

விவசாயிகளே ! பொதுமக்களே !! வணக்கம்.

உங்களுடைய பூமிகளிலும், வீடுகளிலும் புதுக் கிணறு, பழைய கிணறுகளில் ஊற்று உண்டா இல்லையா என்பதற்கும் நல்ல தண்ணீரா, உப்பு தண்ணீரா என்பதற்கும் தக்க ஆராய்ச்சியுடன் எனது அனுபவத்தில் மிகத் திறமையுடன் சொல்லப்படும். எங்கள் சுற்று வட்டாரத்திலும், வெளியூர்களிலும் பல விவசாயிகளுக்கு எனது ஆராய்ச்சியின் மூலம் தண்ணீர் கிடைத்து நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள். ஆகவே இச்சந்தர்ப்பத்தை இழக்காமல் என்னை நேரில் வந்து ஒருமுறை சந்தியுங்கள்.

கிணற்றை சோதனை செய்து மண், மதர், கல், தண்ணீர் இவைகள் எத்தனை, எத்தனை அடி ஆழத்தில் உள்ளது என்று சொல்வதற்கு சார்ஜ் ரூ. 30-ம் முன் பணமாக நேரிலோ தபால் மூலமாகவோ செலுத்தவேண்டும்.

சோதனைக்குப் பின் மேற்கண்ட விபரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லையென்றால் ஷை ரூபாய் 30-ல் ரூபாய் 20 வாபஸ் செய்யப்படும். போக்குவரத்து செலவு தனி. எங்கள் ஊரிலிருந்து 50 மைலுக்கு மேற்பட்டால் கிணறு ஒன்றுக்கு ரூ. 50 வழி செலவுபோக கொடுக்கவேண்டும். விபரங்களுக்கு தபால் எழுதி தெரிந்துகொள்ளவும். இந்த ஆராய்ச்சி பூராவும் எனது மகன் முத்துக் கவுண்டனுக்கும் சொல்லத்தெரியும்.

இப்படிக்கு

பெ. சங்கரநாராயணக் கவுண்டர்,
கிணற்று நீர் ஊற்று நிபுணர்,
வேம்பத்தி வெள்ளாள பாளையம் போஸ்டு,
சந்தைகடைத்தோட்டம்,
(வயா) ஜம்பை, பவானி தாலூக்கா,
ஈரோடு S. Ry. (கோயம்புத்தூர் ஜில்லா).

குறிப்பு.—எனது சோதனையின் மூலம் நல்ல பலனை அடைந்து எங்களூர் V. R. பழனிசாமி கவுண்டராலும், முனியப்பன்பாளையம் பொதுஜனங்களாலும் தங்கமெடல் பெற்றுள்ளேன். இன்னும் தூத்துக்குடி குலையன்கரிசல் D. ஆபிரகாம் அவர்களாலும் மற்றும் வெளியூர்களிலும் இருந்து அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றிருக்கிறேன். சமுத்திர சுற்று வட்டாரத்திலுள்ள பூமியில் உப்புத் தண்ணீர் எத்தனை டிகிரி கிடைக்குமென்றும் சொல்லமுடியும். மேலும் என் ஆராய்ச்சியின் மூலம் பூமியின் அடியில் உள்ள தங்கம், வெள்ளி, இரும்பு உலோகச் சுரங்கங்களை அறிந்து சொல்லமுடியும்.

கொல்லி மலையில் உருளைக் கிழங்கு சாகுபடி

(அர. கோவிந்தன், கே. ராதாகிருஷ்ண ஆல்வா, வெ. இலக்குமணன்.)

உணவுப் பயிரான ஊருளைக்கிழங்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்த தேவையில்லை. தமிழ் நாட்டில் நீலகிரி, கொடைக்கானல் மலைகளில், பெருவாரியாக பயிரிடப்படும் இக் கிழங்கு, சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையில் முதல் முதலில் மலைவாசிகளின் பொருளாதார உயர்வை அடிப்படையாக கொண்ட தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 1961-ம் ஆண்டு ஐப்பசி மாதம் புஞ்சை பயிராக உற்பத்தி செய்யப்பட்டது. விதைக் கிழங்கு எக்கருக்கு 454 கிலோகிராம் வீதமும், நஞ்சநாடு உப்பு உரக்கலவை எக்கருக்கு 726 கிலோகிராம் வீதமும் மலை வாசிகளுக்கு இலவசமாக குறைந்த அளவில் கொடுக்கப்பட்டது. பயிரின் வளர்ச்சியும் மகசூலும் நம்பிக்கை யூட்டும் வகையில் இருந்ததால், 1962-ம் ஆண்டு வைகாசி, ஐப்பசி பட்டங்களில் உருளைக் கிழங்கு விதைக்க பல மலை வாசிகளுக்கு மொத்தமாக சுமார் 2 எக்கர், 5 எக்கர் அளவுக்கு முறையே விதை விநியோகிக்கப்பட்டது. மேற்கண்ட மூன்று போக சாகுபடியால் விளைந்த அனுபவ சான்றாக ஏற்பட்ட முடிவுகள் பின்வருமாறு :—

சரிவில் உருளைக்கிழங்கு பயிர்.

சமதரையில் உருளைக்கிழங்கு பயிர்.

1. பரிசோதிக்கப்பட்ட மூன்று ரகங்களில் கிரேட் ஸ்காட் 90 நாட்களிலும், அப்-டு-டேட், பிரசிடெண்ட் இவைகள் பிந்தி (100 முதல் 110 நாட்கள்) பக்குவம் அடைபவைகளாகவும் இருக்கின்றன. பெருமளவு பருமனாக உள்ள அப்-டு-டேட் ரகம் " வால்கிழங்கு " என்ற பெயருடன் மலை வாசிகளின் உள்ளத்தை கவர்ந்தது. ஆனால் இதன் மகசூல் மற்ற இரு ரகங்களை விட குறைவாகவும் (மூன்றில் இரண்டு பாகம்), கிழங்குகள் சேமிப்பில் சீக்கிரம் கெடுவதாயும் காணப்பட்டது. பிரசிடெண்ட் ரகம் நோயால் அதிகம் தாக்கப்படுவதாக காணப்பட்டது. கிரேட் ஸ்காட் விரைவில் பக்குவம் அடைவதாலும் நடுத்தர உருண்டையான கிழங்குகளை உடையதாயும், மிருதுவான வெண்மையான தோலை உடையதாயும் இருப்பதால் ஆரம்பத்திலிருந்து இது மலை வாசிகளின் கவனத்தை கவர்ந்து பிரதான ரகமாக விளங்குகிறது. இதையே தொடர்ந்து அபிவிருத்தி செய்ய விவசாய இலாகா முடிவு செய்துள்ளது.

2. கொல்லி மலையில் காணும் தட்ப வெப்ப நிலை, பருவ மழை இவைகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு பருவங்களில் உருளைக்கிழங்கு மானாவாரி பயிராக செய்வது உகந்தது.

(அ) வைகாசிப் பட்டம் (மே விதைப்பு).

(ஆ) ஐப்பசி பட்டம் (அக்டோபர் விதைப்பு).

இவற்றில், பருவ மழையின் பராமரிப்பு நல்ல முறையில் உள்ளதால் வைகாசிப் பட்டம் சிறந்தாகும். ஐப்பசிப்



கொல்லிமலையில் விளைந்த கிரேட் ஸ்காட்.

பட்டத்தில் விதைத்தால் பயிரின் பிந்திய காலத்தில் மழை குறைவால் மகசூல் பாதிக்கப்படலாம். இவ்வாண்டில் நீர்ப் பாசனம், வடிகால் வசதி இரண்டும் ஒருசேர அமைந்துள்ள ஒரு சில இடங்களில் பங்குனி மாத பாசன பயிராக உருளைக்கிழங்கு சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருகின்றது.

3. கொல்லிமலையில் சாகுபடி நிலங்கள் யாவும் மண்வளப் பாதுகாப்பு தத்துவங்களை ஒட்டி இருப்பதில்லை. உருளைக்கிழங்கு பயிரை மலை சரிவுகளிலும் ஒரு சில இடங்களில் செயற்கையாக பண்படுத்தப்பட்ட சம நிலங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது. சரிவு நிலத்தில் பயிரிடுவதைக் காட்டிலும் மட்டம் செய்யப்பட்ட இடங்களில் சாகுபடி சுலபமாயும் பயிரின் தரம் உயர்ந்தும் காணப்படுகின்றது. எல்லா இடங்களிலும் தொழு உரம் போதுமான அளவு கிடைக்காததால் மலைவாசிகள் அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை. இயற்கை உரமான தொழு எரு, குப்பை, கம்போஸ்டு எரு இவைகளை ஏக்கருக்கு 3 முதல் 5 வண்டி அளவு உபயோகித்ததில் நல்ல பலன் கிடைத்துள்ளது. நஞ்ச நாடு உப்பு உரக்கலவையை ஏக்கராவுக்கு 880 கிலோகிராம் வீதம் விதைக்கும்போது விதைக்கும் வாய்க்காலில் போடுவது அவசியம்.

4. பயிர் முளைத்து சுமார் 6 அங்குல உயரம் வந்தபின் களையெடுக்கவும், பயிர் முளைத்த ஆறு வாரத்திற்கு பின் ஒரு முறை மண் அணைப்பதும் அவசியம். இரண்டாவது மூன்ருவது களையெடுத்தல் அந்தந்த நிலத்தை பொருத்திருக்கினறது.

5. மண்புழு (Soil Grub) தரைமட்டத்தில் துளைத்துக் கிழங்கை நாசம் செய்கினறது. இதை தவிர்க்க பி. எ. சி. 10 சத மருந்து தூவ சிபாரிசு செய்யப்படுகின்றது. ஆங்காங்கே வளையல் நோயும் காணப்படுகிறது. வளரும் காலத்தில் நோயினுல் பாதிக்கப்பட்ட செடிகளை தூருடன் அப்புறப்படுத்துவதும், கிடங்கில் அழுகும் கிழங்குகளை நீக்கி வியாதியற்ற விதைகளை விதைப்பதும் இது தடுக்க வழியாகும். கடந்த சில ஆண்டுகளாக நீலகிரி மாவட்டத்தில் நாசம் விளைவிக்கும் கருகல் நோய்கள் (Early and Late Blights) கொல்லி மலையில் குறிப்பிட தகுந்த அளவில் காணப்படவில்லை. இவற்றைத் தடுக்க 1½ ராத்தல் டைதேன் Z 78 மருந்தை 100 காலன தண்ணீரில் கலந்து, விதைத்த 35 அல்லது 40 நாட்களுக்குள் உபயோகிக்க வேண்டும்.

கடந்த இரண்டு வருட அனுபவத்திலிருந்து கொல்லி மலையில் வெற்றிகரமான உருளைக்கிழங்கு சாகுபடி சாத்தியம் என்பது திண்ணமாகிறது. இப்பயிர் விதைத்த அளவைவிட 5-லிருந்து 8 மடங்கு வரை மகசூல் கொடுக்கிறது. தற்போது மலைவாசிகளிடையே உருளைக் கிழங்கு சாகுபடியை ஊக்குவிக்க குறைந்த அளவில் விதையும், இரசாயன உரமும் இலவசமாக கொடுக்கப்படுகின்றது. இம்மக்களிடையே விதைசகு அதிகமாக இருக்கும் கிராகசி பயிரின் முக்கியத்துவத்தையும், குறுகிய காலத்தில் நிறைந்த வருவாயை கொடுக்க வல்லது என்பதையும் தெளிவாக்குகிறது. மலை வாசிகள் இலவசமாக சலுகைகள் பெருவதால் ஏக்கரா ரீதியில் சுமார் ரூபாய் 2,000 வரை லாபம் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆர்வமுள்ள சில மலைவாசிகள் சொந்தமாக உருளைக்கிழங்கு பயிர் சாகுபடி செய்ய முன் வந்திருப்பது வருங்காலத்தில் இம்மலைப் பிரதேசத்தில் உருளைக்கிழங்கு பிரதான பயிராக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

(36-ம் பக்கம் தொடர்ச்சி)

நீர்ப் பாசனங்களின் எண்ணிக்கை கூட, கால நிலையைப் பொறுத்து இருக்கின்றது. கால நிலை விபரங்களை ஒட்டி, 2·6 அங்குல நீரை உபயோகப்படுத்திய பீட்ரூட் கிழங்கு (Sugar beet crop), 4·7 அங்குல நீரை உபயோகப்படுத்திய பீட்ரூட் கிழங்கைவிட அதிக மகசூல் கொடுத்தது. நீர்ப் பாசனத்துடன் சாகுபடியாகும் பயிர்களுக்குக்கூட முதலிலிருந்து கடைசி வரை நீர்ப்பாசனம் தரவேண்டிய அவசியமில்லை. அமெரிக்காவில் மக்காச் சோளப் பயிரில் கதிர் வாங்கும் தருணத்தில் மூன்று வாரங்களில் மட்டும் நீர்ப் பாய்ச்சிய பயிரிலிருந்து 80 முதல் 90 சதம் வரையில் மகசூல் கிடைத்திருக்கின்றது. கோதுமையைப் பொறுத்த வரைக்கும் நடத்திய ஆராய்ச்சியில் விதைக்கும்பொழுது 4 ஏக்கர் அங்குலம் தண்ணீரும் பிறகு இரண்டு தடவை 50 நாட்களுக்கு ஒரு முறை 3 ஏக்கர் அங்குலம் தண்ணீரும் பாய்ச்சினுல் இலாபகரமான மகசூல் கிடைக்குமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சியில் கால நிலை புள்ளி விபரங்கள் நன்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பயிர்களின் மகசூலைச் சேகரித்து வைக்கும்பொழுதுகூட கால நிலையின் முக்கியத்தை நன்குணரவேண்டும். காற்றின் வெப்பமும் ஈரச் சத்தும் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயங்கள். நெல்லைப் பொறுத்தவரைக்கும் சேகரித்து வைக்கப்படும் தானியங்களில் 14 சத விகிதத்திற்குமேல் ஈரம் இருக்கக்கூடாது.

கால நிலை மாறுதல்களை நன்குணர்ந்து அவைகளை ஒட்டி நவீன விவசாய முறையைக் கையாண்டு நாடு செழிக்க வழி காண்போமாக.

பயிர்களுக்கு இரசாயன தழைச் சத்து உரத்தை 2, 3 தடவைகளில் அளிக்கவும்

மாநில புகையிலை அபிவிருத்தி அலுவலகத்தின் சாதனைகள்

(கே. சப்தரிஷி, மாநில புகையிலை அபிவிருத்தியாளர், சி. என். சுப்பிரமணியன், புகையிலை அபிவிருத்தி உதவியாளர்.)

தமிழ்நாட்டில் சுமார் 42,500 ஏக்கர்களில் புகையிலை பயிர் செய்யப்பட்டது என்றும் இதிலிருந்து 24,600 டன் பதம் செய்யப்பட்ட புகையிலை விளைந்தது என்றும் கணக்கிட்டிருக்கின்றனர். அதிக வருமானம் அளிக்கும் இப்பயிரின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழ்நாட்டு அரசாங்கம் புகையிலையின் உற்பத்தியைப் பெருக்கவும், நல்ல பொறுக்கு விதை ராசிகளை இலவசமாகக் கொடுத்தும், தக்க சமயத்தில் நோய், பூச்சிகளினின்றும் காப்பாற்றி உயரிய முறையில் நாற்றுக்களை உற்பத்தி செய்ய ஆலோசனைகள் கூறவும், புகையிலையின் தரத்தினை உயர்த்தவும் ஏற்பாடு செய்தது. இதன் பயனாக 1960-ம் ஆண்டு கோவையில் ஒரு மாநில புகையிலை அபிவிருத்தி அலுவலகம் நியமிக்கப்பட்டது. கடந்த 2½ வருடங்களில் இவ்வலுவலகம் கீழ்க்கண்ட வழிகளில் பணியாற்றி வந்துள்ளது.

1 **பொறுக்கு வித்துக்களை விநியோகம் செய்தல்.**—புகையிலைக்கு விதைகளை யாரும் விலைகொடுத்து வாங்கும் வழக்கமில்லை. ஆதலால் பொறுக்கு வித்துக்களை அரசாங்கம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அனுமதி தந்துள்ளது. உள்ளூர் விதைகளிருந்தும்கூட, பொறுக்கு வித்துக்களின் தன்மை அறிய ஆவல் உள்ள விவசாயிகள் பேராதரவு தந்து உதவினர். உள்ளூர் ராசிகளில் நல்ல செடிகளினின்றும், நோயற்ற செடிகளினின்றும் விதைகள் சேகரிக்கப்படாமல் போவதுண்டு. அச் சமயங்களில் பொறுக்கு விதைகளின் மேன்மை நன்கு புலப்படும். பொறுக்கு விதைகள் வேடசெந்தூர் புகையிலை ஆராய்ச்சிப் பண்ணையினின்றும் வாங்கி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதேபோல் 1962–63-ம் ஆண்டில் 30·8 கி. கிராம் விதை விநியோகம் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருந்தும், சுமார் 34·0 கிலோகிராம் உயரிய வித்துக்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2. **மேடைப்பாத்தி அமைத்துக் காட்டுதல்.**—புகையிலை நாற்றங்காலில் சாதாரணப் பாத்தியிட்டு விதைகளை அடம்பாகத்தெளிப்பதால் ஏற்படும் கேடுகளையும், அதனால் ஏற்படக்கூடிய அழுகல்நோய் (Damping off), பூசண வியாதிகளுக்கு தகுந்த மருந்துகளைத் தெளிக்க ஆலோசனைகளும், மேடைப்பாத்தி அமைப்பதால் ஏற்படும் நன்மைகள், குறைந்த விதை தெளித்து வலுவான கால்களை உடைய நாற்றுக்களைப் பெறுதல், நாற்றங்காலை நன்றாக உழுவதோடு மட்டுமின்றி குப்பை கூளம் போட்டு எரியவிட்டு மண்ணிலுள்ள கிருமிகளை கொல்லுவதால் (Soil sterilization) ஏற்படும் நன்மைகள், பாத்திக்கு இளத்து மண் தொழு உரத்தை நன்றாகப் பொடி செய்து பரப்பி விதை விதைப்பதால் உவர்நீர் கிணறாக இருந்தாலும், நாற்றுக்கள் வளரும் தன்மைகள், முதலியவற்றையும் எடுத்துச் சொல்லிக் காண்பிக்கப்பட்டன. 1961–62-ல் தமிழ்நாட்டில் 192 மேடைப்பாத்திகள் செய்து காண்பிப்பதாக திட்டமிடப்பட்டிருந்தது. 1,770 மேடைப்பாத்திகள் போட்டுக் காண்பிக்கப்பட்டன. இதே போல் 1962–63-ம் ஆண்டிலும் 1,715 பாத்திகள் போட்டுக் காண்பிக்கத்திட்டமிருந்தது. ஆனால் இதுவரை வந்த கணக்குகளிலிருந்து சுமார் 4,100 மேடைப் பாத்திகள் பல வட்டாரங்களில் போடப்பட்டு பாராட்டுதலுக்குரியதாயிற்று. விவசாயிகள் பொதுவாக மேடைப்பாத்தியின் விசேஷ நன்மைகளை அறிய தலைப்பட்டுள்ளனர்.

3. **புகையிலைக்கு உரப் பரிசோதனை செய்து காண்பித்தல்.**—தமிழ்நாட்டில் முக்கியமாக அனைவரும் புகையிலைக்குத் தொழு உரம், கம்போஸ்டு போடுவது மட்டுமின்றி செயற்கை உரங்களையும் இரண்டு மூன்று முறை வைக்கும் வழக்கம் பரவலாகக் காண்கிறது. ஆனால் கலப்பு உரம் வைப்பவர்கள் மிகவும் சிலரே! கலப்பு உரம் வைப்பதால் ஏற்படும் பலாபலன்களையும் எடுத்துக் கூறுவதோடு, மகசூல் அதிகம் கிடைப்பதையும், பூப்பு, காரம், மணம் அம்பாரத்தில் அதிகம் உண்டாவதையும் அவர்களே நேரிடையில் உரப் பரிசோதனைகளைச் செய்து காட்டுவதுமில்லாமல், மான்யத் தொகையாக ரூ. 65-ம் கொடுத்து உதவுகின்றனர்.

1961–62-ம் ஆண்டு சுமார் 100 இடங்களில் தமிழ்நாடு முழுவதும் செய்த பரிசோதனையின் மூலம் சராசரி 458 பவுண்டு அதிகம் கிடைக்கக்கூடும் என்று தெரியவந்தது.

4. **பொறுக்கு வித்துக்களின் நாற்றுக்களை உள்ளூர் நாற்றுக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தல்.**—தமிழ்நாட்டில் வாய்ப் புகையிலை மட்டுமின்றி (Chewing types) நாட்டுச் சுருட்டு (Country cheroot), சாம்பு சுருட்டு என்று சொல்லும் சிகார் (Cigar) அதனைச் சுற்றும் மேலுறைகள் (Wrappers) அங்காங்கே விளைகின்றன. வேடசெந்தூரில் உள்ள புகையிலை ஆராய்ச்சிப் பண்ணையில், பல வருடங்களாகத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ததின் பயனாகப் பொறுக்கு வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அவைகளின் தன்மைகளை அறிய ஒவ்வொரு மாவட்டத்திலும் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன

1. வாய்ப்புகையிலை	..	கோயமுத்தூர், மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்கள்.
2. நாட்டுச் சுருட்டு	..	கோவை(பவானித்தாலுக்கா), சேலம் மாவட்டங்கள்.
3. காம்புச் சுருட்டு	..	திருச்சி மாவட்டம்.
4. மேலுறை ராசிகள்	..	கோவை மாவட்டம் (பவானித் தாலுக்கா).
5. பூஞ்சுருட்டு Cigarette	..	சேலம் மாவட்டம் (ஹொசூர் தாலுக்கா).

நாட்டுச் சுருட்டிற்கு பவானித் தாலுக்காவில் செய்த பரிசோதனை மிகுந்த உற்சாகத்தை அளிக்கவல்லதாக இருக்கிறது. அதுபோல் மேலுறை ராசிகள் (Wrappers), அயல் நாட்டிற்குரிய உருவமாதிரிகள் (Exotic types) பாராட்டத் தகுந்த முறையில் விளைந்துள்ளன. முக்கியமாக மேலுறை ராசிகள் தொடர்ந்தாற்போல் எரியும் சக்தி உடையதாகவும், சாம்பல் வெண்மை நிறம் கொண்டதாகவும் உள்ளன. சென்ற ஆண்டு இதனைப் பரீட்சார்த்தமாக வாங்கிய வியாபாரிகள் மேலும் அதிக அளவில் பயிர் செய்யப்படுங்கால் வாங்க உற்சாகமுடனிருக்கின்றனர். ஆதலால் உள்ளூர் நாற்றுக்கள்தான் சிறந்தன என்ற நிலைமை மாறி பொறுக்கு வித்துக்களின் நாற்றுக்களின் மேன்மை தெரியலாயிற்று.

1962–63-ல் முதன் முறையாக பூஞ்சுருட்டு தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் ஹொசூர் தாலுக்காவில் நன்முறையில் உற்பத்தி செய்யமுடியும் என்பதை ஆராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன. ஆந்திராவிற்குரித்தான் பூஞ்சுருட்டு தமிழ்நாட்டிலும் உற்பத்தி செய்ய முடியும் என்பதனை பரீட்சார்த்தமாக நிரூபித்து இந்த அலுவலகம் செய்த பணிகளில் மிகவும் முக்கியமாகும். விவசாயிகள் நாற்றுக்களை இலவசமாகப் பெறுவது மட்டுமின்றி அதன் தராதரங்களை ஒரே சமயத்தில் அறியவும் ஒரு வாய்ப்பு உண்டாக்கப்பட்டுள்ளது.

தீவிர உர விநியோகத் திட்டம் (Intensive Manuring Scheme)—1961–62-ம் ஆண்டில் புகையிலைக்கு தீவிர உர விநியோகத் திட்டம் அமுலில் கொண்டுவரப்பட்டது. கோவை கோட்டாட்சித் தலைவர் முதன் முறையாக ரூ. 1,50,000 கோவை மாவட்டத்திற்கு இவ்வலுவலகத்தின் யோசனையின்பேரில் ஒதுக்கி உதவியது சிறந்த ஊன்று கோலாகத் திகழ்ந்தது. 1962–63-ல் இதனைப் பயன்படுத்தி முன்கூட்டியே விரிவுபடுத்தி தமிழ்நாடு முழுவதற்கும் இந்த வசதியை ஏனைய புகையிலை உற்பத்தியாளர்களுக்கும் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு அரசாங்கம் சுமார் எட்டு லட்சம் ரூபாயை புகையிலைக்கு மட்டும் தீவிர உர விநியோகத்திற்கு கடனாக ஒதுக்கித் தந்துள்ளது. இதில் சுமார் ரூபாய் ஆறுலட்சம் (5,76,840) வரை கோவை மாவட்ட விவசாயிகளுக்கு மட்டும் கிடைத்துள்ளது.

தீவிர சாகுபடி திட்டம் (Package Programme).—நமது நாட்டில் உணவு பற்றாக்குறையைப் போக்க, சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள நெற்பயிருக்கு தஞ்சை மாவட்டத்தில் "தீவிர சாகுபடி திட்டம்" அமுலில் உள்ளது. அதுபோல் எண்ணெய் வித்துக்களில் நிலக்கடலைக்கும் தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு தீவிர சாகுபடி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1965–66-ம் மூன்றும் ஆண்டு திட்டத்தின் இறுதியில் சுமார் 23,750 எக்கர்கள் விஸ்தரிக்க முடியும் என்று திட்டமிட்டிருக்கின்றனர். தென்னாற்காடு மாவட்டத்தில் கொண்டுவந்ததுபோல, கோவை மாவட்டத்திற்கும் இதனை விரிவாக்கியுள்ளனர். பருத்தி உற்பத்தியைப் பெருக்கவும் தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் வந்துள்ளது. இவைகளையெல்லாம் போல புகையிலையினையும் முக்கியமான பயிராகக் கருத்தில் கொண்டு, தீவிர சாகுபடி திட்டத்தின்கீழ் கொண்டுவர முயற்சி நடைபெற்று வருகிறது. கோவை மாவட்டத்தில் மட்டும் சுமார் 28,000 எக்கர்களில் புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது. உரப் பரிசோதனைகளின் மூலம் உற்பத்தி பெருக வழி உண்டு என்பதை மேலே கண்டோம். ஆதலால் கலப்பு உரம் கடனிலும், தக்க சமயத்திலும் விவசாயிக்குக் கிடைக்க வழி செய்தல், நோய், பூச்சிகளினின்றும் புகையிலையைக் காக்க தகுந்த சமயத்தில் மருந்துகளை பாதி விலைக்குக் கொடுத்தல்—இவ்விதம் செய்வதால் விவசாயிகள் ஊக்கம் காட்டி அரசாங்கத்துடன் ஒத்துழைத்து வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று கருதி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. முதலில் பல்லடம், அவினுசி தாலுக்காக்களில் இவ்வேலையைத் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வருட மொன்றிற்கு ?,000 எக்கர்களை இத்திட்டத்தில் கொண்டு வந்தால் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தினிறுதியில் 6,000 எக்கர்கள் இத் திட்டத்திலடங்கும். உற்பத்தியும் 1,005 டன் கூடுதலாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருபது ஆண்டுகளான பழைய வெல்லம்

ஆயுர்வேத ஆராய்ச்சிக் குழு, டெல்லி.

இருபது ஆண்டுகளான பழைய வெல்லம் அடங்கிய ஒரு பானை 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந்தேதி அன்று ஸ்ரீ தேஜாசிங் என்ற பஞ்சாபி வைத்யரால் டில்லி ஆயுர்வேத ஆராய்ச்சி கவுன்சிலின் தலைவரான கவிராஜ் கே. எல். கேத்தல் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்த பழைய வெல்லமானது ஒரு தீவிரமான ரத்த சுத்தியாகும். மேலும் சொஸ்தப்படுத்தும் ஒரு பொதுவான மருந்துமாகும். திமிர் வாதம், போலியோ, ஜீரணம், சிறுநீர் போக்கு முறைகள் சம்பந்தப்பட்ட நோய்கள் போன்ற பல்வேறு வியாதிகளுக்கும் உபயோகப்படுத்தப்படும் மருந்துகளின் சொஸ்தப்படுத்தும் மதிப்பை ஆச்சரியகரமாக இது உயர்த்துகிறது. இந்த வெல்லம் ஒரு பிரபலமான டானிக்கை தன்னுள் கொண்டுள்ளது. இதன் மூலம் ஒரு லாகூர் ஆயுர்வேதி முந்தைய இளவரசர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்துள்ளார்!

நாடு செழிக்க அதிக உணவை உற்பத்தி செய்யுங்கள்

குறைந்த செலவில் மிகுந்த பலன்!

[கா. சிவப்பிரகாசம், பி.எஸ்சி. (வேளாண்மை), ச. பத்மநாபன், எம்.எஸ்சி, பூசண இயற் பிரிவு, விவசாயக் கல்லூரி ஆய்வுக்கூடம், கோவை.]

விதைப்பதற்குமுன் விதைகளில் மருந்திட்டால் பல நோய்களை மிகக்குறைந்த செலவில் தடுக்கலாம். நெல்லில் தூர் அழுகல், தோகைப்புள்ளி, சோளத்தில் கரிப் பூட்டை, இஞ்சியில் கிழங்கு அழுகல், நிலக்கடலையில் வேர் அழுகல், கரும்பில் விதைக்கரணை அழுகல் முதலிய பூசண நோய்களும், பருத்தியில் பாக்டீரியாவினால் ஏற்படும் கருங்கிளை நோயும் விதைகளின் மூலம் பரவும் நோய்களில் முக்கியமானவை.

1. நெல்தூர் அழுகல் (Foot-rot).—இந்நோய் ஒருவகை பூசணத்தால் (Fusarium moniliforme) ஏற்படுகிறது. இதனால் நாற்றங்காலில் உள்ள நாற்று பருமன் இல்லாது நீண்டு வளர்ந்து வெளிறிய நிறமடைந்து, பின் கருகி விடுகின்றது. நட்ட பயிர்களும் இதே நிலையை அடைவதுடன் அவைகளின் தூருக்கு மேலுள்ள கணுக்களைச் சுற்றிலும் விழுதுகள் போன்ற வேர்கள் (Adventitions roots) தோன்றி யிருப்பதை யும் காணலாம். தூர் அழுகி மிகுந்த சேதத்தினை விளைவிக்கிறது. பெரும்பாலும் கதிர்கள் வெளிவருவதற்கு முன்பே பயிர்கள் காய்ந்து விடுகின்றன.



நெல் தூர் அழுகல்

தடுப்புமுறை.—30 இராத்தல் நெல்லுக்கு ஒரு அவுன்ஸ அக்ரசான் மருந்தைக் கலந்து சுமார் 15 நிமிடங்கள் விதை குலுக்கும் கருவியில் இட்டு குலுக்க வேண்டும். விதை நெல்லின்மேல் இத்தகைய பூசணங்கள் ஒட்டிக் கொண்டிருந்தால் இதன் மூலம் அழிக்கப்படுகின்றன. நெல்லை ஊரப் போடுவதற்கு முன்பே மேற்கூறியபடி செய்து பின்பு முளைப்பதற்கு நீரில் ஊரப் போடவேண்டும்.

நெல் தோகைப்புள்ளி

2. நெல் தோகைப்புள்ளி (Leaf Spot).—இந்நோயும் ஒருவகை பூசணத்தால் (Helminthosporium oryzae) விதைகளின் மூலம் பரவுகிறது. நீண்ட செங்கல் வடிவ பழுப்பு நிறப்புள்ளிகள் தோகைகளில் தோன்றுவது இந்நோயின் அறிகுறியாகும். இந்நோய்க்கு ஏற்ற சூழ்நிலை இருந்தால் கதிரின் தொண்டைப் பாகத்தைத் தாக்கும். கதிரும் பதராகிவிடும்.

தடுப்புமுறை.—இதற்கும் 30 ராத்தல் விதைக்கு 1 அவுன்ஸ் அக்ராசன் மருந்திட்டுக் குலுக்கவேண்டும்.

3. சோளம்-கரிப்பூட்டை.—(Short smut) இந்நோயை உண்டாக்கும் பூசணம் விதைகளுடன் முளைத்து பயிர்களிலே வளர்ந்து கதிர்கள் வெளிவந்தபின் இந்நோயின் அறிகுறியைக் காட்டுகிறது. தானியங்கள் முழுவதும் கருமையான பொடிகளை உடையதாக மாறி விடுவதால் மிகுந்த சேதம் ஏற்படுகிறது.

தடுப்புமுறை.—15 இராத்தல் விதைக்கு ஒரு அவுன்ஸ் கந்தகம் வீதம் கலந்து பின்பு விதைக்க வேண்டும்.



சோளம் கரிப்பூட்டை



இஞ்சி கிழங்கு அழுகல்

4. இஞ்சி கிழங்கு அழுகல் (Rhizome Rot).—இந் நோயினால் ஆரம்பத்தில் இலைகள் வெளிறிய நிறத்தை அடைகின்றன. பின்பு இலையின் நுனிப்பாகம் மஞ்சள் நிறம் பெற்று இலை முழுவதற்கும் பரவுகிறது. இலைகள் யாவும் உதிர்ந்து செடியும் காய்ந்து விடுகிறது. செடி முழுவதும் தாக்கப்பட்டு கிழங்குகள் அழுக ஆரம்பித்து விடுகின்றன. விதைக்காக சேமித்து வைக்கும் கிழங்கு களும் அழுகி விடுகின்றன.

தடுப்புமுறை.—விதைக்கிழங்குகளை 0·1 சதவிகித பாத ரசக் குளோரைடு (Mercuric Chloride) கரைசலில் ஒன்றரை மணி நேரம் நனைத்து வைத்திருந்து பின்பு உபயோகிக்க வேண்டும். விதைக் கிழங்குகளை 0·25 சத விகிதம் நீரில் கரையும் செரசானில் (Wet–Ceresan) முப்பது நிமிடங்கள் நனைத்து வைத்திருந்தும் மேற்கூறிய நோயினைத் தடுக் கலாம்.

5. நிலக்கடலை வேர் அழுகல் (Root-rot).—இந் நோயின் ஆரம்பத்தில் செடியின் தண்டுப்பாகம் சிவந்த பழுப்பு நிறமாக மாறுகிறது. பிறகு வேர்ப்பாகம் முழு வதும் அழுகத் தொடங்குகிறது. வேர்ப்பாகத்திலும் தண்டின் அடிப்பாகத்திலும் கருநிறப்பொடிகள் தென் படுகின்றன. தாக்கப்பட்ட செடி முழுதும் காய்ந்துவிடும். மிகுதியான தாக்குதலாயின் நிலக்கடலைக் காய்களும் (nuts) பாதிக்கப்படுகின்றன.

தடுப்புமுறை.—விதைக்கு முன்பு 20 இராத்தல் விதைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் அக்ரசான் அல்லது செர சான் என்னும் பாதரச மருந்திட்டுக் குலுக்கவேண்டும்.

விதை குலுக்கும் கருவி

உணவுப் பொருளை அதிகமாக விளைவித்து பகைவரை விரட்டுங்கள்



கரும்பு விதைக்கரணை அழுகல்

6. கரும்பு விதைக்கரணை அழுகல் (Sett rot).—இந் நோயை உண்டாக்கும் பூசணம் (Ceratocystis paradoxa) அன்னுசிப் பழத்தில் (Pineapple) அழுகல் நோயை உண்டாக்குவதற்கும் காரணமாக இருப்பதால் இதனை அன்னுசிப்பழ நோய் என்றும் கூறுவதுண்டு. கரும்பு விதைக்கரணைகள் (Setts) முளைக்கு முன்பு இப்பூசணத்தால் தாக்கப்படுவதால் இவைகள் முளைக்காமல் அழுகிவிடுகின்றன. சில சமயங்களில் வளர்ந்த கரும்புகளும் பாதிக்கப்படுகின்றன. இதனுல் தாக்கப்பட்ட பகுதி முதலில் சிவப்பு நிறம் பெற்று பின்பு கருமையாக மாறி விடுகிறது.

தடுப்புமுறை.—நடுவதற்கு முன்னுல் விதைக்கரணைகளை ஒரு சதவிகித போர்டோ கலவையில் நனைத்து பின்பு நடவேண்டும். ஒரு இராத்தல் அகலால் (Agallol) என்னும் பாதரச மருந்தை 20 காலன் தண்ணீரில் கரைத்து அக்கரைசலில் விதைக்கரணைகளை நடுமுன்பு நனைத்தும் இந்நோயினைத் தடுக்கலாம்.

7. பருத்தி கருங்கிளை நோய் (Block arm).—இந்நோய் ஒருவகை பாக்டீரியாவினுல் உண்டாகிறது. இதனுல் பருத்தி இலைகளில் முக்கோண வடிவமான புள்ளிகள் தோன்றும். பின்பு நரம்புகளும் இலைக் காம்புகளும் கருமையாகி விடுகின்றன. இலைகள் உதிர்வதுடன் காய்களும் அழுகத் தொடங்குகின்றன.

தடுப்புமுறை.—20 இராத்தல் விதைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் அக்ரசான் அல்லது செரசான் மருந்தினைக் கலந்து குலுக்கி விதைக்க வேண்டும்.

எச்சரிக்கை விதிகள்.—

1 பாதரச மருந்துகள் மிகவும் நஞ்சுள்ளவையாதலால் மிகுந்த கவனத்துடன் அவைகளைக் கையாள வேண்டும்.

2 மருந்து கலக்கும் அலுவல் முடிந்ததும் கைகளை நன்ருகக் கழுவவேண்டும்.

3 மருந்திட்ட விதைகளை எக்காரணத்தைக் கொண்டும் உணவாகப் பயன்படுத்தக் கூடாது. கோழிகளுக்கும் தீவனமாக வைத்தல்கூடாது.



பருத்தி கருங்கிளை நோய்

விவசாயிகளின் விரோதி நெம்பர் 1

நெற் பயிரை அழிக்கும் குருத்துப் பூச்சியை (STEM BORER)

ஒழிக்க

FOLIDOL E. 605—46·7 சத வீதம் உபயோகியுங்கள்

தடுப்பு முறைகள்

1. 0·025 சத வீதம் பாலிடால் கலவையை நாற்றங்காலில் தெளிக்கவும்.
2. 0·025 சத வீதம் பாலிடால் கலவையில் நாற்று முடிச்சுகளை மூழ்கி எடுத்து வயலில் நடவும்.
3. 0·05 சத வீதம் பாலிடால் கலவையை நட்ட ஒரு மாதத்திற்குப் பின்னும், அறுவடைக்கு ஒரு மாதத்திற்கு முன்னும் தெளிக்கவும்.

நெற்குருத்துப் பூச்சியே யன்றி, படைப் புழு, பச்சை, வெள்ளைத் தத்துப் பூச்சிகள், கதிர் நாவாய்ப் பூச்சி மற்றெல்லா பூச்சிகளிலிருந்தும் பாதுகாப்பு அளிக்கிறது.

ஒருமுறை உபயோகித்தவர்கள் மறுபடியும் விரும்பி உபயோகிக்கும் உத்தமமான பூச்சி மருந்து.

வெற்றி உங்களுடையதே !

ஞாபகமிருக்கட்டும். இது ஒரு பேயர் தயாரிப்பு.

தமிழ்நாடு, கேரளாவிற்கு பூர்ண விநியோகஸ்தர்கள் :

ஏ. வி. தாமஸ் & கம்பெனி லிட்.
தபால் பெட்டி 47, ஆலப்புழை.

ஏ. வி. தாமஸ் & கம்பெனி (இந்தியா) லிட்.
தபால் பெட்டி 1603, மதருஸ்-1.

கோயமுத்தூர் ஜில்லா :

ஆர். சுப்ரமண்யம்,
53, பொன்னுரங்கம் ரோட்,
ஆர்.எஸ்.புரம், கோவை.

மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்கள் :

ஏ பி. வி. சன்ஸ்,
13, சுவாமி சந்நதி வீதி,
கீழ்மாசி வீதி, மதுரை.

தஞ்சை, தென் ஆற்காடு ஜில்லாக்கள் :

ராஜாராம் டிரேடர்ஸ்,
பஜாஜ் மான்ஷன்,
வில்லியம்ஸ் ரோட், திருச்சி-1.

திருச்சிராப்பள்ளி ஜில்லா :

ஷேக் அலாவுத்தின்,
தபால் பெட்டி 462,
பாலக்கரை ரோட், திருச்சி-8.

திருநெல்வேலி ஜில்லா :

எஸ். ஆர். சுப்ரமண்ய பிள்ளை,
திருநெல்வேலி ஜங்ஷன்.

கன்யாகுமரி ஜில்லா :

தாம்ஸன் ஏஜன்ஸிஸ்,
நாகர்கோவில்.

சேலம், ஏற்காடு :

தி ஏற்காடு காபி வொர்க்ஸ் லிமிடெட்
கண்ணன்குரிச்சி போஸ்ட், சேலம்.

வாழையில் முடிக்கொத்து நோய், ஜாக்கிரதை!

(தமிழ்நாடு விவசாயச் செய்தி நிலைய வெளியீடு)

நமது நாட்டில் முக்கியப் பழ வகைகளில் வாழையும் ஒன்றாகும். தமிழகத்தின் முக்கனிகளிலும் வாழை இடம் பெறுகிறது.

நல்ல வருவாயைத் தரும் இந்த வாழையில் நுண் நோக்கி (Microscope) க்கும் தெரியாத வைரஸ் (Virus) என்ற நுண்ணுயிரால் ஒரு புது நோய் தோன்றி நிலவி வருகிறது. இதற்கு முடிக்கொத்துநோய் (Bunchy Top) என்று பெயர். இந்நோய் நமது நாட்டில் ஒரிஸ்ஸா, மைசூர், பம்பாய், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங் களில்மட்டும் இருந்துவந்தது. இப்போது முக்கியமாக தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணம் தாலூகாவிலும் தமிழ் நாடடில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங் களிலும் பரவிவருகிறது. ஆடுதுறை, திருமங்கலக்குடி, தியாகராஜபுரம் ஆகிய கிராமங்களில் இந் நோயால் அதிக சேதம் விளைந்துள்ளது. நம் மாகாணத்தில் பயிராகும் எல்லாவித வாழை ரகங்களும் இந்நோய்க்கு ஆளாகலாம்.

முடிக்கொத்து நோய் விரைவில் பரவி வாழைத் தோட்டங்களை அழித்து விவசாயிகளுக்கு பெருஞ் சேதம் விளைவித்து வருவதால் இந் நோயை அடியோடு ஒழிக்க உடனடியாக முயற்சிகள் எடுப்பது மிகவும் அவசியமாகும்.

நோயின் அறிகுறிகள்

முடிகொத்து நோயின் அறிகுறிகள் முதன் முதலில் இலைகளில் காணப்படும். வாழை இலைகளை சூரிய வெளிச் சத்தின் பக்கமாக வைத்து கீழிருந்து பார்த்தால் இலையின் கிளை நரம்புகளுடன் (Secondary veins) பச்சை நிறக் கோடுகள் இடை இடையே தென்படும். இதன்பின் தோன்றும் இலைகள் எல்லாம் சாதாரண இலைகளைப்போல் இல்லாமல் குட்டையாகவும் குறுகலாகவும் இருக்கும். ஒடித்தால் ஒடிந்துவிடும். இலைகளின் ஓரங்கள் வளைந்தும் சுருண்டும் காணப்படும். பாதிக்கப்பட்ட இலைகள் எல்லாம் செங்குத்தாக நிற்கும். மரம் குட்டையாக இருக்கும். இலைகள் எல்லாம் ஒரே இடத்திலிருந்து தோன்றுவதுபோல் கொத்தாகக் காட்சியளிக்கும். முடிக்கொத்து நோயால் பாதிக்கப்பட்ட மரங்களில் இவ்வாறு இலைகள் கொத்தாகத் தோன்றுவது வேறு எந்த நோய்க்கும் இல்லாதத் தனித் தன்மையாகும். ஆனால் இந்த அறிகுறி வாழை மரம் நோயால் பாதிக்கப்பட்ட சில வாரங்களுக்குப் பிறகுதான் தோன்றும். முடிக்கொத்து நோயால் பாதிக்கப்பட்ட வாழை மரங்கள் வளராமலும், காய்க்காமலும் நெடு நாட்கள் வரைக்கும் இருக்கும். சில காய்த்தாலும் காய்கள் சிறுத்து பயனற்றவைகளாகிவிடும். மரம் இரண்டரை அடிக்குமேல் நின்றுவிடும். வேர்ப்பகுதி பாதிக்கப்பட்டு சீர் குலைந்திருக்கும். வாழை முளைப்பதிலிருந்து காய்க்கும் காலம் வரை எந்தப் பருவத்திலும் இந்நோய் வாழை மரத்தைத் தாக்கும் தன்மை வாய்ந்தது.

நோய் பரவும் விதம்

இந் நோய் பென்டலோனியா (Pentalonia nigronervosa) என்ற அசுவினிப் பூச்சியால் (Aphid) ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குப் பரவுகிறது. நோய் தாக்கிய கிழங்குகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லும்போது இந்நோய் விரைவில் பரவுகிறது.

ஒரு வாழைக்கன்று இந்நோயால் தாக்கப்பட்டாலும் தூர் முழுவதும் பரவி வாழையை அழித்துவிடும். அத் தூரிலிருந்து பின்னால் உண்டாகும் கன்றுகள் மிகவும் பாதிக்கப்படும்.

தடுப்பு முறைகள்

1. வாழைத் தோட்டத்தில் முடிக்கொத்து நோய் தாக்கிய கிழங்குகள் அல்லது கன்றுகள் காணப்படுகின்றனவா என்று அடிக்கடி சோதித்துப் பார்க்கவேண்டும்.

2. நோயால் தாக்கப்பட்ட கிழங்குகளை அடியோடு தோண்டி எடுத்து ஆழமான குழிகளில் போட்டு மூடிவிட வேண்டும்.

3. நோயால் தாக்கப்பட்ட கிழங்குகளைச் சுற்றியுள்ள தூர் முழுவதிலும் பூச்சி மருந்துகளைத் தெளித்து அசுவினி களைக் கொல்லவேண்டும்.

4. நல்ல கிழங்காகத் தோன்றினாலும் நோய்தாக்கிய தோட்டங்களிலிருந்து அவைகளை வாங்கி நடக்கூடாது. ஏனென்றால் நட்டபின்னர் அவற்றில் முடிக்கொத்து நோய் தோன்றலாம்.

5. முடிக்கொத்து நோயை ஒழிப்பதில் தோட்டக் காரர்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். தோட் டத்தின் ஒரு சிறு பகுதி கவனிக்கப்படாமல் விடப்பட்டாலும் எல்லாத் தோட்டங்களும் இந் நோய்க்கு பலியாகி அழிந்து விட ஏதுவாகும். ஆகையால் தடுப்பு முறைகள் எல்லாத் தோட்டங்களிலும் ஏக காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் வாழையின் முடிக்கொத்து நோயை ஒழித்து முழுவெற்றி காண முடியும்.

அமோக விளைச்சலைப்பெற விவசாய இலாகாவினரை அணுகுங்கள்

வெற்றிலையில் காணும் பூஞ்சண நோய்கள்

(Diseases of Betelvine)

[பூ. பாலின் கொர்னேலியஸ் B.Sc. (Ag.), உதவியாளர், பயிர் பாதுகாப்பு அலுவலகம் (காளான் கலை), கோவை.]

வெற்றிலை நம் தமிழ் நாட்டில் விவசாயிகளின் ஒரு முக்கியப் பயிராக இருந்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் வெற்றிலை பெருவாரியாகப் பயிர் செய்யப்படுகிறது. காரணம், இது அதிக வருவாயைத் தரும் ஒரு பயிராகும். ஆகவே இவ் வெற்றிலையை பூஞ்சண நோய்களினின்று காப்பது மிகவும் அவசியமாகும்.

வெற்றிலை, வாடல் நோய் (wilt disease), சாம்பல் நோய் (powdery mildew) முதலியவற்றால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கும் பெரு நஷ்டத்தை விளைவிக்கிறது.

வாடல் நோய் (wilt disease).—இந்நோய் பைட்டோப்தோரா பாமிவோரா (Phytophthora palmivora) என்னும் பூஞ்சணத்தால் உண்டாகிறது. இந் நோயினால் தாக்கப்பட்ட வெற்றிலைக் கொடியின் நுனியானது நிமிர்ந்து படராமல் வாடி, வளைந்து கீழே தொங்குகிறது. இலைகளும் வாடி சுருங்கி விடுகின்றன. கடைசியில் கொடிகள் கருகி, பட்டு விடுகின்றன. இந் நோயை ஒழிக்க வெற்றிலைத் தோட்டத்தில், முக்கியமாக கொடியின் அடிப்பாகத்தைச் சுற்றியுள்ள மண் பரப்பை போர்டோ கலவையினால் மாதத்திற்கு ஓர் முறையாக நனைக்க வேண்டும். மேலும் அதிகக் குளிர்ச்சியான நிலை இந்நோய் பரவ சாதகமாக அமைவதால் வெற்றிலைக் கொடிக்கு அதிக நிழல் இருக்கக்கூடாது. அதிகமாக நீர் பாய்ச்சவுங்கூடாது.

வாடல் நோயானது ஒரு வித பாக்டீரியாவினாலும் (Bacterial wilt) உண்டாகிறது. இதனால் வெற்றிலைக் கொடிகளில் கரிய நிறக்கோடுகள் காணப்படுகின்றன. கொடியின் மேற்பாகத்திலுள்ள கிளைகள் அதிகமாகத் தாக்கப்பட்டு கடைசியில் வாடி பட்டு விடுகின்றன. இந் நோய் "கருந்தாள் எண்ணெய் வரி" என்று பலரால் அழைக்கப்படுகிறது. இதை ஒழிக்க, வாடிய இலைகளையும் கிளைகளையும் அப்புறப்படுத்த வேண்டும் அல்லது அவைகளை பூமியில் ஆழத் தோண்டி புதைத்துவிட வேண்டும். போர்டோ கலவை அல்லது மற்ற தாமிரம் கலந்த மருந்துகளைத் தெளிப்பது நல்லது.

சாம்பல் நோய் (Powdery mildew).—வெற்றிலையைத் தாக்கி நாசம் விளைவிக்கும், நோய்களில் சாம்பல் நோயும் ஒன்றாகும். இது 'ஆய்டியம் பைப்பரிஸ்' (Oidium piperis) என்னும் பூஞ்சணத்தால் உண்டாகிறது. இந் நோயினால் தாக்கப்பட்ட இலைகளின் மேற்பரப்பில் ஒருவித வெண்ணிறப்பொடி பரவியது போல் காணப்படும். இதனால் இலைகள் சத்திழந்து தரம் கெடுகிறது. வெற்றிலைக் கொடியும் வளர்ச்சி குன்றி காணப்படும். கந்தகப்பொடியை டஸ்டர்கள் மூலம் தூவுவதே இந்நோய் ஒழிக்கும் சிறந்த முறையாகும். கந்தகப்பொடி ஒரு விஷமாக இருப்பதால் வெற்றிலைகளை நன்றாக கழுவிய பின்னரே விற்பனைக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

கிளை உலரும் நோய் (Die-back disease).—இந் நோயானது கொலிடோட்ரைக்கம் (Colletotrichum) என்னும் பூஞ்சணத்தால் உண்டாகிறது. இதனால் வெற்றிலைக் கொடியின் கிளைகளிலுள்ள கணுக்கள் கருப்பாக மாறி வாடுகிறது. கிளைகள் வாடுவதால் அதிலுள்ள இலைகளும் வாடி பெரும் நஷ்டத்தை உண்டாக்குகிறது. நோயினால் தாக்கப்பட்ட கிளைகளை முதலில் வெட்டிவிட வேண்டும். பிறகு ஒரு சதவீத போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

சில வேளைகளில் வெற்றிலையில் இலைப்புள்ளி நோயும் (Leaf spot disease) காணப்படுகிறது. ஆனால் இந் நோயினால் அதிக அளவில் சேதம் உண்டாவதில்லை. இந்நோய் கண்டவுடன் தாமிரம் கலந்த மருந்துகளைத் தெளிப்பது நல்லது.

இவ்வாறு மேற்கூறிய பாதுகாப்பு முறைகளினால், வெற்றிலையை, அதைத் தாக்கும் நோய்களினின்று சிறந்த முறையில் காப்பாற்றி அதிக அளவு லாபம் பெறலாம்.

பூச்சி மருந்துகளினுல் ஏற்படும் விபத்துகளை தடுக்கும் மாற்று மருந்துகள்

(இ. வி. அப்ரஹாம், எம். டி. பத்மநாபன், பூச்சி இயல் பிரிவு, கொடைக்கானல்.)

தற்காலத்தில் பயிர்ப்பாதுகாப்பு முறையில் விஷ சத்துள்ள ரசாயனப் பொருள்களான டி டி.டீ. (D.D.T.), பி.எச்.சி. (B.H.C.), பாலிடால் (Folidol) முதலிய வற்றை பூச்சி கொல்லிகளாக உபயோகிக்கிறுர்கள். அப்படி உபயோகிக்கும்போது அதில் உள்ள எச்சரிக்கை விதிகளை அனுசரித்து நடக்காவிட்டால் அம் மருந்துகளை கையாள் வோர் விஷத்தினுல் பாதிக்கப்படலாம்.

அப்படி பாதிக்கப்பட்ட நோயாளி உடனே முதற் சிகிச்சை எடுத்துக்கொண்டு, டாக்டரிடம் சென்று மருந்து பற்றிய முழு விபரத்தையும் தெரிவிக்கவேண்டும்.

விஷ மருந்து சுவாசத்தில் கலந்து உட்சென்றிருந்தால் பாதிக்கப்பட்டவர்களை உடனே காற்றேட்டமான இடத்திற்கு கொண்டு செல்லவேண்டும். உடம்பின் மேல்தோலின் மீது பட்டிருந்தால் அதிக அளவு இளஞ்சூடான தண்ணீ ரால் நன்ருக கழுவிவிடவேண்டும். விஷமருந்து கண்ணில் பட்டிருந்தாலும் அதிக அளவு தண்ணீரை கண்ணில் விட்டு கழுவிவிடவேண்டும்.

விஷ சத்து உட்சென்றிருந்தால் வாந்தி ஏற்படும்படி இளஞ்சூடான உப்பு தண்ணீர் கொடுத்தல் அல்லது கடுகை அரைத்து ஒரு டீஸ்பூன் தண்ணீரில் கலந்து கொடுத்தல், வாயினுள் விரலைவைத்து வாந்தியெடுக்கச் செய்தல், ஆகிய முறைகளை கையாண்டு வயிற்றில் உணவு பொருள்கள் இல்லாமல் காலி செய்யவேண்டும். வயிறு சுத்தமாக காலியானபிறகு பச்சைமுட்டை அல்லது பால் அல்லது அரைத்த மாவு முதலியவற்றை உட்கொள்ளச் செய்து எரிச்சல் முதலியவற்றைத் தடுக்கலாம்.

உட்கொண்ட விஷத்தின் பெயர், விவரம் முதலியன நிச்சயமாகத் தெரிந்தால் கீழ்க்கண்ட தடுப்பு முறைகளை கையாளுவதற்கு உதவியாக இருக்கும்.

மருந்தின் பெயர்.	மாற்று மருந்து.
அமிலம் (Acids)	எலுமிச்சம் பழச் சாறு, மில்க் ஆப் மெக்னிஷியா (Milk of Magnesia).
ஆர்செனிக் கட்டிகள் (Arsenic Compounds)	வயிற்றில் ஆகாரமில்லாமல் வாந்தியெடுக்கச் செய்து சுத்தப் படுத்திய பிறகு பச்சை முட்டை, எலுமிச்சம் பழச்சாறு, அரைத்த மாவுடன் தண்ணீர் ஆகியவற்றைக் கொடுக்கலாம்.
பி. எச். ஸி. (B.H.C.)	மேற்கூறியவாறு வயிற்றை சுத்தப் படுத்திய பிறகு சூடான காபி, டீ, இவற்றுடன் ஒரு அவுன்ஸ் எப்சம் உப்பும் சேர்த்துக் கொடுக்கலாம். டாக்டர்கள் மூலம் பினேபார்பிட்டால் (Phenobarbital) கொடுக்கலாம்.
குளோர்டேன் (Chlordine)	மேல் குறிப்பிட்ட முறை.
டி.டி.டீ. (D.D.T.)	மேல் குறிப்பிட்ட முறை.
மெர்குரி கட்டிகள் (Mercury Compound), அக்ர சான=(Mercury, Tolyacetate), செரசன்=Mercury, Phenylacetate).	நன்ருக வாந்தியெடுக்கச் செய்த பின்னர் பச்சை முட்டையைக் கொடுக்கலாம்.
நிக்கோட்டின் (Nicotine)	வாந்தியெடுக்கச் செய்த பின் 1/30 முதல் 1/60 அரிசி அளவுள்ள அட்ரோபின் சல்பேட்டை (Atropine sulphate) டாக்டர் மூலமாக ஒரு மணிக்கு ஒரு முறை நோயாளி கண் விழித்து பார்க்கிற வரை கொடுக்கவேண்டும்.
எலி பாஷாணம் (Zn-phosphide)	மருந்து உட் சென்றிருந்தால் உடனே டாக்டரிடம் கொண்டு செல்ல வேண்டும். வயிற்றை காலி செய்ய பொட்டாசியம் பெர்மாங்கனேட் திரவம் (1 : 1000), எனிமா முதலியன கொடுக்கலாம், அல்லது 2 காலன் தண்ணீரில் 60 அரிசி எடையுள்ள பொட்டாசியம் பர்மாங்கனெட்டுடன் பைகார்பனெட் சோடாவை சூடான தண்ணீர், பால் முதலிய வற்றுடன் கலந்தும் கொடுக்கலாம். முட்டையின் வெள்ளைக்கரு, ஆலிவ் எண்ணெய் முதலியனவும் கொடுக்க லாம்.
பாராதையான் (Parathion)	சோர்வு உண்டாகுதல், வாந்தி, குமட்டல், பேதி, தலைவலி, விழிபாப்பா சுருங்கி போதல், தலை சுற்றுதல், மார்புவலி, கடுமையான அரிப்பு, சதை பிடிப்பு முதலியன உண்டாகும். (a) மார்பின் (Morphine) கொடுக்கக் கூடாது. (b) மாற்று மருந்தாக அட்ரோபின் (Atropine) நோயாளியின் தன் மைக்கு தகுந்தவாறு 1/20 அரிசி எடை அளவு ஒவ்வொரு 15 நிமிடமும் டாக்டர் மூலமாக கொடுக்கப் பட வேண்டும். (c) நோயாளியை நல்ல காற்றேட்ட வசதியுள்ள இடத்தில் இருக்கச் செய்ய வேண்டும்.

மேற்கூறிய முறைகளை உடனுக்குடன் கடைப்பிடித்தால் மருந்தின் ஆபத்திலிருந்து நோயாளியை சுலபமாக காப்பாற்ற முடியும்.

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்
(No. C. 1206691/61—14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விதிதத்தில் உட்பட்டது)

குணங்கள் :—



1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்லில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினால் செய்யப் பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாது காப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூட்ஸ் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



விலை விவரம் :—

(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	290	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு — — —	280	ரூபாய்

செயலாளர்கள் :—

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :—

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

விவசாயச் செய்திக் கதிர்

(விரிவினைப் பிரிவு, விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோவை.)

விவசாயிகள், வரப்போகும் பயிர்ப் பருவத்தில் சாகுபடிக்காக நிலத்தை உழுது தயார் செய்யும்போது அடி உரமாக இடப்படும் கரிம உரங்களாகிய தொழு உரம், பசுந்தாளுரங்கள், கம்போஸ்ட் அல்லது குப்பை உரத்தைப் பற்றிய நினைவு நமக்கு வருகிறது.

பயிர்கள் வினையும் 'மண்ணின் உயிர்' என்று கருதப்படும் கரிமப்பொருள், குப்பை உரத்தில் அடங்கியிருக்கிறது. மண்ணிலுள்ள கரிமப்பொருள் காற்று, நீர் ஆகியவற்றுல் ஏற்படும் மண்ணரிப்பதைத் தடுக்கவும், மண்ணிலுள்ள நீரின் கிட்டும் தன்மையை அதிகரிக்கவும், மண்ணின் பௌதிக தன்மையை சாதகமுடையதாக அமைக்கவும், செடிகளின் வளர்ச்சிக்குத்தேவையான பயிர்ச் சத்துக்களை அளிக்கவும் உதவுகிறது. ஆகவே இத்தகைய இன்றியமையாத கரிமப் பொருளை அளிக்கும் குப்பை உரம் அல்லது கம்போஸ்டு உரத்தைத் தயாரிக்க உதவும், பண்ணையிலும் சுற்றுப்புறத்திலும் கிடைக்கும் குப்பைகளை வீணுக்காமல் சேகரிப்பது அவசியமாகிறது.

குப்பையில் தனம்.—வைக்கோல், பயிர்த்தட்டுகள், இலைகள், கரும்புத் தோகை, சக்கை போன்ற வீணுகும் தாவரப்பொருள்களையும், மற்ற குப்பைகளையும் பாக்டீரியாக்களினுல் மக்கவைத்துக் கிடைக்கும் பொருளே கம்போஸ்ட் எனப்படுகிறது. வஸ்துக்கள் அதிக ஈரமுள்ளதாகவோ அல்லது உலர்ந்ததாகவோ இருக்கக் கூடாது. மரத்தின் நிழலில் இருக்கும் உஷ்ணநிலை கம்போஸ்ட் தயாரிப்பதற்கு மிகவும் ஏற்றது. கம்போஸ்ட் தயாரிக்க 15 அடி நீளமும், 8 அடி அகலமும், 3 அடி ஆழமும் உள்ள குழி வெட்டவேண்டும். ஒரு குழியிலிருந்து சுமார் 5 டன் எரு கிடைக்கும். 1 சதவீதம் தழைச் சத்தும், 1 சதவீதம் மணிச்சத்தும் அடங்கியுள்ள கம்போஸ்ட் உரம் சிறந்தது என்று கருதப்படுகிறது.

பருத்திமார், கரும்புத் தோகை போன்ற சக்கை உள்ள பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கம்போஸ்டின் பயிர்ச் சத்தை அதிகரிக்க சாணி, சிறுநீர் அல்லது செயற்கை உரங்கள் போன்ற சத்துள்ள பொருள்களை உபயோகிக்கவேண்டும். கம்போஸ்டு தயாரிக்கும்போது குப்பை சத்துக்களுடன் கம்போஸ்டு குழியில் சூப்பர் பாஸ்பேட்டை இலேசாகத் தூவுவதன் மூலம் கிடைக்கும் உரத்தின் பயிர்ச் சத்து மதிப்பு அதிகரிக்கிறது.

சாதாரணமாக ஏக்கருக்கு 2–3 டன்கள் குப்பை உரம் இடலாம். குப்பை உரங்களைப் பயிற்சுழற்சியில் ஏதாவது ஒரு பயிர் சாகுபடிக்கு முன் அதிக அளவில் நிலத்தில் இடலாம். அவ்வாறு இடப்படும் உரத்தின் பலன் வெகு நாட்கள் வரை இருப்பதால் அப்பயிருக்குப்பின் சாகுபடி செய்யப்படும் பயிருக்கும் அவ்வுரத்தின் பலன் கிடைக்கிறது.

விவசாயிகளிடையே கம்போஸ்டு தயாரிக்கும் மனப்பான்மையை ஊக்குவிக்க தயாரிக்கப்படும் கம்போஸ்ட் குழி ஒன்றுக்கு ஆறு ரூபாய் உதவித் தொகை (Subsidy) யாக அளிக்கப்படுகிறது. இதில் பாதி குழி வெட்டியவுடனும் மறுபாதியை குழியை நிரப்பியவுடனும் தரப்படுகிறது.

சிறந்த மகசூல் பெற பொறுக்கு விதைகள்.—சிறந்த மகசூலுக்கு அடிப்படையான தேவை பொறுக்கு விதைகளே! தமிழ் நாட்டில் பலவகைப் பயிர்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பொறுக்கு விதைகள் மாநில விதைப் பண்ணைகள், கிராம விதைப்பண்ணைகள் ஆகியவற்றின் மூலம் பெருக்கப்பட்டு கிராம சகாயக்குகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

விதைப் பரிசோதனையும், விதைத் தரமும்.—பொறுக்கு விதைகள் தூய்மை, முளைக்கும் தன்மை, ஈரம், நோயின்மை (Health), உரம் (Vigour) பொருந்தியவைகளாக இருத்தல்வேண்டும். விதையின் தூய்மையை பரிசோதிப்பதினுல் அவ்விதையோடு மற்ற பயிரின் விதைகள், களைகளின் விதைகள், மற்ற தேவையற்ற வஸ்துக்கள் போன்றவை எவ்வளவு கலந்திருக்கின்றன என்று தெரிகிறது. கொடுக்கப்பட்ட விதையில் இவற்றின் அளவு சதவீதமாகக் குறிப்பிடப்படுகிறது. உதாரணமாக நெற்பயிருக்குத் தேவையான தாற்காலிக விதைத் தரம் பின்வருமாறு :—

1. மற்ற பயிர் விதைகள் 0·5%
2. தேவையற்ற வஸ்துக்கள் 0·2%
3. 1 ராத்தல் நெல் விதைக்குப் பத்து களை விதைகள்.

மேற்கூறிய அளவுக்கும் அதிகமான அளவு இருக்கும் நெல் விதையின் தரம் மிகச் சிறந்தது என்று கூற முடியாது. விதையின் ஈரம் அதிகமாக இருந்தால் விதைகள் பூஞ்சண நோயால் பீடிக்கப்பட்டு விதை முளைப்பு பாதிக்கப்படுகிறது. அநேக பயிர் விதைகளில் ஈரம் 13 முதல் 15 சதவீதம் வரை இருக்கும். விதையின் முளைக்கும் தன்மையும் முக்கியமானது. விதையின்

(59-ம் பக்கம் பார்க்கவும்)

வைகாசி—ஆனி மாத விவசாயக் குறிப்புகள்

நெல்

நாற்றங்கால் தயாரிப்பு.—முதன் முறை இரும்புக் கலப்பை யோட்டி பின் நாட்டுக் கலப்பையால் பலமுறைகள் உழுது நிலத்தை பண்படுத்தல்.

உரமிடுதல்—புழுதி நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 20 வண்டி தொழு உரம் ; சேற்று நாற்றங்காலுக்கு 8–10 வண்டி தொழு உரம்+10,000 ராத்தல் தழை உரம். விதைப்பதற்கு 15 நாட்களுக்கு முன் தழை உரம் போடவும். இவற்றிற்கு பதில் 15–20 வண்டி தொழு உரத்தை விதைப்பதற்கு 10 நாட்களுக்கு முன் போடவும்.

8′×55′ அளவுள்ள செண்ட் நாற்றங்கால்கள் தயாரித்து அவ்வப்பகுதிகளுக்குகந்த பொறுக்கு ரகங்கள் விதைக்கவும். ஒரு செண்டுக்கு சுமார் 3 ராத்தல் விதை தேவைப்படும். விதைக்கு முன் வித்தை உப்பு நீரிலிட்டு மிதக்கும் நெல்லை நீக்கி கீழ் படியும் விதையை உபயோகிக்கவும். (1½ காலன் தண்ணீருக்கு 3 பட்டணம் படி உப்பு) பின் விதையை நன்கு கழுவி உலர்த்தி அக்ரசான் மருந்திட்டுக் குலுக்கி விதைக்கவும்.

சிறந்த சம்பா நெல் ரகங்கள்.—ஜி. இ. பி. 24, கோ. 25, கோ. 5, ஏ.எஸ்.டி. 5, டி.கே.எம். 2.

இராமநாதபுரம்—ஏ. எஸ். டி. 4, ஏ. எஸ். டி. 5, எஸ். ஆர். 26 பி.

நடவின்பொழுது முதன் முறை ஏக்கருக்கு 75 ராத்தல் வீதம் சி. ஏ. என். உரமிட்டு 15 நாட்களுக்கொரு முறை ஊடுழவு செய்து களையெடுக்கவும்.

சம்பா பயிருக்கு பசுந்தாள் உரப்பயிர் விதைத்தல்.

சிறு தானிய பயறு வகைகள்

(சோளம், கம்பு, துவரை முதலியவற்றை வரிசையில் விதைக்கவும்.)

நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுக்கு ரகங்கள்.

சோளம்.—கோ. 19.
ராகி.—கோ. 2, கோ. 7.
கம்பு.—கோ. 3, எக்ஸ். 3.
வரகு.—கோ. 1.
உளுந்து.—212.
பாசிப்பயறு.—கோ. 1.
அவரை.—டி. எல். 231, டி. எல். 173.
துவரை.—எஸ். ஏ. 1.

முன்னதாக விதைத்த கம்பில் அதிகப்படியான செடிகளைக் களைந்து களை நீக்கவும். ராகி நாற்றங்கால் தயாரிப்புத் துவங்கலாம் ; இறைவை சோளம், ராகியை காலாகாலத்தில் அறுவடை செய்யவும்.

பருத்தி

மாசிப்பட்ட கம்போடியா பருத்தி.

தத்துப்பூச்சி, காய்ப்புழுக்கள் முதலியவற்றைக் கட்டுப்படுத்த 3-வது முறை பாலிடாலை தாமிர பூசண மருந்துடன் கலந்து அடிக்கவும். கடைசியாக ஒரு முறை களையெடுக்கவும். காய்ப்புக் காலத்திலும், காய் முதிரும் காலத்திலும் 5 முதல் 7 நாட்களுக்கொரு முறை அதிக அளவு நீர்ப்பாய்ச்சவும்.

நெல் அறுவடைக்குப்பின் வயல்களில் பயிரிடும் பருத்தி.

சுத்தமான முறையில் பருத்தி எடுக்கவேண்டும். நல்ல பருத்தியையும், மட்டமான பருத்தியையும் பிரித்துத் தனித்தனியே சேமித்து வைக்கவும்.

எண்ணெய் வித்துக்கள்

நிலக்கடலை.

இறைவை.—எச். எம். குண்டகா 2 என்ற கருவி உபயோகித்து கொடி ரகம் பிந்தி விதைத்த கொத்து ரகங்களை அறுவடை செய்யவும்.

தென் மாவட்டங்களுக்கு.—நிலம் தயாரித்தல், உரமிடுதல்.

மானவாரி.—நிலம் தயாரித்தல், உரமிடுதல்.

கோவை, சேலம், திருச்சி தொகுதி.—பிந்தி விதைத்த பயிரில் முதல் முறையும் முந்தி விதைத்த பயிரில் 2-வது முறையும் களையெடுத்தல் ; வரிசை விதைப்பில் தந்தி ஓட்டி களையெடுக்கவும்.

தென்னை

நல்ல மழைக்குப் பின் ஒவ்வொரு மாதத்திற்கும் 20 ராத்தல் சாம்பல் அல்லது 50–100 ராத்தல் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் அளிக்கவேண்டும். சணப்பு, குரோட்டலேரியா ஸ்ட்ரையேடா, கலப்பகோனியம், பில்லி பெசரா போன்ற பசுந்தாள் உரச்செடிகளைப் பயிரிடவும். மணற்பாங்கான நிலங்களிலோ அல்லது தோப்புகளிலேயே தழை உரச்செடிகளைப் பயிரிட வசதியில்லாத இடங்களிலும் விரைவில் தழைக்கும் கிளிரிசிடியா போன்ற செடிகளை தோப்பு ஓரங்களில் நடலாம்.

நோய்கள் வராது தடுக்க முன்னெச்சரிக்கையாக 1 சத போர்டோக் கலவை தெளிக்கவும்.

பழம் காய்கறி வகைகள்

ஆனி மாதக் குறிப்புகள்.

சித்திரையில் விதைக்கும் தழைப் பயிரை உழுது சேர்த்தல் ; திராட்சையில் தொடர்ந்து காவத்து செய்தல், எரு இட்டு, நீர்ப்பாய்ச்சி, போர்டோக் கலவை தெளித்தல். மற்ற பயிர்களுக்கும் எரு இடுதல். பாகல், புடலை, பூசணி முதலியவற்றிற்கு குழிகள் தயாரித்து நிரப்பி ஆறவைத்தல்.

ஆரூர் அழைக்கிறது
உணவு உற்பத்தியில் பங்கு கொள்ள!

(வை. முத்துராமலிங்கம், எழுத்தர், விவசாய இன்ஜினியர் அலுவலகம், திருவாரூர்.)

உழு தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள உழவர் பெருங்குடி மக்கட்கு துரித காலத்தில் உழவு செய்வதற்கான யானையை நிகர்த்த டிராக்டர்களும், உழவு கருவிகள், மருந்தடிக்கும் ஸ்ப்ரேயர்களும் வேண்டற்பாலது என்பது சொல்லாமற் விளங்கும். இந்தத் தேவையை உணர்ந்த அரசாங்கம் தஞ்சை மாவட்டத்தில் தீவிர சாகுபடித்திட்டம் அமுலாக்கி திருவாரூரில் உழவுக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடம் ஒன்றை நிறுவியுள்ளது.

இந்த தொழிற்கூடத்தின் முக்கிய வேலையாவன —

(அ) தஞ்சை ஜில்லாவுக்கு ஏற்ற முறையில் உழவுக் கருவிகளை சீரமைத்தல்.

(ஆ) உழவுக் கருவிகளுக்கான 'நிலச் சோதனை'யை மேற்பார்வையிடுதல்.

(இ) போதிய அளவு புதிய கருவிகளை உற்பத்தி செய்து அவற்றை இயக்கிக் காண்பித்து அவை உணவு உற்பத்திக்கு துணை செய்யும் அளவினை மதிப்பிடுதல்.

(ஈ) ஜீப், டிராக்டர் முதலிய வாகனங்களை சீரமைப்பு செய்தல்.

(உ) கிராமப்புற தொழிற் சிற்பிகளை, உழவுக்கருவிகளைத் தயார் செய்வதிலும் சீரமைப்பதிலும் பயிற்றுவித்தல்.

(ஊ) உழவுக் கருவிகளின் தேவையை உணர்ந்து அவற்றின் அபிவிருத்தியில் ஊக்கம் செலுத்துதல்.

(எ) தற்பொழுது பல்வேறு இடங்களிலிருந்து தேர்ச்சியுற்ற உழவுக்கருவிகள் உற்பத்தி செய்து வழங்கப்படுகின்றன. அவற்றை நிர்ணயம் செய்து வெவ்வேறு மண் வளத்திற்கு தகுதியுள்ளதாகச் செய்வது இந்த தொழிற்கூடத்தின் செயல்களில் ஒன்றாகும்.

களிமண்ணில் (Clayey Soil) சேறுழவு (Puddling) செய்வதற்குரிய கலப்பைகள், பர்மிய சட்டம் (Burmese Settun), இடை உழவுக் கருவிகள் (Intercultivator) இவற்றைப்பற்றி அறிந்து கொள்வதிலும், மழை காலத்தில் அறுவடைக்கு வருகிற குறுவை நெல்லை போரடி செய்து உலர்த்துவதிலுள்ள பிரச்னையைக் களைவதிலும் இந்த தொழிற்கூடம் கவனம் செலுத்துகிறது. இப் பிரச்னையைக் களையும் வண்ணம் தற்பொழுது புழக்கத்திலுள்ள கருவிகளை இந்த சூழ்நிலைக்கு ஏற்ப திருத்தி உருப்படுத்துதலும், நாட்டின் மற்ற பகுதியிலுள்ள சில கருவிகளை இந்த சூழ்நிலைக்கு ஏற்ப பொருத்துவதில் முயற்சி செய்வதும் இந்த தொழிற்கூடத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

மேலும் 26 டிராக்டர்களும் 26 டிரெயிலர்களும் இந்த தொழிற்கூடத்திலுள்ளன. இவை விவசாயிகளுக்கு உழவுக்கும், விதைகள், எரு, வைக்கோல் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கும் வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. மற்றும் கூட்டுறவு ஸ்தாபனங்களும் பஞ்சாயத்துகளும் விவசாய சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு இவற்றைப் பயன்படுத்தலாம்.

முன்னரே இங்கு இயங்கிக் கொண்டிருந்த டிராக்டர் ஒர்க்ஷாப் இந்த தொழிற்கூடத்தில் இணைக்கப்பட்டு தற்பொழுது இன்னும் சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

இத்தொழிற்கூடம் திருவாரூர், தஞ்சை–நாகை ரயில் பாதையும், மாயூரம்–காரைக்குடி பாதையும் சந்திக்குமிடத்திலுள்ளது.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் ஜூன் மாதத்தில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்

கிடைக்குமிடம். (1)	கையிருப்பு எண்ணிக்கை. (2)	ஒன்றின் விலை. ரூ.ந.பை. (3)
தென்னை நாற்றங்கால்—		
சோழவந்தான், மதுரை ஜில்லா.	8,000	0·65
விசுவாசபுரம், கன்யாகுமரி ஜில்லா.	6,000	0·65
குடியாத்தம், வட ஆற்காடு ஜில்லா.	20,000	0·65
கோயமுத்தூர், கோயமுத்தூர் ஜில்லா.	5,000	0·65
திண்டிவனம், தென் ஆற்காடு ஜில்லா.	5,753	0·65

— o —

பயிர் பூச்சிகளுக்கு...

போரில் தோல்வியே...



பாரீஸ் பூச்சி நாசினிக் கலவைகளின் மகோன்னத பூச்சிநாச சக்தியி னின்றும் பூச்சிகள் நழுவித் தப்புவது அசாத்யம். ஏனெனில் பாரீஸ் பூச்சி நாசினிகள் எல்லாவகைப் பயிர் பூச்சிகளையும் அடியோடு அழிப்பவையாகும்.

பென்ஸிக்ளோர்
டி. டி. டி
மலாதியான்
எண்ட்ரின்
ஆல்டிரின்

Parry's

பூச்சிநாசினி
கலவைகள்

மேலும் இதர, குறிப்பான விவரங்களுக்கு எழுதி விசாரிக்கவும் :

ஈ. ஐ. டி. பாரி லிமிடெட்.

(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

பெர்டிலைசர் இலாகா (I & F), டேர் ஹவுஸ், சென்னை-1

PZ-1304 TM

கோழிப் பராமரிப்பு

டாக்டர் ஏ. ஆர். மதுசூதன், ஜீ.எம்.வி.சி., கால்நடை நோய் ஆராய்ச்சி அலுவலர் (கோழியினம்), இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.

கோழி கிராமவாசிகளின் செல்வம். கோழி வளர்ப்பு மிக எளிது. குறைந்த செலவிலும், குறுகிய காலத்திலும் அதிகப் பொருள் சம்பாதிக்கலாம். மேலும், திட ஆரோக்கியத்துடனும் நோயற்ற வாழ்வும் வாழ கோழி முட்டையும் கோழி இறைச்சியும் அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலோருக்கு மிக அவசியம்.

கோழி அபிவிருத்திக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறையப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தப் பணத்தைக்கொண்டு கோழி அபிவிருத்திக் கேந்திரங்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்விதம் கிராம மக்களுக்குக் கொடுக்கும் கோழிகள் வியாதி இல்லாமல் இருக்கவும், அபிவிருத்தியடையவும் கோழிகளுக்கு ஏற்படும் வியாதிகளும் அவற்றைத் தடுக்கும் முறைகளையும் நன்றாக நம் கிராம மக்கள் தெரிந்திருப்பது மிகவும் அவசியம்.

கொக்கு நோய் அல்லது கோழிக் கழிச்சல் வியாதி (Ranikhet Disease).—இவ்வியாதியின் அறிகுறிகள்—உணவு உட்கொள்ளாமல் சோர்ந்திருத்தல், வாயிலிருந்து உமிழ்நீர் வடிதல், தாகம் அதிகரித்தல், கண்களை மூடியிருத்தல், சுவாசம் அதிகரித்தல், தலை முறுகி இருத்தல், வெள்ளைக் கழிச்சல் முதலியன.

இவ்வியாதி வராமலிருக்க கோழிக் குஞ்சுகளுக்கு வயது 4 வாரமானதும் 'ரானிகட் வாக்சீன்' என்ற தடுப்பு மருந்தை ஊசி மூலமாகப் போடவேண்டும். அப்படி ஊசி போட்ட கோழிக் குஞ்சுகளுக்கு ஆயுள் பரியந்தம் இவ்வியாதி வராது. ஆகவே, இவ்வியாதி வராமல் இருப்பதற்குக் கால்நடை முதல் உதவியாளர் மூலம் தடுப்பு ஊசி கண்டிப்பாகப் போடப்பட வேண்டும்.

அம்மை நோய் (Fowl Pox).—கோழிகளுக்கு அம்மை வியாதியும் வருகிறது. இது அநேகமாகக் குளிர்காலத்தில் காணப்படுகிறது. குஞ்சுகளுக்கு இவ்வியாதி காணப்பட்டால் அவைகள் பெரும்பாலும் இறந்து விடுகின்றன. பெரிய கோழிகள் இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டு மரணம் ஏற்படாவிட்டாலும் அவைகளுடைய உடல் நிலை அதிகமாகப் பாதிக்கப்பட்டு இதர கோழி நோய்கள் வருவதற்கு அனுகூலமாகும். இந்த நோய் வராமல் இருப்பதற்குக் கோழிக் குஞ்சுகள் ஒரு வாரம் ஆனதும் அவைகளுக்கு 'பிஜன் பாக்ஸ் வாக்சீன்' (Pigeon Pox Vaccine) என்னும் அம்மை மருந்தைப் போட்டுவிடவேண்டும். மற்றும் 3 வருஷங்களுக்கு அம்மை வராமல் இருப்பதற்கு மறுபடியும் மேற்படி அம்மை குத்திய குஞ்சுகளுக்கு வயது ஆறு வாரம் ஆனதும் 'ஃபவுல் பாக்ஸ் வாக்சீன்' (Fowl Pox Vaccine) என்னும் அம்மை மருந்தைப் போடவேண்டும். மேற்படி அம்மை ஊசிகள் கால்நடை முதல் உதவியாளரால் போடப்படும்.

மூக்குச் சளி தொத்து நோய் (Contagious Coryza).—சாதாரணமாகக் கோழிகளை வெகு நெருக்கமான இடங்களில் அடைப்பதால் இந்த வியாதி காணப்படுகிறது. வியாதி கண்ட கோழிகளுக்கு மூக்கில் துர் நாற்றமுள்ள சளி இருக்கும். இவைகள் நாளடைவில் முட்டையிடாமலும், தேகம் மெலிந்தும் இறந்துவிடும். இது ஒரு தொத்து நோய் ஆகையால் மாதம் ஒரு முறையாவது கோழிகளைப் பரிசோதனை செய்து இவ்வியாதி கண்ட கோழிகளை உடனடியாக அப்புறப்படுத்திக் கால்நடை முதல் உதவியாளரைக்கொண்டு தகுந்த சிகிச்சைகள் செய்துகொள்ளவேண்டும்.

இவ்வியாதி வராமல் தடுக்க கோழிக் குஞ்சுகளையும் கோழிகளையும் நெருக்கமான இடங்களிலும் அடைக்காமல் வசதியும் காற்றோட்டமுள்ள இடங்களிலும் அடைத்து வளர்க்கவேண்டும். நிறைய கீரையும், மீன் எண்ணெயும் கொடுக்கவேண்டும்.

இந்த வியாதி வராமலிருப்பதற்கு கோழிக் குஞ்சுகளுக்கும், கோழிகளுக்கும் கொடுக்கும் தீனியில் டெர்ராமைஸின் 5 (Terramycin 5) அல்லது ஆரோபாக் 2ஏ (Aurofac 2A) கலந்து கொடுக்கவேண்டும்.

ரத்தக் கழிச்சல் வியாதி (Coccidiosis).—சாதாரணமாக இரண்டு வாரத்திலிருந்து 6 வாரமுள்ள கோழிக் குஞ்சுகள் இந்த வியாதியால் பாதிக்கப்படும். அப்படிப் பாதிக்கப்பட்ட கோழிக் குஞ்சுகள் மிகவும் சோர்ந்து ரத்தக் கழிச்சல் ஏற்பட்டு பெரும்பாலும் இறந்து விடுகின்றன. இது காக்ஸீடியா (Coccidia) என்னும் கிருமியினால் ஏற்படும் வியாதி. கோழிக் குஞ்சுகளைப் பெரிய கோழிகளின் அருகாமையில் வளர்ப்பதினாலும் இவ்வியாதி காணப்படுகிறது. ஆகையால் கோழிக் குஞ்சுகளைத் தனியாக வளர்ப்பதோடுகூட அவைகள் எட்டு வாரம் வயது வரும் வரையில் பாட்டரி புரூடர்ஸ் (Battery Brooders) என்னும் கூண்டில் அடைத்து வளர்த்து வந்தால் இந்த வியாதி அவைகளுக்கு அநேகமாகக் காணப்படாது. அப்படி ஒரு வேளை இந்த வியாதி குஞ்சுகளுக்குச் சம்பவித்தால் உடனடியாக சல்பாமெஸதீன் (Sulpahamezathine) அல்லது எம்பாஸீன் (Embazin) அல்லது பைபுரான் மாத்திரைகளைத் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

[60-ம் பக்கம் பார்க்கவும்]

பூச்சி, பூசண நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி

தூவானம் செய்ய

இந்த எல்லா ஸ்ப்ரேயர்களும் மானியத் திட்டத்தின்கீழ் வழங்க, தமிழ்நாடு விவசாய இலாகா நெறியாளரால் 'ரேட் கான்ட்ராக்ட்' திட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்டவை. உங்கள் வட்டார விவசாய விளக்குனர் மூலமாகவோ, விவசாய வளர்ச்சி அதிகாரி மூலமாகவோ இந்த ஸ்ப்ரேயர்களை நீங்கள் பெறலாம்.



கேடார்

அசைப்பு ஸ்ப்ரேயர்

200 ராத்தல் அழுத்த சக்தியுடன் ஒரே மாதிரியாகத் தொடர்ந்து தூவானம் செய்யும்.



மூன்று விதங்களில் தூவானம் செய்யும் ஹை-ட்ரீ லான்சுடன்கூடிய கேட்டார் அசைப்பு ஸ்பிரேயர்

எல்லா மரங்களுக்கும், நிலக்கடலை, தோட்டப் பயிர்களுக்கும் உபயோகியுங்கள்.

கையாலும், சக்தியாலும் இயக்கும் இதர பல ஸ்ப்ரேயர்களும், டஸ்டர்களும் நாங்கள் தயாரிக்கிறோம்.



மாருத்

கையழுத்த ஸ்ப்ரேயர்

நாற்றங்காலிலும், விளைநிலப் பயிர்களிலும், பூச்சி, பூசண நோய்களைக் கட்டுப்படுத்தத் தகுந்தது.



அசைப்பு ஸ்ப்ரேயர்

கேடார்-கோ.:.பி

பாக்கு, தென்னை மரங்களுக்கு உபயோகியுங்கள்.

மற்ற விபரங்களுக்கு கீழே கண்ட விலாசங்களில் விசாரியுங்கள் :

தயாரிப்பாளர்கள்

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மலாடு, பம்பாய்-64.

போன் எண்கள் { 84221, 84245

தந்தி : கில்லோகஸ்ட் மலாடு.

ஏஜெண்டுகள் :

ரங்கஸ்வாமி அண்டு கோ.,

93, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு, பெங்களூர்-2, மைசூர் ராஜ்யம்.

தந்தி : ஹேரான்விட். போன் : 2971.

1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதக் கால நிலை அறிக்கை

(சி. பாலசுப்பிரமணியன், ம. வி. ஜெயராமன், சீ. ரங்கனுதன்.)

தமிழ் நாட்டில் முதன் இருபத்து ஒன்று நாட்களில் பொதுவாக வரட்சி நிலவியது. ஆனல் 7, 8 தேதிகளில் தமிழ்நாட்டின் தென் பகுதிகளில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 22 முதல் 26-ம் தேதி வரை ஐந்து நாட்களில் தமிழ்நாட்டில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. ஆனல் 24-ம் தேதியன்று தென் பாகங்களில் மட்டும் ஒரு சில இடங்களில் மழை பெய்தது. இம்மாதம் கடைசி இரு நாட்களில் பொதுவாக வரட்சி நிலவியது.

இம்மாதத்தில் முதல் ஐந்து நாட்களிலும், 11 முதல் 16-ம் தேதிவரை ஐந்து நாட்களிலும் தமிழ்நாட்டில் இரவு வெப்பநிலை சராசரிக்கு குறைந்திருந்தது. ஆனல் 14-ம் தேதியிலும் மற்ற நாட்களிலும் இரவு வெப்பம் சீராகவே இருந்தது. இம்மாதத்தில் குறிப்பிடத்தக்க மழை அளவுகள் இல்லை.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.—செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களில் மழை இல்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் பெய்த மிதமான மழையும் கார் நெல், ராகி நாற்றங்கால்களுக்கும், மற்றும் காய்கறிகளுக்கும் உகந்ததாய் இருந்தது. துவரை, உளுந்து, கொள் மற்றும் கரும்பு முதலிய பயிர்கள் நல்ல வளர்ச்சியை அடைந்து வருகின்றன. இம்மழையின் காரணமாக நிலக்கடலை அறுவடைக்கு வந்தது. தென்னுற்காடு மாவட்டத்தில் பருத்தி, நிலக்கடலை சோளம் முதலியன விதைப்பும் ராகி நாற்று நடவும் நடைபெறுகின்றது. எள் பயிரில் சாம்பல் நோயும், வாடல் நோயும் காணப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் பெய்த சிறிது மழையும் சம்பா, தாளடி பயிர்கள் அறுவடைக்கு உதவியது. நெற்பயிரை குருத்துப் பூச்சியும், கொள்ளை நோயும் தாக்கின. திருச்சி மாவட்டத்தில் இம்மாதம் நிலவிய வரட்சிநிலை நெல் அறுவடைக்கு உகந்ததாயிருந்தது. இராமனுதபுரம் மாவட்டத்தில் பொதுவாக வரட்சிநிலையே இருந்தது. திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதிகளில் சற்று அதிகமாக மழையிருந்தது. நெற் பயிரை நாவாய்ப் பூச்சிகள் தாக்கின. கன்னியாகுமரி மாவட்டத்திலும் சிறிது மழை அதிகம். மாமரத்தில் சாம்பல் நோயும், பூச்சிக்களும் மிகுதியாகக் கண்டன. நீலகிரி மாவட்டத்தில் சிறிது மழையிருந்தது. அதனுல் பூச்செடிகள் பெரிதும் பயனடைந்தன. இம்மாதம் முதல் வாரத்தில் கடுங்குளிரால் பூச்செடிகளும், புல்வெளிகளும் சேதமடைந்தன. குன்னூர் தாலுகாவில் பெய்த மழை உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிப்பயிர்களுக்கும், தோட்டக்கால் பயிர்களுக்கும் ஏற்றதாயிருந்தது. சேலம் மாவட்டத்தில் நிலவிய வரட்சி நிலை கொள், நெல் அறுவடைக்கு உதவியது. கோயமுத்தூர் மாவட்டத்தில் பொதுவாக வரட்சி நிலவியது. ஈரோடு தாலுகாவில் சோளம் விதைப்பும், சம்பா நெல் அறுவடையும் பருத்தியில் பறிப்பும் நடைபெறுகிறது. கீழ்பவானிப் பகுதிகளில் ராகி, பருத்தி, நெல், முதலியன நல்ல நிலையில் உள்ளன. பொள்ளாச்சி பகுதிகளில் சோளம் விதைப்பும் பல்லடம் பகுதியில் ராகி நடவும் நடைபெறுகிறது. நிலக்கடலை விதைப்புக்கு நிலங்கள் பண்படுத்தப்பட்டு வருகின்றன. உடுமலைப்பேட்டை பகுதிகளில் புகையிலை அறுவடைக்கு வந்துள்ளது. இதில் நல்ல மகசூல் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனைமலைப் பகுதிகளில் நெல் அறுவடை முடிந்துவிட்டது. எலிகளினுல் நெற்பயிருக்கு பெருத்த சேதம் ஏற்பட்டு மகசூல் குறைந்தது. எலிகளை ஒழிக்க எலிபாஷாணமும், கிட்டிகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இப்பகுதிகளில், பருத்தியில் சாம்பல் வண்டும், இலைப்பேனும், கத்திரியில் இலைப்பேனும், கடலையில் சுருள் பூச்சியும், மிளகாயில் பழம் அழுகல் நோயும், இலைப்பேனும் வெகுவாகக் காணப்பட்டன.

இம்மாதம் குறிப்பிடத்தக்க மழை அளவுகள் இல்லை. பிராந்திய மழை அளவுகள் பின் வருமாறு :—

பிராந்தியத்தின் பெயர்.	பிப்ரவரி மாத மழை அளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3) (அங்குலத்தில்)	(4)
வட பிராந்தியம்	இல்லை	—0·3	குறைவு.
கீழ்க்கரைப் பிராந்தியம்	இல்லை	—0·5	குறைவு.
மத்தியப் பிராந்தியம்	0·2	—0·3	குறைவு.
தென் பிராந்தியம்	0·6	—0·1	குறைவு.
மலைப் பிராந்தியம்	0·9	—0·2	குறைவு.

விளம்பரக் கட்டண விகிதங்கள்

	ஒரு முறை வெளியீட. ரூ.
உள் தாள்களில் (inside pages) முழுப் பக்கம்.	120
உள் தாள்களில் அரை பக்கம் ..	60
உள் தாள்களில் கால் பக்கம் ..	30
உறைத்தாள் (cover page) உள் பக்கம் முழுவதும்.	150
பின்புற உறைத்தாள் (back cover page) வெளிப் பக்கம் முழுவதும்.	200

1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதக் காலநிலை அறிக்கை.

இடத்தின் பெயர்.	பிப்ரவரி மாத மொத்த மழை அளவு.	சராசரியில் இருந்து மாறுபாடு.	1963-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் மொத்த மழை அளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம். (அங்குலத்தில்)			
சென்னை (மீனம்பாக்கம்)	இல்லை	—0·4	5·3
திருப்புகுப்பம்*	இல்லை	—0·1	3·5
வேலூர்	இல்லை	—0·3	2·1
குடியாத்தம்*	இல்லை	—0·2	1·5
கீழ்க்கரைப் பிராந்தியம்.			
பாலூர்*	இல்லை	—0·2	6·0
திண்டிவனம்*	இல்லை	—0·5	3 2
கடலூர்	இல்லை	—0 9	4 7
நாகப்பட்டிணம் ..	இல்லை	—0·8	7·4
ஆடுதுறை*	இல்லை	—0·3	6·2
பட்டுக்கோட்டை* ..	இல்லை	..	..
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	இல்லை	—0·3	1·4
கோயம்புத்தூர்* ..	0 2	இல்லை	0·7
கோயம்புத்தூர் ..	இல்லை	—0·4	0·6
திருச்சிராப்பள்ளி ..	இல்லை	—0 3	6·8
தென் பிராந்தியம்.			
மதுரை	இல்லை	—0·5	2 0
பாம்பன்	†	—0·8	6 7
கோவில்பட்டி*	0 1	—0 6	1 6
பாளையங்கோட்டை ..	0 2	—0·9	15·0
அம்பாசமுத்திரம்* ..	3 1	+1·4	18 0
நாகர்கோவில்*	இல்லை	..	0·5
கன்யாகுமரி*	1·0	+0·4	2·4
மலைப் பிராந்தியம்.			
கொடைக்கானல் ..	1·2	—0·4	9 3
கூனூர்*	2·3	—0·3	6·9
உதகமண்டலம்* ..	இல்லை	—0·5	2·6
நஞ்சநாடு*	†	—0 3	1·7

* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

† 0·04 அங்குல மழையைக் குறிக்கிறது.

(52-ம் பக்கத் தொடர்ச்சி)

முளைக்கும் தன்மை சதவீதத்தில் குறிப்பிடப்படுகிறது. முக்கியமான பயிர் விதைகளுக்குத் தேவையான முளைக்கும் தன்மை பின்வருமாறு—

நெல்	95%
சோளம், மற்றும் பிற சிறு தானியங்கள், நிலக்கடலை.	90%
பில்லி பெசரா, கொள்ளு	85%
பருத்தி	80—85%
பயறு வகைகள், புகையிலை, வெண்டை, கத்தரி. ..	80%

விதைகள் பூஞ்சாணம், பாக்டீரியா, வைரஸ் போன்ற வைகளால் பீடிக்கப்படாமல் இருக்கவேண்டும். அத்தகைய விதைகளை விதைப்பதற்கு உபயோகித்தால் அவ்விதைகளைப் பிடித்துள்ள வியாதி வளரும் பயிருக்கும் பரவி பயிர் பாதிக்கப்படுகிறது. ஆகவே விதைகளை விதைப்பதற்கு முன் பூசண மருந்துகளுடன் கலக்கிப் பின் விதைக்கவேண்டும்.

ஆகவே விவசாயிகளே, நிறைந்த மகசூல் பெற சிறந்த வித்துக்கள் தேவை என்பதை நினைவிலிருத்துங்கள்.

கோ-6 சத்து மிக்க வெள்ளை ராகி—இந்த ராகியின் உணவு மதிப்பு (Food Value) மூப்பு ராகியின் உணவு மதிப்பை விட அதிகம். இதில் 6·5 Microgram 'B' வைட்டமின் சத்து அடங்கியிருக்கிறது. ஆனால் சாதாரணமாகச் சாகுபடி செய்யப்படும் பழுப்பு ராகியில் வைட்டமின் சத்து 3 5 Microgram தான் அடங்கியிருக்கிறது. இதன் புரதச் சத்து 10—12 சதவீதம். பழுப்பு ராகியில் அடங்கியுள்ள புரதச் சத்து 7 சதவீதம். இவ்வெள்ளை ராகியிலிருந்து தயாரிக்கப்படும் கூழ் மிகவும் சத்து மிக்கது. குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் மிகவும் சிறந்தது.

கத்தரிக்காய் துளைக்கும் புழு தாக்குதலை எதிர்க்கும் கத்தரி வகைகள்.—கத்தரிக்காய் துளைக்கும் புழுவின் தாக்குதலை எதிர்க்கும் தன்மையுள்ள ரகங்களைக் கண்டு பிடிப்பதற்காக விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலிருந்து கோயம் புத்தூர், H-158, H-128, H-129 ஆகிய ரகங்கள் சிறந்தவை என்று தெரிகிறது. இவற்றில் கோயம்பத்தூர் H-158 ரகத்தில் இப்புழுக்களின் தாக்குதல் குறைவாகவும், கோயம்பத்தூர், H-128 H-129 ஆகிய இரு ரகங்களிலும் தாக்கப்படாத காய்களின் மகசூல் அதிகமாயும் இருந்தது.

கோவை, சேலம், வடஆற்காடு, தென்ஆற்காடு, திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில் வளர்ச்சி திட்டம் அரசாங்க உத்திரவு (எண் 1048—தேதி 23-3-63).

உணவு சேமிப்பு இருப்பை அதிகரிக்க எண்ணி நெல், சோளம், ராகி, பருத்தி, எண்ணெய் வித்துக்கள் முதலி வற்றின் அபிவிருத்திக்கு தீவிர சாகுபடித் திட்டத்தையொத்ததொரு புதிய திட்டம் கோவை, சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி, திருநெல் வேலி முதலிய 6 மாவட்டங்களில் ஒரு வருடத்திற்குச் செயல்படுத்தப்படும். இதன்படி விதையும், இரசாயன உரமும் சலுகை விலையில் வழங்கப்படும். இதற்கென புதிதாக 5 மாவட்ட விவசாய அலுவலர்கள் நியமிக்கப் படுவர்.

நெல்.—கோவை, வடஆற்காடு, தென்ஆற்காடு, திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில் 12·03 லட்சம் ஏக்கரில் இரசாயன உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு முறை களைக் கையாளுதல் முதலிய நடவடிக்கைகளை மேற் கொள்வதன் மூலம் தீவிர நெல் சாகுபடி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதிகப்படியாக 10,714 மெட்ரிக் டன் அமோனியம் சல்பேட் கிடைக்கவும் வசதி செய்யப் படும்.

சோளம்.—கோவை மாவட்டத்தில் 31,000 ஏக்கரில் தீவிர சோளப் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படும். இதன் பொருட்டு வித்துடன் கந்தகம் கலந்து விதைக்க ரூ. 930 பெருமானமுள்ள கந்தகம் இனமாக வழங்கப் படும். சிறந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப் படும். இருபத்தைந்து சத சலுகை விலையில் ரூ. 1,71,000 பெருமானமுள்ள இரசாயனக் கலப்பு உரங்கள் வழங்கப் படும். இரசாயன உர சம்பந்தமான செயல் விளக்கங்கள் நடத்த ரூ. 1,550 ஒதுக்கப்படும்.

ராகி.—கோவை, வடஆற்காடு, தென்ஆற்காடு, சேலம் மாவட்டங்களில் 1·37 லட்சம் ஏக்கரில் இறைவை ராகி சாகுபடியில் அதிக கவனம் செலுத்தப்படும். சிறந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படும். இருபத்தைந்து சத சலுகை விலையில் இரசாயன கலப்பு உரங்கள் வழங்கப்படும். ஒரு ஏக்கர் ராகி நடுவதற்குத் தேவையான நாற்றங்கால் ஒவ்வொன்றுக்கும் 1 கிலோ சி.ஏ.என். இனமாகக் கொடுக்கப்படும். இரசாயன உர சம்பந்தமான செயல் விளக்கங்கள் நடத்த வழிவகை செய்யப்படும்.

பருத்தி.—கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட பருத்தி சாகுபடி நிலத் தொகுதிகளில் 65,000 ஏக்கரில் தீவிர பருத்தி சாகுபடி செய்யப்படும். இருபது சத சலுகை விலையில் வித்து வழங்கப்படும். சிறந்த பயிர்பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படும். அதிக அளவில் இரசாயன உரங்கள் உபயோகிக்க வசதி செய்யப் படும். இரசாயன உர சம்பந்தமான செயல் விளக்கங்கள் நடத்தப்படும்.

எண்ணெய் வித்துக்கள்.—தென் ஆற்காடு, கோவை மாவட்டங்களில் 1·25 லட்சம் ஏக்கர் எண்ணெய் வித்துப் பயிர் சாகுபடியில் அதிக கவனம் செலுத்தப்படும். பொறுக்கு வித்துக்கள் விநியோகிக்கவும், (ஸ்டாண்டர்டு) இரசாயன உரக் கலவைகள் வழங்கவும், இரசாயன உர சம்பந்தமான செயல் விளக்கங்கள் வழங்கவும் வழி வகைகள் செய்யப்படும்.

தீவிர சாகுபடி திட்டத்தின்கீழ் அதிகப்படியான நிலங் களைக் கொண்டு வருதல்.—அதிக அளவு உரம், பூச்சி மருந்துகள் கிடைக்க வசதி செய்து தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் உள்ள நிலப்பரப்பை 5·47 லட்சம் ஏக்கரி லிருந்து 6·95 லட்சம் ஏக்கராக அதிகரிக்கப்படும்.

(56-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வியாதி கோழிக் குஞ்சுகளுக்கு வராமலிருப் பதற்கு பைபுரான் சபளிமெண்ட் (Bifurân Supplement) என்னும் மருந்தைத் தீனியில் ஒரு டன் தீனிக்கு முக்கால் பவுண்டு வீதம் கலந்து கோழிக் குஞ்சு களுக்குப் பிறந்த நாளிலிருந்து 8 வாரம் வரையில் கொடுக்கவேண்டும்.

கோழிகள் நாக்குப் பூச்சியினாலும், நாடாப் பூச்சியி னாலும் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் அப்படி பாதிக்கப் படும் கோழிகள் முட்டை இடாமல் அதிக பலவீனப்பட்டு இதரக் கோழி நோய்கள் காண்பதற்கு அனுகூலமாகிறது. இவ்வாறு பாதிக்கப்படும் கோழிகளுக்கும் மற்றும் கோழிப் பேன்களாலும் உண்ணிகளாலும் பாதிக்கப்படும் கோழிகளுக்கும் கால்நடை முதல் உதவியாளரைக் கொண்டு தகுந்த சிகிச்சை செய்யப்படவேண்டும்.

மேற்கண்ட முறைகளை அனுசரித்தால் கோழிகள் வியாதி யில்லாமல் இருப்பதோடு அதிகமான முட்டைகள் கொடுப் பதற்குச் சந்தர்ப்பம் நேரிடும்.

ஆல் இந்தியா ரேடியோ - திருச்சிராப்பள்ளி.

ஜூன் மாதத்திய கிராம நிகழ்ச்சிகள் :

சனி (1—6—63)

சுகவழி.

முதியோர் கல்விக்கூடம், திருக்குறள் விளக்கம்.

நம் மாதர் மன்றம்.

1. நமது பங்கு.
2. நல்ல சமையல்—உரையாடல்.
3. சத்யநெறி.
4. நாட்டுப்பாடல்—பயிற்சி.

ஞாயிறு (2—6—63)

கிராம சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

கிராமம் போவோமே—செய்திச் சித்திரம்.

திங்கள் (3—6—63)

ஆகாசவாணி ஒலிப்பதிவு பாடல்கள்.

விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.

பொன்னம்பலம்—இசைச்சித்திரம் (என். ராகவன் எழுதியது.)

செவ்வாய் (4—6—63)

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்—

கேள்வியும் பதிலும்

சம்பா சாகுபடி பற்றிய குறிப்புகள்.

புதன் (5—6—63)

இனி விசனமில்லை.

காய்கறி பதனம்.

நாட்டுப் பாடல்கள்.

திட்டமிட்ட குடும்பம்.

வியாழன் (6—6—63)

யாதுமாகி.

நமது திட்டம்.

தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் : உரையாடல்.

மெல்லிசை.

செய்தி விமர்சனம்.

வெள்ளி (7—6—63)

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்—

கேள்வியும் பதிலும்.

நம் ஜவான்களின் நன்மைக்காக.

சனி (8—6—63)

எதுபோன முகம்.

முதியோர் கல்விக் கூடம்—பாரதத்தின் வரலாறு.

நம் மாதர் மன்றம்

1. நமது பங்கு.
2. ஆப்பக்கார அங்காயி : தொடர் சித்திரம். —(என். வாசுதேவ் எழுதியது)
3. சத்ய நெறி.
4. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (9—6—63)

கிராம சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

நம் நாட்டு விவசாயி.

கிராமியக்கலை.

திங்கள் (10—6—63)

ஆகாசவாணி ஒலிப்பதிவு பாடல்கள்.

விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.

பட்டாளம் பரமானந்தம் : நாடகம் எஸ். பூமிநாதன் எழுதியது.

செவ்வாய் (11—6—63)

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்—

கேள்வியும் பதிலும்.

கோழியைத் தாக்கும் ராணிகட் நோய்.

புதன் (12—6—63)

காணி நிலம்

கேள்வி நேரம்—உரையாடல்.

நாட்டு பாடல்கள்.

சண்டைக் கோழி : நாடகம். (என். ராகவன் எழுதியது.)

வியாழன் (13—6—63)

பொங்குக, பொங்குக.

நமது திட்டம்.

சென்னை ராஜ்யத்தில் வன மஹோத்சவம்.

மெல்லிசை.

செய்தி விமர்சனம்.

வெள்ளி (14—6—63)

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்—

கேள்வியும் பதிலும்.

விபத்துக்களும் முதலுதவியும் : நீர் விபத்து.

சனி (15—6—63)

பாதமுடன்.

முதியோர் கல்விக்கூடம்.

திருக்குறள் விளக்கம்.

நம் மாதர் மன்றம்.

நமது பங்கு.

ஆப்பக்கார அங்காயி : தொடர் நிகழ்ச்சி —(என். வாசுதேவன் எழுதியது).

ஞாயிறு (16—6—63)

கிராம சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

கிராம சாவடி

சிரமதானம் : வழக்கு விசாரணை.

திங்கள் (17—6—63)

ஆகாசவாணி ஒலிப்பதிவு பாடல்கள்.

விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.

சக்தி வேலு சந்தேகப்புலி.
(எஸ். எம். அப்துல் காதர் எழுதியது.)

செவ்வாய் (18—6—63)

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்—
கேள்வியும் பதிலும்.
மிளகாய் சாகுபடி.

புதன் (19—6—63)

அமைதி நிலவுது.

பல் : பாதுகாப்பு.

நாட்டுப் பாடல்கள்.

கிராம பொது நல சங்கம்.

வியாழன் (20—6—63)

வளம் தாரும்.

நமது திட்டம்.

நதி பள்ளத்தாக்குத் திட்டங்கள்—உரையாடல்.

மெல்லிசை.

செய்தி விமர்சனம்.

வெள்ளி (21—6—63)

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்—
கேள்வியும் பதிலும்.
தீவிர சாகுபடித் திட்டத்தினால் விவசாய முன்னேற்றம்.

சனி (22—6—63)

அன்பே அறுமறுந்தேனும்.

முதியோர் கல்விக்கூடம்.

சங்க இலக்கிய விளக்கம்.

நம் மாதர் மன்றம்.
1. நமது பங்கு.
2. சிக்கனம் அவஸ்யம் : உரையாடல்.
3. சத்ய நெறி.
4. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (23—6—63)

விசேஷ நாடக நிகழ்ச்சி.

திங்கள் (24—6—63)

ஆகாசவாணி ஒலிப்பதிவு பாடல்கள்.

விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.

வளரும் தமிழகம் (மதராஸ்)

செவ்வாய் (25—6—63)

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்—
கேள்வியும் பதிலும்.
கூட்டுறவு பண்ணையின் ஏற்றம்.

புதன் (26—6—63)

தீராத விளையாட்டுப்பிள்ளை.

ஆராய்ச்சிக் கூடம்.

செய்தி தொழில்.

நாட்டுப் பாடல்கள்.

வியாழன் (27—6—63)

தெய்வத் திருவருள்.

நமது திட்டம்.

பஞ்சாயத்தும் விவசாய முன்னேற்றமும்—உரையாடல்.

மெல்லிசை.

செய்தி விமர்சனம்.

வெள்ளி (28—6—63)

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்—
கேள்வியும் பதிலும்.
கிராமத்து குடிநீர்.

சனி (29—6—63)

தீண்டாமை.

முதியோர் கல்விக் கூடம்—திருக்குறள் விளக்கம்.

நம் மாதர் மன்றம்.
1. நமது பங்கு.
2. சிறு தொழில்.
3. சத்ய நெறி.
4. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (30—6—63)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

ஒன்றே குலம்.

நிகழ்ச்சி நிரல்.

கிருஸ்துவ இளம் மாதர் சங்கம் ஏற்பாடு செய்த அழகிய காய்கறி கண்காட்சியும் போட்டியும்



கவர்னர், மேரி ராணி கல்லூரி மனையியல் பிரிவைப் பார்வையிடல்

கண்காட்சியில் திருமதி. எம். ஜே. டேவிட் வைத்திருந்த 'காராமணிப் பயிரை கவர்னர் பாராட்டுதல்

விழாவில் நடனமாடிய கலாக்ஷேத்திர மாணிவிகள்



பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாஸ்டர் சந்திரன்

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963

ஈரான்
தேசத்து
முன்னாள்
விவசாய
அமைச்சரும்,
மாகாண
கவர்னருமான
திரு. இப்ராஹிம்
மாதவி
தமிழ்நாடு
விவசாய
முன்னேற்றங்களை
பார்வையிடுதல்



தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாய இலாகா தலைவரால் வெளியிடப்பட்டது.